15

44006

# ஊழ்கடந்த மாவீரர்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 APR. 951
MADRAS

...திப்புக் கழகம்
...க் தெரு சென்னை.
T.P.H.

V2'D5
N50
108193

# ஊழ்கடந்த மாவீரர்

இது

பேரறிஞர். ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர்
எம். ஏ. (ஆக்ஸன்), ஐ. ஸி. எஸ்., எப். ஆர். எஸ்., பார்-அட்-லா

அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில நூலைத் தழுவி

அறிஞர். கா அப்பாத்துரைப் பிள்ளை எம். ஏ., எல். டி.
(விசாரத்), அவர்களால்

தமிழாக்கம் செய்யப்பட்டது

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு :: சென்னை 1

பதிப்புரிமை] 1950 [ரூ. 1

First Published: *May 1950.*

THE PROGRESSIVE PRINTERS
:: G. T., MADRAS ::

# தமிழாக்க முன்னுரை

புனை கதை உலகில் இந்திய மொழிகள் இப்போதுதான் புகுந்து நகின்றன. வரலாற்றுப் புனை கதையிலும் அப்படியே. பிந்திய கையில் முன்னேற்றம் மிகக்குறைவாகவே இருக்கமுடியும். ஏனெ ல் நாட்டுமக்கள் நாட்டு மொழிகளின் வரலாற்றிலும்,ஆராய்ச்சியி ம் இன்னும் மிகுதியாக முயலவில்லை. இங்கிலேயில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாயினும் தலைசிறந்த ஒரு தமிழக அறிஞராலேயே இயற்றப்பட்ட இந்நூலின் தழுவல் மொழிபெயர்ப்புச் சுருக்கம் பொது மக்கட்கும், மாணவர்கட்கும் பெரிதும் பயன்படுவதாகும். 400 பக்கங்களுக்குமேற் பரந்துசெல்லும் முதனூல் தமிழகத்துப் பொதுமக்கள் தேவைக்கும், மாணவர் தேவைக்கும், ஏற்பச் சுருக் கப்பட்டதுடன் நாட்டு மக்கள் பின்னணிச் சூழலுக்கேற்ற முறை யில் முதனூற் பொருள் தழுவி எழுதப்பெற்றுள்ளது.

மூலநூலாசிரியர் அறிவாராய்ச்சி நிறைந்த முன்னுரை இந் நூலை வரலாற்றுக் கண்கொண்டு பார்ப்பவர்க்குப் பயன்படுவது கருதியும், பண்டைத் தமிழக வடநாட்டுறவை விளக்குதல் கருதியும் சுருக்காது முழுமையும் மொழிபெயர்த்துத் தந்துள்ளேன்.

இதுபோன்ற நல்லறிஞர் அறிவு நூல் ஏடுகளின் மொழி பெயர்ப்புக்குத் தமிழுலகம் ஆதரவு தருமென நம்புகிறேன்.

சென்னை,
24 மார்ச், 1950.

கா. அப்பாதுரை.

# முதனூலாசிரியர் முன்னுரை

எனது வரலாற்றுப் புனைகதையாகிய 'பாலாதித்திய'னுக்கு இலக்கியக் கருத்துரையாளரும், பத்திரிகைகளும், பொது மக்களும் அளித்த நல்வரவேற்பும், பல்வேறு இந்திய மொழிகளில் அதனை மொழிபெயர்க்க முனைந்தோரின் நல்லார்வமுமே இந்தியாவின் வரலாற்றில் அதனினினும் கவர்ச்சிமிக்க ஒரு காலப் பகுதி பற்றிய இப்புனை கதையை எழுத எனக்கு ஊக்கமளித்தது. மக்கள் உள்ளங்களில் கீழ் நாட்டுப் பண்புகளும், மேனாட்டுப் பண்புகளும் ஒருங்கு கூடி அரசியல், கலை, சமயத் துறைகளில் புதுக்கருத் தார்வம் தூண்டிவரும் இந்த நாளில், அந்நாட்களில் ஐரோப்பாவின் மாபெரு நாடாகவும், முதன்மை வாய்ந்த நாகரிக நாடாகவும் இருந்த கிரேக்க நாட்டு மக்களுடன் இந்தியாவின் படைவலிமை முதன்முதலாக மோதிக்கொண்ட கால நிலைகளைப் பற்றிச் சித்திரித்தல் மிகவும் பொருத்தமானதாகும். நூல் முன்னணிப் பக்கத்தில் காட்டப் பெற்றுள்ள 'சாஞ்சித் தூபியிலுள்ள' படம் கி. மு. 303-ல் சந்திரகுப்தனுக்கும் ஸெலியூக்கஸுக்கும் இடையே நடைபெற்ற ஒப்பந்தத்தின் பின் அவர்கள் கொண்ட நட்பைக் குறிப்பதாகும் என்று நான் கொள்கிறேன். அப்படம் இதனைத் தெளியக் காட்டும். சந்திரகுப்தன் கையிலிருப்பதாக அங்கே காட்டப்படும் இந்தியத் தாமரையும், ஸெலியூக்கஸின் கையிலிருப்பதாகக் காட்டப்படும் கொடி முந்திரிப்பழக் குலையும் அதில் சரி நிகராகக் கலப்புறக் காண்கிறோம். ஆனால் இரு வீரர்களும் இதற்கேற்பச் சிங்க ஏறுகளின் மீதே அமர்ந்திருக்கின்றனர். இன்றும் அதுபோல பிரிட்டானிய சிங்கத்தின் மீது அமர்ந்த ஆங்கிலேயன், யானை மீதமர்ந்த இந்தியன் ஆகிய இருவர் (படங்களின்) மூலம் இந்தியாவின் தாமரையும் ஐரோப்பாவின் கொடி முந்திரிப் பழக்குலையும் மீண்டும் இணையும் என்று கற்பனை செய்வது மிகையாகாதன்றோ?

இந்தியாவின் மீது அலெக்ஸாண்டர் படையெடுத்தது பற்றி நமக்கு ஏராளமான விவரங்கள் கிடைத்துள்ளன—ஆனால் அவை யாவுமே கிரேக்கர் தரப்பிலிருந்து மட்டும்தான். எந்த இந்திய ஏடும்—இந்து ஏடோ, புத்த ஏடோ, சமண ஏடோ எதுவுமே—அது பற்றிக் குறிப்பிடாதது ஒரு புதிரே யென்னலாம். அதன் பயனாக,

அவர் செயல்கள்பற்றிய இந்தியர் கருத்துரைகள் எதுவுமே நமக்குக் கிட்டவில்லை. சந்திரகுப்தனைப் பற்றியோவெனில் கிரேக்க, இலத்தீன ஆசிரியர்கள் மூலமாக நமக்கு மிகமிகச் சுருங்கிய அளவில் சில செய்திகள் கிடைத்துள்ளன. இவை தவிர இந்து, புத்த, சமண கற்பனைப் பழங் கதைகளில் பல நம்பத்தகாத முரண் பாடுகளும், ஒருதலைச்சார்பும், கற்பனை விசித்திரங்களும் நிறைந்த விரிவுரைகள் உள்ளன. இறுதியாக, அவர் வாழ்க்கை யின் ஒரு பகுதியைச் சித்திரிக்கும் 'முத்ரா ராக்ஷஸம்' என்ற ஒரு நாடகமும் நமக்குக் கிட்டியுள்ளது. இந்நாடகத்தில் காதற்கதை நிகழ்ச்சி எதுவும் இல்லாதிருந்தும்கூட அதன் கதை முற்றிலும் உள்ளத்தை ஈர்த்துக்கொள்வதாகவே உள்ளது. அத்துடன் அது தொடர்பறுத மரபுரைச் செய்திகளை யடிப்படியாகக் கொண்ட தாகவும் தோற்றுகிறது. எனினும், அது மௌரியர் வீழ்ச்சிக்குப் பல நூற்றுண்டுகளுக்குப் பிற்பட்டதாகவும், வரலாற்றுச் செய்திகள் வகையில் முற்றிலும் நம்பத்தகாததாகவுமே உள்ளது. அதில், சந்திரகுப்தன் முற்றிலும் சிறுமைப்பட்டுச் சாணக்கியனின் ஒரு நிழலாகமட்டுமே தீட்டப்பட்டுமிருக்கிருன்.

## இந்தியப் பழங்கதைகள்

சந்திரகுப்தன், சாணக்கியன் ஆகியவர்களைப் பற்றிய இந்து, புத்த, சமணப் பழங்கதைகள், மேற் குறிப்பிட்ட நாடகத்தைவிடப் பழமையானவையே. அவை, தெள்ளத் தெளியப் புனைந்துரை களாகவே தென்படினும், அவற்றின் உயர்வு நவிற்சிகளைத் தட்டிக் கழித்து அவற்றின் வரம்பற்ற கூற்றுக்களிலிருந்து இந்திய மக்க ளால் சிறிது பொருள் காணமுடியாதென்பதில்லை. எடுத்துக் காட்டாக மௌரியனுக்கு நூறு பிள்ளைகள் உண்டு என்ற கூற்றை எடுத்துக்கொண்டால், பிள்ளைகள் என்று இங்குக் கூறும்போது அவர்கள் அவனைப் பின்தொடர்ந்த நூறு குலப் பெருமக்களையே குறித்தனர் என்று கொள்ளலாகும். ஸ்காட்லந்தில் முன்கால மேட்டு நிலத்தலைவரும், இராஜபுத்திர மன்னரும், இந்துக்களின் சாதித் தலைவர்களும், தத்தம் உழையரைப் புதல்வராகவே கருதினர் என்று அறிகிருேம். இன்னும் மலையாள, கன்னட நாட்டுத் தலைமக்கள் தம் குடி, படைகளை அழைக்கையில் 'மக்களே' என்று கூறுவது இதனை வலியுறுத்தும். (மேனுட்டு) " நண்பர் சங்கத்தார்

வழக்கிலுள்ள 'உடன் பிறப்பாளர்' (Brother) என்ற தொடரை இது நினைவூட்ட வல்லது. இதுபோலவே பழங்கதையில் "சந்திர குப்தன் மௌரியன் புதல்வன்" என்றே குறிக்கப்படினும் அது பெயரனையே குறித்ததாகலாம். சொத்துரிமைச் சட்டத்தில், இன்றும் 'மக்கள்' என்பது மகனை மட்டுமேயன்றி மகன் பிள்ளையையும், மகன் பிள்ளையின் பிள்ளையையும் குறிக்கக்கூடும். எனக்குக் கிடைத்துள்ள ஏட்டு மூலங்களைத் துருவி யறிந்த அளவில், நந்தர்களிடையே மதிப்புக்குரிய பழய நந்தர் மரபைச்சார்ந்த மகாநந்தியின் வழியிலேயே சந்திரகுப்தன் தோன்றியிருக்கக்கூடும் என்றும், தனக்கு முன்னிருந்த பிற்றை நந்தர்களான நவநந்தர்களை புது நந்தர்களைவிட அவன் உயர்குலப் பிறப்புடையவனாகவே இருந்திருக்கக் கூடும் என்றும் நான் கருதுவதற்குப் பெரிதும் இடமிருந்தது.

## சாணக்கியனும் சந்திரகுப்தனும்

இந்து, புத்த, சமண ஏடுகள் எல்லாவற்றிலுமே சாணக்கியனுக்கே எல்லா மதிப்பும் தரப்பட்டுச் சந்திரகுப்தன் பெரிதும் புறக்கணிக்கப்பட்டுள்ளான் என்பது உண்மையே. ஆயினும், இவ்விருவரும் ஒப்பான சரியிணை உயர்சோடிகளாகவே இருந்திருக்க வேண்டும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. ஒரு 'வார்விக்'கும் (Warwick the king-maker) ஒரு 'பிஸ்மார்க்'கும் இணைந்த இணைப்பே சாணக்கியன் என்றும், ஒரு 'வில்ஹெல்ம் முதலாமவ'னும் (Wilhelm I) ஒரு 'மோல்ட்கெ' (Moltke)யும் இணைந்த இணைப்பே சந்திரகுப்தனென்றும் குறிக்கத்தகும். இவ்வகையில் கிரேக்க, உரோமக் குறிப்புரைகள் வழக்கம்போலவே நமக்கு இன்றியமையாத வரலாற்றுத் திருத்தம் தருபவையாயுள்ளன. ஏனெனில், அவர்கள் இந்தியாவை வென்றடக்கி, ஆண்ட செயல் முழுவதையும் முற்றிலும் சந்திரகுப்தன் செயலாகமட்டுமே குறிக்கின்றன; சாணக்கியனைப் பற்றி அவை எதுவுமே கூறவில்லை!

### சந்திரகுப்தன் தோற்றம்

ஜஸ்டின் கூறுவது காண்க:—"அலெக்ஸாண்டர் இறந்ததன்பின் இந்தியா, தன் அடிமைத்தளையை ஒழித்ததுடன் அவருடைய ஆட்சித் தலைவர்களையும் கொன்று தீர்த்தது. இவ்விடுதலைப் போரின்

தலைவன் சந்திரகுப்தன் (Sandrocottus). ஆனால், இவ்வெற்றியின் பின் 'விடுதலை வீரன்' என்ற இப்புகழுக்கான எல்லா உரிமையையும் அவன் தன் கடுங் கொள்கையால் இழந்துவிட்டான். ஏனெனில், வெளிநாட்டு அடிமைத்தளையினின்றும் தான் விடுவித்த அதே மக்களையே அவன் தன் ஆட்சியடிமையின்கீழ்க் கொடுமைப்படுத்தினான். அவன் தாழ்ந்த குடியிற் பிறந்தவன்; ஆனால் மனித ஆற்றலுக்கு மேற்பட்ட (தெய்வீக) ஆதரவுமூலம் அவன் அரசுரிமையை அவாவினான். ஆனால் அவன் தன் பேச்சுத் துடுக்குத்தனத்தால் அலெக்ஸாண்டர் சீற்றத்துக்காளாய் அவரால் கொல்லப்படும்படி ஏவப்பட்டு, அதனினின்றும் விரைந்தோடித் தப்பினான்; அதன்பின் அவன் களைப்புற்று அயர்ந்து உறங்குகையில், பரிய உருவுடைய அரிமா ஒன்று அவன் உடலில் வழிந்தோடும் வியர்வையை நாவினால் துடைத்துக் களையாற்றி அவனை எழுப்பிச் சென்றது. இத் தெய்விக நிமித்தமூலம் அரசுநிலையுயர்வை அவாவும் துணிவுபெற்று, அவன் ஒரு வீரர் குழுவைத் திரட்டித் தன் புதிய அரசுரிமையை ஏற்கும்படி இந்தியரை வேண்டினான். சிலநாட்களுக்குப் பின், அவன் அலெக்ஸாண்டரின் படைத்தலைவர்களுக்கெதிராகப் போர்க்கெழுந்து சென்றுகொண்டிருக்கும்போது, மாபேருருவினதான ஒரு காட்டானை தானாக அவன் முன்னிலையில் வந்து பணிந்து முற்றிலும் இணக்கமுடையதாக மாறிற்று. அது அவனைத் தன் மீதேற்றிக்கொண்டு, அவனுக்குப் போரில் வழிகாட்டி, வெற்றியும் புகழும் தந்தது. இங்ஙனம் சந்திரகுப்தன் அரசிருக்கைபெற்று, ஸெலியூக்கஸ் தன் எதிர்காலப் பெருமைக்கு அடிகோலிவந்த அந்த நாளிலேயே இந்தியாவின் ஆட்சியைக் கைப்பற்றினான்.

இத்துடன் புளூட்டார்க் எழுதுவது காண்க: இதனையடுத்துச் சில நாட்களுக்குள்ளாக, ஏற்கெனவே அரசிருக்கையேறியிருந்த சந்திரகுப்தன் ஸெலியூக்கஸுக்கு 300 யானைகளைப் பரிசளித்துவிட்டு 600,000 வீரரடங்கிய படையுடன் இந்தியா முழுவதும் வென்றடக்கினான்.

## குறித்திலாமையால் இலதெனும் வாதம்

பண்டை மேனாட்டாசிரியர்கள் சாணக்கியனைப் பற்றி ஒன்றுமே குறிக்காது விட்டதையும், கௌடில்யரின் பொருள் நூலில் (அர்த்த சாஸ்திரத்தில்) சந்திரகுப்தனைப்பற்றியோ, பாடலிபுத்

திரத்தைப்பற்றியோ, அலெக்ஸாண்டரைப் பற்றியோ, ஸெலியூக்கஸைப் பற்றியோ எதுவும் குறிப்பிடாததையும் அடிப்படையாகக் கொண்டு, மேனுட்டு ஆராய்ச்சிப் புலவர் சிலர், சாணக்கியன் என்று ஒருவன் இருந்தான் என்பதைப் பற்றியே ஐயுறவு கொண்டுள்ளனர். குறிப்பிடாததிலிருந்து இல்லையென்று கொள்ளும் இவ்வாத முறை துணிபற்றதும், பேரிடர் வாய்ந்ததும் ஆகும். பேராசிரியர் மாக்டானல் குறிப்பிடுகிறபடி (அவரது "வடமொழி இலக்கியம்*" பக்கம் 150-151-பார்க்க) :—

"நிலப்பொருள்களுள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகிய உப்பு ஒருதடவை கூட இருக்கு வேதத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதைக் குறிப்பிடாமையின் இலதெனும் வாதத்தின் பேரிடர்ப்பாட்டை விள்க்க ஒரு நல்ல விளக்கக்காட்டாக எடுத்துக் கூறலாம். ஆனல் இந்தியாவில் இது பேரளவில் உண்டாகும் பகுதி இதே ஐயாற்று நிலம் (பஞ்சாப்) தான். அது சிந்து, ஜீலம் ஆறுகளுக்கிடையிலுள்ள உப்பு மலைத் தொடர்களில் கிடைக்கிறது —இந்தியா முழுவதற்கும் போதுமான அளவில் கிடைப்பதாக அலெக்ஸாண்டருடன் வந்த கிரேக்க தோழர்கள் குறித்தனரென்று ஸ்ட்ராபோ கூறியுள்ளார்."

இதே இடர்ப்பாட்டை இன்னெருவகையிலும் விளக்கலாம். அசோகன் தன் கல்வெட்டுக்கள் எதனிலும் தன் தந்தை பிந்து-சாரன் பற்றியோ, தன் பாட்டன் சந்திரகுப்தனைப்பற்றியோ குறிப்பிடவில்லை. இதனல் அவர்களைப்பற்றி அவனுக்குத் தெரியாதென்றோ அல்லது இவர்கள் வழியில் இவன் வரவில்லை என்றோ கூறிவிடலாகுமா? தன் பெயரைக்கூட அவன் தன் கல்வெட்டுகளனைத்தினிடையிலும் ஒரே ஒருதடவைதான்—மற்றவை யாவற்றிலும் பிற்பட்டுக் கண்டுணரப்பட்ட மாஸ்கிக் கல்வெட்டு ஒன்றிலேயே குறிப்பிடுகிருன். ஆட்களின் பெயர்களைக் குறிப்பிடும் தற்கால வழக்கம் பண்டை நாட்களில் அவ்வளவு பழக்கமாக இருந்ததில்லை.

## சாணக்கியன் சான்று

சாணக்கியன் தன் பொருள் நூலில் பட்டாங்கமாகக் குறிப்பிடுவதாவது: "நூல் துறைகள் யாவற்றையும் துருவி யாராய்ந்து, நடைமுறையி

*Sanskrit Literature by Prof. Macdonnel.

லுள்ள இறை முடங்கல், படிவங்கள் யாவற்றையும் முழுமையும் கண்டுணர்ந்த பின்னரே நரேந்திரனுக்காக வேண்டிக் கௌடில் யனால் இறைமுடங்கல் எழுதும் இம்முற்ற வகுக்கப்பட்டுள்ளது." (பால் 2 இயல் 10.)

இவ்வியலில் பாட்டை வழிகளிலும், உள்நாட்டுப்பகுதிகளிலும் செல்லும் வழிப்போக்கர்களுக்கு உருவான உதவிகள் செய்து பாதுகாக்கும்படி மண்டலத் தலைவர்களை ஏவும் இறைமுடங்கல் குறிக்கப்படுகின்றன. இதிலிருந்து நரேந்திரன் ஆண்டது ஒரு பேரா சையே என்பது விளங்குகிறது. பிரமாண்ட புராணம், சந்திர குப்தனும் நரேந்திரனும் ஒருவர் பெயர்களாகவே கொள்கிறது. மேலும் சாணக்கியன் என்ற விஷ்ணுகுப்தன் (பால் 15-ல்) குறிப் பிடுவதாவது:—

"இப்பனுவல் (சாஸ்திரம்) நந்த அரசன் கைப்பட்ட மறை நூல்களையும், படைநூல் துறையையும் உலகையும் விரைந்து மீட் டியவரால் இயற்றப்பட்டுள்ளது."

இன்றுகூட இந்திய நாட்டு மன்னர் பகுதிகளிலுள்ள இந்திய மக்கள் தம்அரசரை இயற் பெரிட்டுப் பெரும்பாலும் வழங்குவ தில்லை. ஆகவே சந்திரகுப்தனைச் சந்திரகுப்தன் என்று குறிப்பிடு வதற்குப் பகரம் சாணக்கியன் நரேந்திரன் என்று அழைத்தது இயல்பாகும்—அவன் தன்னைக்கூட விஷ்ணுகுப்தன் என்றே குறித் துக் கொள்கிறான். இதுபோலவே பாடலிபுத்திரத்தையும் அப்பெய ரிட்டுக் குறிப்பிடாததும் அது எல்லா நாடுகளுக்கும் எல்லாக்காலத் துக்கும் உரியதான ஒரு அரசியல் பனுவலாக அமையும்படி யெழுதப்பட்டதேயன்றி மௌரியப் பேரரசு அல்லது பாடலி புத்திரம்பற்றிய ஒரு விரிவுரை அன்று என்பதனாலேயே. மேலும் அந்நாட்களில் மக்கள் பழமையான புகழ் வாய்ந்த மன்னர்களின் பெயர்களையும், தொல்பழமை வாய்ந்த நகரங்களின் பெயர்களை யும் மேற்கொண்டு கூற விரும்பினரேயன்றி, ஆட்சியையோ அரச ரையோ புதிதாகக் கட்டப்பட்ட நகரங்களையோ குறிப்பிட விரும்பினரில்லை. மேலும் காசி, அயோத்தியா, கௌசாம்பி, கன்யகுப்ஜம், இந்திரப்பிரஸ்தம், ஹஸ்தினபுரம், உஜ்ஜைனி முதலிய இந்தியாவின் பண்டை நகரங்களை நோக்க, பாடலிபுத்திரம் அன்று அணிமையிலேயே உண்டுபண்ணப்பட்ட புதிய நகரமாய்

இருந்தது. இங்குள்ள கோட்டை புத்தர் காலத்தில்தான் வைகாலியைச் சார்ந்த லிச்சாவிகளுக்கெதிராகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, மன்னன் அஜாத சத்துருவின் உத்தரவின்படி, அவனுடைய பிராமண அமைச்சனுன வஸ்ஸகரன் (வர்ஷகரன் அதாவது மழை பெய்விப்போன்) மூலம் கட்டப்பட்டது.

## சாணக்கியன் என்றெருவன் இருந்ததுண்டா?

சாணக்கியன், வரலாற்றுக்குரிய ஒரு மெய்யான பேர்வழியே என்பது அவன் தன் பொருள்நூலில் அரசியல் முறை சார்ந்த குசத்துவஜக் கட்சி, அம்பியக் கட்சி ஆகிய கட்சிவாதிகளைப்பற்றிக் கூறுவதனுல் தெளிவுபடுகிறது. இவர்களுள் குசத்துவஜம் அலெக்ஸாண்டரால் மண்ணேடு மண்ணுக்கப்பட்டது. அம்பியோ கி. மு. 321-க்குப்பின் வரலாற்றிலிருந்து மறைந்துவிடுகிறது. எனவே அர்த்த சாஸ்திரத்தின் ஆசிரியர் கி. மு. 300-க்கு முன்பு வாழ்ந்தவரும் அந்நூலை எழுதியவரும் ஆகவேண்டும். இத்துடன் இந்து, புத்த, சமண ஆசிரியர்களின் சான்றுகளும் இவ்வகையில் ஒருமுகமாய் உள்ளன. இத்தகைய ஒரு ஆள் இருந்திருக்கவில்லையானுல் ஒருவருக்கொருவர் இணக்கமற்ற இம்மூத்தரப்பினரும் இச் செய்தியில் ஒன்றுபட முகாந்திரம் எதுவுமில்லை. நந்தர்களை ஒழித்துச் சந்திரகுப்தனை முடிசூட்டச் சாணக்கியன் என்ற பிராமணனைப் புதுவதாய்ப் புகுத்திச் சந்திரகுப்தன் பெருமையைக் குறைப்பதில் இந்துக்களுக்குக்கூட எத்தகைய தனிப்பட்ட மூலகாரணம் எதுவும் இருக்கவழியில்லை. புத்த சமணர்களோ பிராமணர்களிடம் மிகப் பற்றில்லாதவர்களாதலால் அவர்களுக்கு அத்தகைய நோக்கம் இருப்பது இன்னும் பெருத்த குறைவேயாகும். இவ்வொன்றுபட்ட சான்றுடன்கூடக் கௌடில்யரே தம் அர்த்த சாஸ்திரத்தில் தானே நந்தர்களை, வேரோடழித்ததாகவும், நரேந்திரனுக்காகவே (இது சந்திரகுப்தனையே குறிக்குமென்று பிரமாண்ட புராணம் குறிப்பதை மேலே காட்டியுள்ளோம்) ஒரு குறிப்பிட்ட இயலை எழுதியதாகவும் வெளிப்படையாகக் கூறுகிருர். இந்தியாவில் எவரும் அவரது இவ்வுரிமைத் தற்பெருமை யுரையை மறுக்கத் துணியவில்லை. எல்லாருமே இதை மெய்யென ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## புத்தர் சான்று

சாணக்கியன் இருந்தது உண்மை என்பதனையும், அவன் செயல்கள் இவை என்பதனையும் முடிவாகக் காட்டும் இன்னொரு தெளிவு, 'ஆரிய மஞ்சு ஸ்ரீ மூலகற்பம்' என்ற இந்தியாவின் புத்தர் பேரரசு வரலாறே. இந்நூலின் புத்தபிக்ஷு ஆசிரியர் சாணக்கிய னிடம் சற்றும் பற்றுடையவர் அல்லர். சமயச் சார்பானவர்கள் தப்பெண்ணத்திற்குப் பேர்போனவர்கள். இவரோ சாணக்கிய னின் அரசியல் கொலைகள், பிற குற்றங்கள் ஆகியவற்றிற்குச் சரி யான தண்டனையாக அவனுக்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் (ஒரு கற்பகாலம்) எண்ணற்ற நரக வாதைகளை நுகரும்படி செய்துவைக்கிறார். ஆனால் இத்தகையோர்கூடச் சாணக்கியன் மெய்ம்மையையோ, அவர் செயல்களையோபற்றி ஐயம் அடைந்தாரில்லை.

அவர் கூறுவதாவது: இதன்பின் (விஷ்ணுகுப்தன்) என்ற பாடலிபுத்திரத்துப் பிராமணனைப் பற்றிக் கூறுவோம். அவன் கோபத்தின் உயிர்வடிவம். சூனியச் செயல்களில் வல்லவன். அரசர்கள், அவனை அவன் ஏழ்மை கருதி அவமதித்துப் பேசினால் அந்த ஒரு காரணத்திற்காக அவன் அவர்களை அழித்துவிடக்கூடி யவன். அவனை மக்கள் 'கோபத்தின் கோமான்', 'காலனின் அவதார மூர்த்தி' என்று கூறுவர். அவன் தீயவர்களை அடக்கித் தீயவைகளையும் அகற்றி நன்மைகளை ஏற்படுத்தினான். ஆனால் இவ் வளவும் செய்தும் பயனின்றி, இம்மூடத் தரித்திரப் பிராமணன் கோபத்தால் தலைதிரிந்து மன்னர் உயிரை மாய்த்துப் பழிதீர்த்துக் கொண்டான்.

அவர் மீண்டும் கூறுவதாவது:

நந்தருக்குப்பின் சந்திரகுப்தன் அரசனாவான். அவன் கேட்பா ரின்றி ஆட்சி புரிவான். அவன், வாழ்க்கையின் நலங்கள் யாவும் துய்த்து நல்வாழ்வு பெறுவான். அவன் தன் முடிசூட்டு விழா உறுதிக்கும், தன் 'தர்மத்'திற்கும் கட்டுப்பட்டு நடப்பான். அவன் அமைச்சன் (சாணக்கியன்) பொல்லா வுரைகளின்மீது அவன் பல மக்களைக் கொன்றதன் பயனாக அவனுக்கு நச்சுப் பிளவை கள் ஏற்பட்டன. அவற்றால் அவன் சிறுவனாயிருந்த (அதாவது முடி சூட்டுகைக்குரிய இந்துக்களின் வயதாகிய 25-க்குட்பட்ட) தன்

மகன் பிந்துசாரனைக் கண்ணீர் விட்டுக்கொண்டே நள்ளிரவில் அரசிருக்கையிலேற்றியபின் அவன் உணர்விழந்தவனாய் இறப்பும் எய்தினான். பிந்துசாரன் முதலமைச்சன் (சாணக்கியன்) மிகவும் கெட்டவன். பிந்துசாரன் சிறுபிள்ளை விளையாட்டிடையே ஒரு சைத்தியம் கட்டியது காரணமாக அவன் நந்த அரசர் குடியில் சந்திரகுப்தன் மகனாய்ப் பிறந்தான். வயது வராத நிலையில் அவன் மிகுந்த இன்பவாழ்வு வாழ்ந்தான். வளர்ந்த பின்னும் அவன் துணிகரமும், பேச்சுத்திறமும், செயல் நயமும் உடையவனா யிருந்தான். அவன் முதலமைச்சன், கோபத்தின் உயிர் வடிவமும் காலனின் அவதாரமூர்த்தியுமான சாணக்கியன். இக்கெட்ட பிராமணன் நீண்ட வாழ்நாளுடையவனாய்ச் சுகற்ப நந்தன், சந்திரகுப்தன், பிந்துசாரன் ஆகிய மூன்று ஆட்சிகளையும் கண்டான். இறுதியாக அவன் உடல் நீத்தபோது அவன் ஒரு கற்பகாலம் எல்லா வகை வாதைகளும் துய்க்கும்படி நரகில் தள்ளப்பட்டான்.''

## சந்திரகுப்தன் முடிவு

மேலே தந்துள்ள மேற்கோளில் 'சந்திரகுப்த மௌரியன் நீரிழிவுப் பிளவைகளால் இறுதியுற்றான்' என்ற கூற்று, அவன் சுருத கேவலியான பத்ரபாகு சுவாமியைப் பின்பற்றி மைசூரிலுள்ள சிரவணபெலகோளா சென்று, அங்கே அத்தலைவருடன் கி. மு. 297-ல் சல்லேகனம் செய்து, அதாவது பட்டினியால் தன்னை மாய்த்துக்கொண்டான் என்ற சமணக் கதையை விலக்கிவிடுவதாகிறது. சந்திரகுப்தன் (தன் விருப்பத்துக்கு மாறாக) அழுதுகொண்டு பாடலிபுத்திரத்தில் தன் அரண்மனையிலேயே நள்ளிரவில் தன் மகன் பிந்துசாரனை முடிசூட்டியபின் இறந்தான் என்று இது முடிவுபடுத்திக் கூறுகிறது. இந்து புராணங்களும் சந்திரகுப்தன் முடிதுறப்பைப் பற்றியோ பட்டினிச் சாவுபற்றியோ கூறவில்லை. இத்தகைய வதந்திகள் இருந்தால்கூட இத்தகைய உருக்கமான நுணுக்கச் செய்திகளை அவர்கள் விட்டுவிட்டிருக்கமாட்டார்கள். எடுத்துக்காட்டாக அப்புராணங்கள் (பிரமாண்ட புராணம், கலியுக விருத்தாந்தம் காண்க) 'சமுத்திரகுப்தன் தன் தந்தையையும், உடன் பிறந்தானையும் வஞ்சனையால் கொன்றான்' என்னும் கதையைத் திருப்பித் திருப்பிக் கூறுகின்றன. இவற்றை யெல்லாம் விட முக்கியமாக, அசோகன் தன் கல்வெட்டுக்களெதனிலும்

(அவற்றுள் பிரமகிரி, சித்தபுரம், சாதிங்க ராமேஸ்வரம் கல்வெட்டுக்கள் சிரவணபெலகோளாவிற்கு ஓரளவு அருகாமையிலிருந்தும் அவற்றில்கூட) அவற்றைக் குறிப்பிடவில்லை. தீவலனின் தாயாரான தன் அரசி கருவகியின் சிறு சமயப்பணியைக்கூட அசோகன் முனைந்தெடுத்துக் குறிப்பிட்டுள்ளபோது இந்திய மக்களால் மிக உயர்வான ஆன்மிக முறை என்று கொள்ளப்படும் சல்லேகனம் என்ற நோன்பைத் தன் பாட்டனரே செய்ததாயிருந்தால் அதைக் குறிப்பிடாம விருந்திருக்கக்கூடும் என்பது நம்பத்தகாத ஒரு செய்தி. சமண உரைகளும் பொருத்தமற்றவையாகவும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாகவும் உள்ளன. ஒரு குறிப்பு தற்கொலை செய்து கொண்ட பிரபாசந்திரனை அசோகன் பெயரனென்று கூடக் கூறுகிறது! ஆனால் பத்ரபாகு ஸ்வாமி கி. மு. 297-இல் இறந்து, அவர் சீடரான பிரபாசந்திரன் அல்லது சந்திரகுப்த முனீந்திரர் அவருடனேயே சந்திரகிரிமலையிலுள்ள பத்திரபாகு குகையில் பட்டினி கிடந்து இறந்திருப்பதனல், அவர் அசோகன் பெயரனு யிருந்திருக்க முடியாதென்பது தெளிவு. சில சமணக் குறிப்புக்களில் அவர் பாடலிபுத்திரம் சார்ந்த சந்திரகுப்தன் என்று கூறப்படாமல், உஜ்ஜைனியைச் சார்ந்த சந்திரகுப்தன் என்று கூறப்படுகிறுர். அவர் உஜ்ஜைனியிலுள்ள வேறு ஏதோ ஒரு இளவரசன் சந்திரகுப்தன் என்றும், பெரும்பாலும் சந்திரகுப்தன் கீழ் சௌராஷ்டிர ஆட்சித் தலைவராயிருந்தவரும், பேர் போன சுதரிசன ஏரியைக் கட்டியவருமான ராஜ வைசிய புஷ்யகுப்தன் பிள்ளையாகவே இருந்திருக்க வேண்டுமென்றும் நான் ஊகிக்கிறேன். இக்குடும்பம் புகழ் வாய்ந்ததும், அரசுரிமைத் தொடர்புடையதும், பெருமைமிக்க ஆண் பெண்களைத் தோற்றுவிக்கும் தகுதியுடையதுமாகும் என்பது தெளிவு. அசோகனின் அரசி உஜ்ஜைனி அருகிலுள்ள வேதீசகிரியைச் சார்ந்த தேவி சாக்கிய குமாரியும், அவள் மக்கள் மகேந்திரனும், மகள் சங்கமித்ராவும் நம்மால் இத்தொடர்பில் எண்ணிப் பார்க்கத் தக்கவர்கள். எனவே, சந்திரகுப்த முனீந்திரர் அல்லது பிரபாசந்திரரையும் இத்திறம் படைத்த குடிக்கே உரிமையாகக் கருதுவதில் பொருத்தமின்மை எதுவுமில்லை. அசோகன் நாட்களில் துஷாஷ்யன் என்ற யவனனே ஸௌராஷ்டிரத்தின் ஆட்சித்தலைவனு யிருந்தான் என்பதையும் இதனை வலியுறுத்தும். ஏனெனில் புஷ்யகுப்

தனின் புதல்வன் சமணத் துறவியாகிப் பின் மரபற்றவனுகி விட்டதனுலேயே அவன் அங்கிலே பெற்றிருக்கலாம் என்று கொள்ளத் தகும்.

## சாணக்கியன் கொச்சியைச் சார்ந்த ஒரு தமிழனே.

சாணக்கியன் பெரும்பாலாகத் தென்னுட்டவனுகவே கொள்ளத்தக்கவன். திரமிளன் என்ற அவன் பெயர் அவன் ஒரு தமிழன் என்பதைக் காட்டுகிறது. கி. பி. 3-ஆம் நூற்ருண்டில் ஆந்திரப் பேரரசு வீழ்ச்சியடையும் வரை திரமிளன் அல்லது திராவிடன் என்பது தமிழரையே குறித்தது. இப்போதுகூட ஆந்திரர் திராவிடர் என்று கூறும்போது தமிழரையே குறிக்கின்றனர். அர்த்த சாஸ்திரம் தென்னுட்டுச் செய்திகள் பற்றிய அறிவை நன்கு காட்டுவதாயுள்ளது. குமாரன் குமாரி வணக்கத்தை இது பாராட்டுவதிலிருந்து இதன் ஆசிரியர் கன்னியாகுமரியின் அருகிலுள்ள ஒரு தமிழன் என்று விளக்கமாகிறது. இப்போது கொச்சி நாட்டரசிலுள்ள சின்னஞ்சிறு குன்றுகள், ஆறுகளின் பக்கம் விளேயும் பொருள்களின் பெயர்கள் இந்நூலில் கூறப்படுவதனுல் இதன் ஆசிரியர் இன்றைய கொச்சி நாட்டில் கிராங்கனூர் என்று அழைக்கப்படும் முயிறிக்காடு அல்லது முசிறியில் பிறந்தவராயிருக்கவேண்டும். இது பண்டு தமிழகத்தின் பகுதியாய்த் தமிழ் நாகரிகத்தின் ஒரு தலேயிடமாய் இருந்தது. மலேயாளம் (வடமொழியை மணந்த தமிழின் புதல்வி) இச் சமயம் பிறப்புறவில்லே. கேரளம் அல்லது மலேயாள நாடு அதர்வவேத அறிவின் கோட்டையும் சூனியக்காரர்கள், மருத்துவர், சோதிடர் ஆகியவர்களின் மூலதளமும் ஆகும். இன்றுகூட அங்கே மந்திரத்தால் பிறர் உயிரை வாங்கமுடியும் என்று கூறிக்கொள்பவரும், தம்மை ஒடியர் அதாவது பேநாய்களாக்கி உருப்பெற்று விடமுடியுமென்று கூறிக்கொள்பவரும், கண்காணு உருப்பெற முடியும் என்றும் கூறிக்கொள்பவரும் உண்டு. மந்திரங்களாலும், மருந்துப்பூண்டுகளாலும் மாயக் குறளிவித்தைகள் பண்ணவும், மாயமாய் மறையவும், சாவு, கண் பார்வைக்கேடு, இளேப்பு, பைத்தியம் ஆகியவற்றை உண்டுபண்ணவும் செய்து எதிரிகளேத் தாக்க முடியும் என்ற அர்த்த சாஸ்திரத்தின் 14-ம் பகுதியில் குறிப்பிடப்பட்ட விந்தையான மந்திர தந்திர சாலங்களே யெல்லாம் கேரளத்திலுள்ளவர் இன்றும் அட்டியின்றி நம்புபவர்

களே. இம்மந்திர வித்தைகளில் இன்றும் அங்கே ஆயிரக் கணக்கானவர்கள் நம்பிக்கையுடையவர்கள். தஞ்சாவூர்த் தமிழர்கள் மாயமந்திரஞ் செய்துவிடுவேன் என்ற பொருளில் 'மலையாளம் பண்ணிவிடுவேன்' என்றே கூறுகின்றனர். எனவே அதர்வ வேதத்தின் அறிஞனும், மாயாசால வித்தையில் வல்லுநனுமான சாணக்கியன் தற்காலத் தமிழ்நாட்டிலுள்ள தமிழனல்ல, கேரள புத்திர நாட்டிலுள்ள தமிழன் என்பது தெளிவு. இதற்கு மற்றும் ஒரு சான்று. அர்த்த சாஸ்திரத்தில் வீடு, வயல், தோட்டம், கட்டடம், குளம் ஆகியவற்றிற்குப் பொதுச் சொல்லாக வஸ்து என்ற சொல் வழங்கியது போலவே இன்றும் மலபாரில் அச்சொல் அப்பொருளில் வழங்குகிறது. இவ்வழக்கு இந்தியாவின் மற்றைப் பகுதிகளிலும் இல்லை. இதுபோல அர்த்த சாஸ்திரத்தில் சொல்லப்படுவைகளைப் பின்பற்றியே கேரளத்தில் ஆடிக் கடைநாளும், ஆவணி முதல் நாளும் ஆடிஇறுதி என்றும் ஆவணிப் பிறப்பு என்றும் சிறப்பு விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. இவையே பொருளியல் சார்பில் ஆண்டு முடிவாகவும், ஆண்டுப் பிறப்பாகவும் அமைகின்றன. "சோழியன் குடுமி சும்மா இராது" என்ற தமிழ்ப் பழமொழியும் சாணக்கியனின் குடுமியால் விளைந்த பேரிடரைக் குறிப்பதாதலால் 'சாணக்கியன் தமிழனே' என்பதற்கு இதுவும் ஒரு நற்சான்று ஆகும். ஆனால் இதுவே அவன் கிராங்கனூர் வாசியல்லவெனக் காட்டுமே என்று கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில், தொன்றுதொட்டு எத்தனையோ சோழிய பிராமணர் குடியிருப்புக்கள் கேரள நாட்டில் இருக்கின்றன. இன்றும் மலபார், கொச்சி, திருவாங்கூரில் உள்ளன.

## அர்த்த சாஸ்திரம்

சில மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் அர்த்த சாஸ்திரம் ஒரு தென்னாட்டுப் போலிநூல் என்றும், எப்படியும் அது சந்திரகுப்த மௌரியனின் முதலமைச்சர் எழுதிய நூலாயிருக்க முடியாதென்றும் அதனை எதிர்த்துரைக்கிறார்கள். மெகாஸ்தெனிஸ் சாணக்கியனைப்பற்றிக் குறிப்பிடநேராததையே சாணக்கியனென்று ஒருவன் இருந்ததேயில்லை என்று எண்பிப்பதற்கான ஆதாரமாக அவர்கள் கொண்டுவிடுகின்றனர். நாம் மேலே காட்டியபடி இது பொருந்தாக் கூற்று ஆகும். மேலும் மெகஸ்தனிஸ் எழுதிய முழு நூலும் நமக்குக்

கிட்டவில்லை என்பதும் அதன் சில மேற்கோளுரைகளே நமக்குக் கிட்டியுள்ளன என்பதும் கூர்ந்து கவனிக்கத் தக்கது. ஆகவே, மெகாஸ்தனிஸ் சாணக்கியனைப்பற்றிக் குறிப்பிடவே யில்லை என்று கூறவும் முடியாது. அவர் அங்ஙனம் குறித்தேயிராவிட்டாலும்கூட, அவர் வரும்போது சாணக்கியன் பாடலிபுத்திரத்திலிராது, நடைமுறை முதல் அமைச்சராக இராட்சசனே இருந்திருத்தலும் கூடும். அசோகன் கல்வெட்டுக்கள் சிலவற்றில் அர்த்த சாஸ்திரத்தின் பெரும்பகுதிகள் அப்படியே தரப்பட்டிருப்பதும், அதில் வரும் பல தொடர்கள் அர்த்த சாஸ்திரத்தின் உதவியைக் கொண்டே விளக்கப்படக் கூடியவையாயுள்ளன என்பதும், ஐயத்துக்கிடமின்றி கி.மு. மூன்றும் நூற்றுண்டுக்குரிய அக்கல்வெட்டுக்களை விட அர்த்தசாஸ்திரம் பழமை வாய்ந்ததென்று காட்டவல்லன. ஆகவே, அர்த்த சாஸ்திரம் நவநந்தர்களை அழித்து சந்திரகுப்த மௌரியனிடமும் அவன் புதல்வன் பிந்துசார அமிர்தகடனிடமும் முதலமைச்சனுயிருந்த சாணக்கியன் அல்லது கௌடில்யன் இயற்றிய நூலாகவே இருக்கவேண்டும். அது இன்றிருக்கும் வடிவிலேயே குறைந்தது கி. மு. 300 முதலே இருந்திருக்க வேண்டும்.

## தென் இந்தியா மீது மௌரியப் படையெடுப்பு

சில ஆராய்ச்சியாளர்கள் ஐரோப்பியரும் இந்தியருமாக, தென் இந்தியாமீது மௌரியர் படையெடுப்புப்பற்றியும் ஐயுறவு கொண்டுள்ளனர். கோசர், வடுகர் ஆகியவர்கட்கு உதவியாகவந்த புது மௌரியர் படையெடுப்புப் பற்றியும், வான்படர் கொடியும், வான் முகடுதொடும் அரசு குடையும் உடைய மௌரியர் பொதியிலின் உயர்முகட்டின் வழியாகத் தேர்ச்சுவடகழ்ந்து, தம் பொற்றேரூர்ந்து சென்று அதனைக் கடந்த பின் (தென் ஆர்க்காட்டிலுள்ள) மோகூர்த்தலைவனை முறியடித்தது பற்றியும் புனைந்து சுருட்டிக் கதை யுண்டுபண்ணுவதற்கு மாமூலனார், பரங்கொற்றனார், ஆத்திரையனார் ஆகிய பண்டைத் தமிழ்க் கவிஞர் மூவருக்கும் என்ன உட்கோள் இருந்திருக்கக்கூடும் என்பதையும் அவர்கள் விளக்க முற்படவில்லை. இக்கவிஞர்களோ தம் தமிழரசர், தமிழ் வீரர்கள் பற்றி மிகவும் பெருமை உடையவர்கள். புதுவது புனைவதானால் மௌரியரிடம் தோல்வியுற்றதாக அவர்கள் புனைந்திருக்க முடியாது.

அவர்களுக்கு நவநந்தர்களைப் பற்றியும், அவர்கள் சேமநிதி பற்றியும் தெரிந்திருந்தது. மேலும் அர்த்த சாஸ்திரம், தேர்ப் பாதைகள் உண்டுபண்ணுவது பற்றியும் குறிப்பிடுகிறது. குந்தள முதலிய பல இடங்களில் நந்தர், மௌரியர் ஆட்சி செய்தது பற்றிப் பல தென்னாட்டுக் கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன. சில தற்காலத் தென்னிந்திய அரசர்கள் மௌரிய அரசர் கால் வழியில் வந்ததாகக் கொள்வதும் இந்தியாவின் இத் தென்கோடி மீது மௌரியர் படையெடுத்தனர் என்பதை வலியுறுத்தும். அசோகர் பாறைக்கல்வெட்டுக்கள் (Rock Edicts) I, II ஆகியவை சோழ, பாண்டிய, கேரள, சத்திய புத்திர நாடுகளைக் குறிப்பிடுகின்றன என்பதையும், சிரியா, எகிப்து, மாஸிடோனியா, கைரீன், எப்பைரஸ் ஆகியவற்றின் அரசரை அன்டியோக்கஸ், டாலமி, அன்டிகோனஸ், மகாஸ், அலெக்ஸாண்டர் எனப் பெயரிட்டுக் குறிக்கின்றன என்பதையும் தனிப்படக் கவனிக்கவேண்டும். இதிலிருந்து தென்னாட்டரசர் நால்வரும், இலங்கை அரசரும், மௌரிய பேரரசு நாட்டுக்கு உட்பட்ட அரசர் என்றும், அதுகாரணமாகவே, இன்று (1939) மன்னர் பேரரசராலோ அல்லது மன்னர் ஆட் பேராலோ மைசூர், கொச்சி, திருவாங்கூர் அரசர் குறிக்கப் படுவதுபோலப் பழக்க முறையில் குறிப்பிடப்படுகின்றனர் என்றும் தெரிய வருகிறது.

## சந்திரகுப்தன் அலெக்ஸாண்டர் பகைமை

இதுபோலவே சில வரலாற்றாசிரியர்கள், நாம் மேலே தந்துள்ள சந்திரகுப்தனைப் பற்றிய ஜஸ்டினின் குறிப்பில் தாமாக முனைந்து ஒரு திருத்தம் செய்துகொண்டு அதன் துணையால் சந்திரகுப்தன் அலெக்ஸாண்டரைப் பகைத்துக் கொண்டதில்லை யென்றும் முன்கூட்டி ஓடித் தப்பிக்கொண்டதில்லை யென்றும் வலிந்துரைக்கின்றனர். அவன் பகைத்துக்கொண்டது நந்த அரசனையே என்றும், தப்பியோடி உயிர்பிழைத்தது அவனிடமிருந்துதானென்றும் பாவனை பண்ணுகின்றனர். ஆனால் இது ஜஸ்டின் கூற்றின்மீது தேவையற்ற, பொருத்தமற்ற திருத்த உரிமை எடுத்துக் கொள்வதாகும் என்பது என் கருத்து. சந்திரகுப்தன் தன் பேச்சுத் துடுக்குத்தனத்தினால் பகைத்துக்கொண்டது அலெக்ஸாண்டரையே என்பதற்கும், அவனால் கொல்ல உத்தரவிடப்பட்டதற்கும்

அதிலிருந்து தப்பி யோடியதற்கும் அவன், களையுற்று உறங்கிய போது சிங்கம் வந்து அவன் வியர்வையை நாவால் துடைத்தது என் பதற்கும், எதற்கும் இந்துச் சார்பாகவோ, புத்தச்சார்பாகவோ, கிரேக்கச் சார்பாகவோ எத்தகைய சான்றுமில்லை. இந்தியச் சான்றுகள்மட்டும், சந்திரகுப்தன் பேச்சுத் துடுக்குத்தனத்தால் நந்தனைப் பகைத்துக்கொண்டானென்றும், தூக்கிலிட உத்தரவிடப் பட்டானென்றும், ஆனால் இராட்சசன் இடையீட்டினாலேயே தண் டனைக்குத் தப்பினான் என்றும் குறிப்பிடுகின்றன. யாரும் இதனை வைத்துக்கொண்டு சந்திரகுப்தன், நந்தனையே பகைத்துக் கொண்டதாக ஜஸ்டின் குறித்தார் என்று திருத்த முடியாது. நந்தர் இருந்த பாடலிபுரத்தருகே சிங்கங்களே கிடையாதென்றும், அதே சமயம் பஞ்சாப்பருகில் அவை உண்டு என்பதுமே, ஜஸ்டின் கூறுவதுபோல் பூசல் நிகழ்ந்தது. அலெக்ஸாண்டருடன் தான், நந்தருடன் அல்ல என்று காட்டும். புளூட்டார்க் தெளிவா கக் குறிக்கிறபடி சந்திரகுப்தன் அலெக்ஸாண்டரைச் சந்தித்தது ஏற்றுக்கொள்ளத் தக்கதே. அப்படி அவன் அலெக்ஸாண்ட ருடன் பூசலிட்டு அவரால் கொலைத் தண்டனைக்காளாய், ஓடித் தப்பவில்லையானால், அவன், அவர் படைத்தலைவர்களைத் தாக்கிக் கொல்லவேண்டிய காரணமென்ன? மேலே தரப்பட்ட ஜஸ்டி னின் உரையை மொத்தமாகப் பார்த்தால், பூசல் அலெக்ஸாண்ட ருடனேயே என்பதும் தப்பியோடியதும் அவரால் தண்டனை பெறுவதிலிருந்தே என்பதும் ஐயமற விளங்கும். அலக்ஸாண்டர் (Alexandrum) என்பதை நந்தர் (Nandrum) என'கட்ஷ்மீடு'திருத் தியதும் மெக்கிரிண்டில், வின்ஸன்ட் ஸ்மித் முதலியோர் அதனை ஒத்துக்கொண்டுள்ளதும் இன்றியமையா அவசியத் திருத்தமாகக் கொள்வதற்கில்லை. சந்திரகுப்தனைப் போன்ற தற்பெருமை மிக்க இந்திய இளவரசன் முதற் சந்திப்பிலேயே அலெக்ஸாண்டரைப் புண்படுத்தினதுபற்றி யாரும் வியப்புறத் தேவை கிடையாது. அலெக்ஸாண்டரின் தற்பெருமைக்கு ஊறு ஏற்பட்டால் அவர் பெரிதும் சீற்றம் கொள்ளக்கூடியவரே என்பதும் அவரது மத வெறிபிடித்த அப் பெருமைக்கு ஊறு விளைவித்தவர்களை அவர் உணர்ச்சியின்றிக் கொல்லவோ கொலைக்கு ஆளாக்கவோ செய் பவரே என்பதும் உண்மை. இக்காரணத்துக்காக அவர் தம் நெருங்கிய நண்பன் கிளெய்ட்டாளைக் கொன்றதுடன் உணர்ச்சி

யற்றவராய்க் கொடுமையுடன், காலிஸ்தெனிஸ், பைலோட்டாஸ், பார்மீனியன் ஆகியவரையும் கொலை செய்தார் என்பவை இதற் கானபோதிய தெளிவுகளாகும்.

## பர்வதகன் என்பது மூத்த போரஸே

முத்ராராக்ஷஸ(நாடக)த்தில் வரும் பர்வதகனைச் சில ஆராய்ச்சியாளர்கள் நேப்பாள அரசனென்றும், வேறு சிலர் ஸெலியூக்கஸே என்றும், வேறு சிலர் மூத்தபோரஸ் என்றும் கொண்டுள்ளனர். அது மூத்த போரஸே என்று நான் கருது கிறேன். காஷ்மீர், மலயம், குலுத, சிந்த, சௌராஷ்டிர மன்னர் களைத் துணையரசராக்கவும் யவனர், பாரசீகர், கிராதர், காம்போஜர், பாஹ்லிகர்களைக் கூலிப் படை வீரராகவும் கொள்ளத்தக்க அள வில் வலுவுடைய அரசன் அவன் ஒருவனே. நேபாள அரசர் எவரும் இத்தகையோரைப் பின் துணைவராகக் கொண்டிருக்கமுடி யாது. மேலும் காஷ்மீர், மலய, குலுத மன்னர் பர்வதகன் நிலப் பகுதியைக் கைக்கொள்ள விரும்பினர் என்பதிலிருந்து அது அவற்றுக்கு இறுதிச் சடங்குகள் இடையிலிருந்தது என்பது தெளி வாகும். போரஸின் நாடு என அறியப்பட்ட பகுதியுடன் இது பொருந்துகிறது. பார்வதகன் இந்து மதச் சார்பா யிருந்தது ஸெலி யூக்கஸே அவன் என்ற ஊகத்தைச் சிதறடிப்பதாகும். மேலும் ஸெலி யூக்கஸ் சந்திரகுப்தனிடமிருந்து பெற்றதாகத் தெரிவது நச்சு மங்கை யல்ல, ஆண்மை தரும் மருந்துவகைகள்மட்டுமே! போரஸ் அல்லது பௌரவன் என்ற பெயருக்கு மாருகப் பர்வதகன் என்ற பெயர் வழங்குவது ஒரு பெரும் தடங்கலாகாது. காஷ்மீருக்கும் பஞ்சாப் பிற்கு மிடையிலுள்ள மலைப்பகுதிக்குரிய அரசர்கள் அபிசாரனும் அர்ஸாக்கிஸுமே. அவர்களிருவரும் மூத்த போரஸின் துணை யரசர்கள். ஆகவே அவன் நேர்மையுடன் தன்னைப் பர்வதே சுரன் (மலைகளின் தலைவன்) அல்லது பர்வதகன் (மலை வெற்பன்) என்று கூறிக்கொண்டிருக்கக்கூடும். அத்துடன் கங்கைநாட்டு மக்களும் அவனைப் பர்வதகன் என்று கூறிச் சிலேடை நயம்படக் கேலி செய்ய விரும்பியே இருப்பர்—பௌரவன் என்ற அவன் வீம்புப்பெயரை மலைநாட்டான் என்று பொருள்படும் பர்வதகனாக மாற்றியிருக்கலாம். மௌரியர் காலத்துக்குள்ளாக வேதநிலமாகிய பஞ்சாபும் வடமேற்குப் பகுதியும் கங்கை நாட்டினரால் புண்ணிய

பூமியாகக் கொள்ளப்படுவதற்கு நேர்மாறாகக் கீழ்த்தர இந்துக்கள் நாடு அல்லது மிலேச்சர் நாடு என்று கருதப்பட்டுவிட்டது. இக்கருத்து, பல புராணங்களிலும், தர்ம சாஸ்திரங்களிலும் நிழற்படக் காணப்படுகிறது. வடமேற்குப் பகுதியைப் பாரசிகர் வென்றது இக் கருத்தை இன்னும் வலியுறுத்தியது. ஆனால் பண்டை (ஆரிய) அணிமையுறவுடைய பங்காளிகளாகிய பாரசிகரும், இந்துக்களும் அணிமையுறவுப் பங்காளிகளுக்குரிய பழமொழிப் பண்புப்படியே ஒருவரை ஒருவர் மிகுதியாக வெறுத்தனர். பாரசிகர்களின் கடவுளர்கள் (அசுரர்) இந்துக்களின் பேய்த் தெய்வங்களாகவும் இந்துக்கள் கடவுளர் (தேவர்) பாரசிகர்ளிகன் பேய்த் தெய்வங்களாகவும் குறிக்கப்பட்டனர். இந்துக்களால் ‘உயர் குடி மக்கள்’ என்று பெருமையுடன் கொள்ளப்பட்ட ‘ஆரியர்’ என்ற சொல் பாரசிகரால் ‘கீழ்க் குடி மக்கள்’ என்ற பொருளில் வழங்கப்பட்டது. எனவே வடமேற்கு எல்லைப் புறத்திலுள்ள இந்துக்கள் அவர்கள் கீழ் நாட்டுத் தோழர்களால் இன்னும் கீழாக மதிக்கப்பட்டனர் என்பதில் வியப்பென்ன இருக்க முடியும்?

பர்வதகனிடமும் மலய கேதுவினிடமும் மௌரியரிடமும் நந்தரிடமும் இருந்தது போலவே மன்னுரிமைத் தோழமைப் பெண்டும், (விஜயா) அரண்மனை மேலாளும், (ஜாஜலி) படை முதல்வனும் (கேசர சேனன்) இருந்தனர் என்பதும், அவர்கள் அக்காலத்தில் பிற்பட்ட நாடுகளாயிருந்த நேப்பாளத்தின் அரசர்களாயிருந்திருக்க முடியாதென்றும் பஞ்சாப் அரசராகவே இருந்திருக்கவேண்டுமென்றும் காட்டும். மலயகேது என்பது மலையத்தை யழித்தவன் என்று பொருள்படும். இளவரசனான அவன் தன் போர் வெற்றிகள் மூலம் மலயத்தின் அரசனைத் தனக்கும் போரஸுக்கும் உட்பட்டவனாகக் கீழ்ப்படுத்தியதை இது குறிக்கலாம் *என்று தோற்றுகிறது.

* முதனூல் முன்னுரைக் குறிப்பு: கார்வால்.

## இளைய போரஸ்

கிரேக்கக் குறிப்புக்களில் மூத்த போரஸைப் பற்றிய கடைசிச் செய்தி கி. மு. 321-ல் திரிபரதெய்ஸாஸில் நடைபெற்ற அலெக்ஸாண்டர் பேரரசின் இரண்டாவது பங்குப் பிரிவினையின்போது

பஞ்சாபும், சிந்தும் அவன் பகுதிகளாக உறுதி செய்யப்பட்டதே யாகும். ஆகவே அவன் சாணக்கியனால் அவா வூட்டப்பெற்று அவ் வவாவுடன் பாடலிபுத்திரம் சென்றபோது கி.மு. 321-லேயே அங்கே கொலையுண்டதில் பொருந்தாக் கூற்று எதுவும் இல்லை. கி. மு. 317-ல் யூடிமாஸின் வஞ்சனையால் கொலை செய்யப்பட்ட போரஸ் மூத்தபோரசின் மருமகனாகிய இளைய போரஸாகவே இருக்க வேண்டும்—என் கருத்து இளைய போரஸ் என்பதே. ஏனெனில் ஹைடாஸ்பிஸ்போரில் மூத்த போரஸுக்கு 200யானைகள் இருக்க, அவனிடம் இருந்தது 120 யானைகளே. மூத்த போரஸுக்கு அலெக் ஸாண்டர் மிகுதி நாடு கொடுத்தபின் இத்தொகை இன்னும் பெருகி யிருக்கவேண்டும். இவையன்றி அலெக்ஸாண்டருக்கே ஈடு செலுத்திய மூத்த போரஸ், யூடிமாஸ் கையில் இவ்வளவு எளிதாக ஏமாற்ற மடைந்திருக்க முடியாது. இதுவு மல்லாமல் பாரிய உடலு டைய அவன் கிரேக்க ஆசிரியரால் விதந்துரைக்கப்பட்ட இருப்புக் கவசத்துடன் யூடிமாஸினால் அவ்வளவு திடுமெனக் கொலை செய் யப்பட்டிருக்கவும் முடியாது. ஆனால் மற்றப் போரஸோ இவரை விட மிக எளிதாகக் கொலை செய்யப்படக்கூடியவனே யாவன்.

## அம்பிஸ்

அம்பிஸைப்பற்றி ஒரு சில கூறவேண்டும். இவனைக் குறித்து நாம் கடைசியாகக் கேள்விப்படுவது கி. மு. 321-ல் திரிபர தெய் ஸாஸில் நடைபெற்ற இரண்டாம் பங்குப் பிரிவினைக் கூட்டத்தில் தான். சிந்துவுக்கும் ஹைடாஸ் பிஸுக்கும் இடையிலுள்ள நாடு அவன் பேரில் உறுதி செய்யப்பட்டதே. அதன்பின் அவனைப் பற்றி நாம் எதுவும் கேள்விப்படவில்லை. மீண்டும் நமக்குத் தெரிய வருவதெல்லாம் தட்சசிலை வடமாகாண(உத்தரபத)த்தின் மௌரிய ஆட்சிப் பேராளின் தலைநகரமாயிருப்பதே. அம்பிஸையும் அவன் உறவினரையும் பற்றிய எல்லாத்தடமும் அழிந்துவிடுகின்றன. பிந்துசாரன் கீழும் அசோகன் கீழும் தட்சசிலைக் குடிகள், கெட்ட அமைச்சர் ஆட்சி காரணமாகக் கலகித்தெழுந்தனராயினும் அவர்கள் தாம் மௌரிய பேரரசரிடமும் அவர் ஆட்பேரிடமும் பற்றுடையவராயிருந்ததாக விளக்கம் கூறிக்கொண்டனர். அவர் கள் முறைகூறிக்கொண்டதெல்லாம் தம்மை அவமதிப்பாக நடத்திய கெட்ட அமைச்சர்கள் பற்றியே. இதிலிருந்து அம்பிஸின்

மரபு அற்றுப்போய்விட்டதென்றும், ஒருவேளை தொலை உறவுக் கிளைமீதிருந்தாலும் குடிகள் அவர்கள்மீது பற்றுடையவராகவே இல்லை என்று தெரிகிறது. எனவே அம்பிஸ் பிள்ளையில்லாதவ னென்று கொள்வதும், கிரேக்கர்கள் அனைவரும் நாட்டைவிட்டுச் சென்றபின் அவன் தற்கொலை செய்வதாகக் குறிப்பிட்டதும் பொருத்தமேயாகும். நேரில் காணுத அதனை, கிரேக்கர்கள் அணிபெற விவரிக்க முடியாது விட்டதும் இயல்பே.

## புனைகதையாளர் சிறப்புரிமை

இப்புனை கதையை யெழுதுவதில் நான் கூடியமட்டும் அர்த்த சாஸ்திரத்திலோ, முத்ராராக்ஷசத்திலோ அல்லது (அசோகர்) கல்வெட்டுக்கள் சின்னங்கள் ஆகியவற்றிலோ, மெக்கிரண்டிலின் "அலெக்ஸாண்டரின் இந்தியப் படையெடுப்பு" என்ற நேர்த்திமிக்க நூலில் பெரும்பாலும் அடங்கியுள்ள புத்த சமண கிரேக்கக் குறிப்புகளிலோ குறிக்கப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்களுக்கு மாறுபடாமலிருக்க முயன்றுள்ளேன். ஆனல் வரலாறு, மௌனம் சாதிக்குமிடங்களிலும், தெளிந்த குரலில் வரையறுத்துக் கூருது விடும் இடங்களிலும் நான், ஒரு புனை கதையாசியரின் சிறப்புரி மையை எடுத்துக்கொண்டுள்ளேன். வரலாற்றுப் புனை கதை யாசிரியன் தெளிவாக முடிவுபடுத்தப்பட்ட வரலாற்றுச் செய்தி களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றில்லை. அறியப்படாத அகல் வெளியிலேயே தன் கனவாற்றலை ஓடவிட அவனுக்கு உரிமை உண்டு.

முடிவாக என் நண்பர்களான திருவனந்தபுரம் கல்லூரித் தலைவர் சஹஸ்ரநாம ஐயர், சென்னை டாக்டர் வைத்தியநாத ஸ்வாமி, சென்னை 'ஆரியர்', பத்திரிகையின் முன்னுள் ஆசிரியர் திரு டி. ஏ. சுவாமிநாத ஐயர் ஆகியோர் கையெழுத்துப்படிகளை ஆராய்ந்து தங்கள் மதிப்புக்குரிய கருத்துரைகளை அளித்தமைக்கு அவர்கட்கு என் உளமார்ந்த நன்றியை அறிவித்துக்கொள்வது எனது இன்ப நிறை கடமை ஆகும்.

ஏ. எஸ். பி. ஐயர்.

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| க. | முப்பெரு முதல்வர் | ... | 1 |
| உ. | மேற்கரங்கத்தில் மின்னலும் இடியும் | ... | 2 |
| ங. | அறிவுக்களஞ்சியம் | ... | 5 |
| ச. | நாடாளப் பிறந்த நம்பி | ... | 9 |
| ரு. | சாணக்கியன் உரிமைப் போராட்டம் | ... | 14 |
| சு. | வெகுளியும் வெஞ்சினமும் | ... | 22 |
| எ. | மந்திராலோசனே | ... | 24 |
| அ. | ஜீவசித்தியின் சூழ்ச்சித்திறம் | ... | 27 |
| கூ. | மௌரியன் வரலாறு | ... | 32 |
| கO. | அலக்ஸாண்டர் சூழ்ச்சிப்பொறி | ... | 37 |
| கக. | கல்லேயும் பிளக்கும் காதல் | ... | 41 |
| கஉ. | கிரேக்கப் பேரரசின் வீழ்ச்சி | ... | 44 |
| கங. | நந்தர் வீழ்ச்சி | ... | 47 |
| கச. | சந்திரகுப்தனின் முடி சூட்டு விழா | ... | 51 |
| கரு. | வலேஞனேப் பிடிக்கும் வலே வீச்சு | ... | 55 |
| கசு. | இராட்சசனின் துயரம் | ... | 61 |
| கஎ. | நட்பின் வெற்றி | ... | 67 |
| கஅ. | புயலுக்குப்பின் அமைதி | ... | 69 |
| ககூ. | வெற்றி வேந்தனே வென்ற வெற்றி வேந்து | ... | 71 |
| உO. | கடல் சூழ்வரல் | ... | 75 |



# ஊழ்கடந்த மாவீரர்

——: o :——

## க. முப்பெருமுதல்வர்

இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்திய மாநிலத்தில் பல சிறு நாடுகள் இருந்தன. அவற்றுள் கிழக்குப் பகுதியிலிருந்த மகத நாடு அப்பக்கத்திலுள்ள சிறு நாடுகளையெல்லாம் வென்று, பேரரசாக விளங்கிற்று. மேற்கிலுள்ள அரசுகள் பாரசிகப் பேரரசால் சிலகாலம் வென்று அடக்கப்பட்டிருந்தன. ஆனால், இதே காலத்திலும் தெற்கில் தமிழகத்திலுள்ள சேர, சோழ, பாண்டிய நாடுகள் தொலை நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டு, சீரும், சிறப்பும் உடையவையாய்த் தனியரசு நடாத்தின.

பாரசிகரைத் தொடர்ந்து, இந்தியாமீது படையெடுத்த வெளிநாட்டு வீரன் அலக்ஸாண்டர். அவன் கிரெக்க நாட்டிலுள்ள மாசிடோனியா என்ற சிற்றரசின் தலைவன். கிரேக்க நாட்டையும், மேற்கேயிருந்த மற்ற நாடுகளையும் அவன் வென்றான். அதன் பின் அவன் பாரசிகப் பேரரசனை வீழ்த்தி, அவன் அழகிய புதல்வி ரோக்ஸனாவை மணந்துகொண்டான்.

அக்காலத்தில் இந்தியாவே உலகின் கோடியாகக் கருதப்பட்டது. அலக்ஸாண்டர் இந்தியாவையும் வென்று, உலக முழுவதையும் ஒரு குடைகீழ் ஆளத் திட்டமிட்டான்.

இந்தியாவை வென்று ஆளுவது என்ற அவன் கனு முற்றுப் பெருதுபோயிற்று. இந்தியாவில் மேற்குத் திசையில் அவன் பெற்ற வெற்றி கிழக்குத் திசைக்குப் பரவ முடியவில்லை.

இந்தியா பற்றிய அவன் கனவை நினைவாகக் காணக் கிழக்குத்திசையில் ஒரு வீரன் தோன்றினன். அவனே சந்திரகுப்தன் என்ற அரசிளஞ்செல்வன். மேல் இந்தியா காணத்துணியாத கனவை அவன் நினைவாகக் கண்டான்.

சந்திரகுப்தன் கனவை நினைவாக்க உதவிய அறி வொளி தெற்கே தமிழகத்திற் பிறந்து இந்தியாவெங்கும் தன் கதிர்களைப்பரப்பி ஒளிர்ந்தது. அவ்வொளியே சாணக் கியன் என்ற அறிவு சான்ற அருமறைவாணன்.

அலக்ஸாண்டர், சந்திரகுப்தன், சாணக்கியன் என்ற இம்மூவர் செயல்களாகிய நாடகமேடையாக இந்தியா அன்று விளங்கிற்று

## 2. மேற்கரங்கத்தில் மின்னலும், இடியும்

கி. மு. 327-ம் ஆண்டில் ஓர்நாள் அலெக்ஸாண்டர் இந்தியாவின் வடமேற்கிலுள்ள தன் கூடாரத்தில் வீற் றிருந்தான். அவன் வாசகங் கூற, அவன் செயலாளன் அவன் தாய்க்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான்.

"பிறரைப்போல் உன் வெற்றிகளைக் கண்டு நான் வியப்படையவில்லை. மக்களுக்கு நீ பெருங்கடவுள் 'அம்மன்' கூறுசப் பிறந்தவன் என்ற கேள்விமட்டுமே உண்டு. நான் அதை என் அனுபவமூலம் அறிவேன். என் மணவினை நிறைவு பெறுமுன்பே 'அம்ம'னின் இடி யேறு பெருமுழக்கத்துடன் என் கருப்பையில் இறங்கி ஒளி வீசியதெனக் கனவு கண்டேன். ஆதலால், உலக

முழுவதும் உனதாகும்வரை தயங்காது முன்னேறு" என்று வீரத்தாய் போரார்வமிக்க தனயனுக்கு எழுதியிருந்தாள். அவனும் 'உலகின் எல்லையை என் அரசின் எல்லையாகக் கண்டன்றி மீளேன்' என்று உறுதி கூறி, அவளுக்கு எழுதியிருந்தான்.

இந்தியாவின் மேற்குப் பகுதியில் அலெக்ஸாண்டர் கனவு பேரளவுக்குப் பலித்தது. அவனிடம் பணியிலமர்ந்த சசிகுப்தன் என்ற இந்தியன் இவ்வகையில் அவனுக்குப் பேருதவியாயிருந்தான். கிரேக்க, பாரசீக மொழிகளை அவன் அவ்வந் நாட்டினனைப்போலப் பேசுபவன். இந்தியமக்கள், இந்திய அரசர் மனப்போக்குகளையுணர்ந்து, அவர்களைப் பக்குவமாக அலக்ஸாண்டர் வசமாக்குவதிலும், அவர்கள் உரையாடல்களை மொழிபெயர்ப்பதிலும் அவன் ஈடுபட்டிருந்தான். அவன் முயற்சியால் தட்சசிலை நகர் மன்னன் தட்சிலனும், அவன் மகன் அம்பியும் போரிடாமலே அலக்ஸாண்டர் நண்பர்களாகவும், கையாட்களாகவும் ஆயினர்.

அலக்ஸாண்டரை எதிர்த்துப் போராடியவர்களுள் தலைமை வாய்ந்தவர்கள் அசுவஜித், போரஸ் என்ற பர்வதேசுரன் ஆகிய இருவரும். அசுவஜித் தன் கோட்டையைக் காத்து நின்று மாண்டான். அவன் மனைவி கலாபினி அலக்ஸாண்டர் செல்வத்திலும், புகழிலும் மயங்கி, அவன் வசமாயினுள். ஆயினும், அசுவஜித்தினிடம் ஆட்கடமைபூண்ட மாத்திரக வீரரும், அவர்கள் தலைவனாகிய விஜயவர்மனும் பணியவோ, அலக்ஸாண்டரின் கீழ் பணியேற்கவோ மறுத்தனர். கிரேக்கர் அவர்களைப் பாதுகாப்புடன் வெளியேற அனுமதிப்பதாக உறுதிகூறிப் பாதுகாப்பற்ற நிலையில் அவர்களைத் தாக்கி அழித்தனர். தப்பியோடியவர்கள் கிரேக்கர்களின் வாய்மை தவறிய

செய்கை, கொடுமை, கீழ்மை ஆகியவற்ருல் எங்கும் அவர்கள்மீது வெறுப்பையும், பகைமையையும் பரப்பினர்.

அசுவகரை வென்றபின் கிரேக்கர் சிலநாள் தட்சசிலையில் அரசன் விருந்தினராயிருந்து, பின் பர்வதேசுரனைத் தாக்க முற்பட்டனர். பர்வதேசுரன் போரில் ஒப்பற்ற வீரன். அவன் யானைப்படைகள் மேற்கு நாடுகளிலேயே சிறந்தவை. ஆயினும், போர்த் தந்திரங்களாலும், விடா முயற்சியாலும் அலக்ஸாண்டர் வெற்றிபெற்ருன். பர்வதேசுரன் மகன் அர்ஜுனன் போரில் மாண்டான். பர்வதேசுரன் பிடிபட்டாளுயினும், அவன் ஒப்பற்ற வீரத்தைக் கண்டு அலக்ஸாண்டர் அவனை மீண்டும் அரசனுக்கினுன். அத்துடன் ஜீலம் ஆற்றுக்குக் கிழக்கே தான் வென்ற பல பகுதிகளையும் அவனுக்குக் கொடுத்து, அவனை நண்பனுக்கினுன்.

தட்சசிலையில் தங்கியபோது அலக்ஸாண்டர் அங்குள்ள பல்கலைக் கழகத்தைப் பார்வையிட்டான். பல அறிவுத்துறைகளிலும், சமயம், ஒழுக்கத்துறைகளிலும் இந்தியர் கிரேக்கரினும் சிறந்து விளங்குவது கண்டான். அறுப்பு மருத்துவம், சிற்பம் ஆகிய இரண்டில் மட்டும் கிரேக்கரும், எகிப்தியரும் இந்தியருக்குப் பல புதுமைகள் கற்பிக்கத் தக்கவராயிருந்தனர். இந்தியப் பிராமணத்துறவிகள் வாழ்க்கைக் கடுமையும், உலகப் பற்றின்மையும் உடையவராயிருந்தனர். மேலும், அரசியலாற்றல், செல்வம் ஆகியவற்றுக்கு அவர்கள் பணிவதில்லை. இவற்றைக் கண்டு, கிரேக்கர் வியப்படைந்தனர். தட்சசிலை நாடுகளில் அவர்கள் தலைவனுயிருந்த தண்டிஸ்வாமி இதற்கோர் இலக்காயிருந்தார். அவர் சீடரில் ஒருவனுன கலியாணசுவாமிமட்டும் கடுந்தவ முடிவில் அலக்ஸாண்டரை

அணுக இணங்கினான். கிரேக்கர் இன்பவாழ்வில் ஈடுபட்டு, அவன் ஆரிய அறங்களை விடுத்து, அவர்களுடன் தங்கிவிட்டான். அவன் கிரேக்கரிடையே கலனாஸ் என்றழைக்கப் பட்டான்.

கிரேக்கர் கதேயர்கள் கோட்டைகள் பலவற்றையும் போராலும், அச்சுறுத்தலாலும், நயத்தாலும் பிடித்து வசப்படுத்திச் சதத்துரு (சட்லஜ்) ஆற்றின் பக்கம் வந்த போது, அவர்கள் போர்வீரர்கள் அதன்மேற் செல்ல மறுத்தனர். கிழக்கே மகதத்தை ஆண்ட நந்தர்களின் பெரும்படைபற்றிய செய்திகள் ஒருபுறமும், நாட்டுமக்கள் எதிர்ப்பும், கடுமைகளும், தாய்நாடு செல்லும் ஆர்வமும் மற்றொருபுறமாகப் படைகளை இவ்வகையில் தூண்டின. வேறு வகையின்றி அலக்ஸாண்டர் தன் பேராவலை அடக்கிக்கொண்டு மீள ஒருப்பட்டான். தன் வெற்றி யெல்லையில் அதன் அடையாளமாக, அவன் பன்னிரண்டு வெற்றித் தம்பங்களை நாட்டி வழிபாடுகள் நடத்தினான்.

தாய்நாடு திரும்புமுன் அலக்ஸாண்டர் பர்வதேசுரன் அரண்மனைக்கு வந்து நாட்டாட்சிக்கான திட்டங்களை வகுக்க எண்ணினான். அவன் குதிரையாகிய பூசிபாலஸ் இறந்த இடத்தில், அவன் பூசிபாலா என்று ஒரு நகர் அமைத்திருந்தான். இவ்விடத்தில் ஒரு பேரவை கூட்டி ஆவன செய்ய எண்ணியிருந்தான்.

## ௩. அறிவுக் களஞ்சியம்

கிரேக்க வீரன் ஒருவன் அரசியல் துறையில் உலகாளத் துடித்துக்கொண்டிருந்த அதே சமயத்தில், தென்னாட்டைச் சார்ந்த ஓர் இந்தியன் அறிவுத் துறையில் வெற்றிமேல் வெற்றிநாட்டி, வாகை சூடிவந்தான். அவனே பிராமண அறிஞனான சாணக்கியன்.

சாணக்கியன் இயற்பெயர் விஷ்ணுகுப்தன் என்பது. அவன் தமிழ் நாட்டினனாதலால் திரமிளனென்றும், குடல கோத்திரத்தில் பிறந்ததனால் கௌடில்யன் என்றும், சூழ்ச்சிகளில் வல்லவனாதலால் சாணக்கியன் என்றும், கருநிறமுடையவனாய்க் குள்ளனாயிருந்ததனால் அங்குலன் என்றும் அழைக்கப்பட்டான்.

சேரநாடு அக்காலத்தில் தமிழகத்தின் பகுதியாகவே இருந்தது. சாணக்கியன் அந்நாட்டில் முசிறி என்ற துறைமுகப் பட்டினத்தில் பிறந்தவன். தாய் வழியிலும், தந்தை வழியிலும் அவன் கல்வி கேள்விகளுக்குப் பேர் போன மரபில் வந்தவன். அலக்ஸாண்டர் தன் நாட்டு ஆட்சியுடன் நிறைவடையாததுபோலவே, அவன் தன் குடும்ப அறிவெல்லையுடன் நிறைவு பெறவில்லை. அவன் தன் தாய் தந்தையருடன் வடநாடு சென்று, காசி நகர் அடைந்து, ஆரிய வேத வேதாங்கங்களனைத்தும் கற்றான். அதன்பின் மருத்துவம், வானநூல், அரசியல், பொருளியல், முதலிய பல கலைகளையும் துறைபோகப் பயிலும் நோக்கத்துடன், அவன் தட்சசிலைப் பல்கலைக் கழகம் சென்றான். இங்கும் அவன் தன் புகழையும், தமிழ் நாட்டின் புகழையும் நிலைநாட்டினான். சொற்போரில் அவன் எல்லோரையும் வென்றதனால், மல்லநாகன் (அறிவுப் போரானை) என்றும், ஒருதடவை கேட்டவற்றை இரண்டு வாரமளவும் நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் பெற்றிருந்ததனால் பட்சில சுவாமி என்றும் பெயர்கள் சூட்டப் பெற்றான்.

புத்தக அறிவு, நினைவாற்றல் ஆகியவற்றுடன், அவன் தானாக ஆராய்ச்சிசெய்து, புத்தறிவு காணும் இயல்பினன். அரசியல், பொருளியல் ஆகியவைபற்றி அவன் தான் கண்ட முடிபுகளைத் தொகுத்து, 'அர்த்த சாஸ்திரம்'

என்ற ஒரு நூலை எழுதிக்கொண்டு வந்தான். நூல் எழுதி முடியாத நிலையிலேயே அதன் உரைகளும், முடிவுகளும் பலரால் பகர்த்தெழுதப்பட்டு, அறிஞருலகில் பரந்து பெரும்புகழ் பெற்றன. ஆயினும், தட்சசிலைப் பல்கலைக் கழகத்திலும், அரச அவையிலும், அவன் புரட்சிகரமான கருத்துக்களுக்கு முனைந்த ஆதரவு இல்லாததால், அவன் நந்த அரசர்களை அடுக்க எண்ணி, மீண்டும் கீழ்த்திசை நாடினன்.

காசிநகரில் ஆண்டுதோறும் அறிஞரிடையே அறிவுப் போட்டிகள் நிகழ்வதுண்டு. இவ்வாண்டு காசியரசன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குக் காசுமீரச் சால்வைகளும், பரிசுகளும் வழங்குவதாக வாக்களித்திருந்தான். சாணக்கியன் இப்போட்டியில் கலந்து, தன் திறமைகளைக் காட்டினன். அவன் தாய் அப்போட்டியின் முடிவை எதிர்பார்த்து வீட்டிலிருந்தாள்.

சாணக்கியன் தாய் தேவகிக்கு இப்போது ஐம்பத்தாறு வயது. அவள் மகள் பெண்ணாகிய கௌதமியும் அவளுடனிருந்தாள். தாய் தந்தையற்றவளாய்த் தேவகியிடமே வளர்ந்துவந்த அவளுக்கு இப்போது வயது பதினொன்று ஆயிற்று. தேவகியுடன் இச்சமயம் அவள் தோழியான மீனாட்சியும் வந்து பேச்சு கொடுத்துக் கொண்டிருந்தாள். பேச்சுக்கிடையே மீனாட்சி, "தேவூ, நீ சொல்வதையெல்லாம் பார்த்தால், நீ புத்திர சம்பத்தில் குறைவற்றவள்தான் என்பதில் ஐயமில்லை. இனி ஒரே ஒரு செய்திதான் குறை. இந்தச் சம்பத்தை வைத்தாளக் கொடுத்து வைத்த மருமகள் யாரோ!" என்று கௌதமியைக் குறும்பாகப் பார்த்துக்கொண்டே கூறினாள்.

கௌதமி தன்பக்கம் பேச்சு நகர்வதுகண்டு, தானும் நழுவி யோடிவிட்டாள். அவளைக் கண்டவுடன் யாரும்

அவள் வயதுக்கு மீறிய அறிவின் கூர்மையும், நடையமைதியும் உடையவள் என்று கூறிவிடுவர்.

தோழியர் இருவரும் கௌதமியின் குணச் சிறப்புப் பற்றியும், அவளுக்கும், சாணக்கியனுக்கும் விரைவில் ஏற்படவிருக்கும் திருமண ஏற்பாடுகள் பற்றியும், அதன் பின் தேவகி மேற்கொள்ளவிருந்த இராமேசுரப் பயண வாழ்வு பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். அதற்கிடையே கௌதமி இருவருக்கும் இலையிட்டுச் சிற்றுண்டியும், பருகுநீரும் படைத்து அன்புடன் உண்ண அழைத்தாள்.

இருவரும் உணவருந்தி இளைப்பாறும் சமயம், சாணக்கியனின் நண்பனான சித்தார்த்தகன், "அம்மா, அம்மா' என்று குதூகலத்துடன் கூவிக்கொண்டு, உள்ளே வந்தான். "அம்மா, அம்மா! ஐயாவுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. ஐயாவுக்கு வாகைசூட்டி, யானைமீது ஊர்வலமாக அழைத்துச் செல்கிறார்கள். வாருங்கள் அம்மா, பார்க்கலாம். சின்னம்மா, நீங்களும் வந்து பாருங்கள்" என்று அவன் மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

ஊர்வலத்தில் கும்பலுடன் கும்பலாகவே தேவகியும், கௌதமியும் நின்றிருந்தனர். ஆயினும், சாணக்கியனின் சுழல் கண்கள் மக்கள் திரளினிடையே அவர்களைக் கண்டுகொண்டன. அவன் யானையைவிட்டிறங்கித் தாயின் காலடியில் விழுந்து வணங்கினான். பின் அவர்களை அரசவைச் சிவிகைகளில் ஏற்றிப் பின்வரச்செய்து, முன்போல் யானைமீதேறி ஊர்வலம் சென்றான். அரசன் தந்த பரிசில்களையும், ஆடை அணிமணிகளையும் சாணக்கியன் தாயிடம் தர, அவள் கௌதமியிடம் கொடுத்தாள். கௌதமி மாமியையும், சாணக்கியனையும் வழிபட்டு

வாங்கிக்கொண்டாள். அரசன் அவர்களுக்கும் தனித்தனி ஆடையணிகள் வழங்கிப் பெருமைப்படுத்தினன்.

அரசவைவிருந்து சீருடனும், சிறப்புக்களுடனும் சாணக்கியன் வரும்போது, அவனுடன் நண்பரும், அறிமுகமானவரும் பலர் தொடர்ந்தனர். தாயையும், கௌதமியையும் முன்கூட்டி அனுப்பிவிட்டு, அவன் அவர்களுடன் அளவளாவிப் பேசிக்கொண்டு வந்தான். அவர்களில் பலரும் சாணக்கியனால் வீட்டுக்கு அழைக்கப்பட்டு, விருந்தினராக வந்தனர். இத்தனை விருந்தினரைக்கண்டு தேவகி மலைத்தாள். ஆனால் கௌதமி, "மாமி, தாங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். நான் எல்லாம் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள். உண்மையில், வந்தவர் அனைவருக்கும் போதிய இலைகளும், சிற்றுண்டியும் வருவதுகண்டு அவள் வியப்படைந்தாள். 'மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்' என்பது பழைய உரை. மந்திரியாகத்தக்க அறிஞனுக்கு மந்திரி போன்ற இடம் வகிக்கவிருக்கும் இந்நங்கை, அதற்கேற்ற, வரும் பொருளுணரும் திறம் பெற்றிருந்தாள் என்னலாம்.

அன்னை மூலம் இச்செய்தியறிந்த சாணக்கியன் புன்முறுவலுடன், 'அம்மா, இவ்வுலகில் பெண்கள் அறிவு, ஆண்களுக்கும் அமையவில்லை!' என்றான்.

ஒன்றிரண்டு வாரத்தில் நண்பர் புடைசூழ, ஏழையர் வயிறார, சாணக்கியன் கௌதமி மணவிழா நடந்தேறியது.

## ௪. நாடாளப் பிறந்த நம்பி

இந்தியா முழுவதையும் வென்றாள வேண்டும் என்ற அவாவோடு அலெக்ஸாண்டர் நாற்படைகளுடன் போர் புரியும் சமயத்தில், இந்தியாவின் பெரும் பகுதியையும் ஒன்றுபடுத்தி ஆளப்பிறந்த இளைஞன் தனக்கென அரசோ,

நாடோ, படையோ, சிறப்போ இல்லாமல் நந்த அரசர்களிடம் பணியாளாய் அமர்ந்திருந்தான்.

நந்த அரசர்கள் மற்றெல்லா இந்திய அரசர்கள் போலவே நாள்தோறும் ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்கு விருந்தளித்து வந்தனர். அவ்விருந்தில் இந்தியாவெங்கணுமிருந்து பிராமணர்கள் வந்து கலந்துகொள்வர். ஒரே சமயத்தில் பல்லாயிரவர் உண்ண உதவும்படி நந்தர் தம் தலைநகரில் அரண்மனையையடுத்து, மிகச் சிறந்ததோர் விருந்து மண்டபம் அமைத்திருந்தனர். இவ்விருந்து மண்டபத்தை மேற்பார்த்து, விருந்தினர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யும் பொறுப்பைச் சந்திரகுப்தன் தாங்கி நடத்தினான். அவன் அரசமரபினன் என்பதைப் பலர் அறிந்திருந்தனராயினும், அண்மையில் இந்தியாவின் பேரரசன் ஆகக்கூடியவன் அவன் என்பதை யாரும் கூறியிருக்க மாட்டார்கள்.

விருந்துக்கான ஏற்பாடுகளெல்லாம் சரிவர நடந்துகொண்டிருந்தன. நகரத்தின் அறுபத்துநான்கு கோட்டை வாயில்கள் வழியாகவும் பல நாடுகள், பல மொழிகள், பல வகுப்புக்கள் சார்ந்த பிராமணர்கள் வந்து வந்து, இலைகளின் பின் இட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்து வந்தனர். விருந்தில் தலைமை வகித்துண்ணும் அரசனும், அமைச்சரும், தலைமைப் புரோகிதரும் மட்டுமே வரவேண்டியிருந்தது. இந்நிலையில் விருந்து மண்டபத்தின் புறச்சூழல்களைச் சுற்றிப் பார்வையிடும் நோக்கத்துடன் சந்திர குப்தன் வெளியே வந்தான்.

விருந்து மண்டபத்தினுள் நுழைய அதனைச் சுற்றியிருந்த மதில் வட்டத்தின் வழியாகப் பல வாயில்களிருந்தன. ஒவ்வொரு வாயிலையும் நோக்கி ஒரு அரச பாதை இருந்தது. அவை ஒவ்வொன்றும் நன்கு செப்பனிடப்

பட்டிருந்தன. ஒரு பக்கத்திலுள்ள பாதை செப்பனிடாத பகுதியிலிருந்தது. புதிதாயிருந்த அப்பாதையின் இரு புறமும் புல் அடர்ந்து வளரத் தொடங்கிற்று. அப்புல் தரையில் ஓர் உருவம் குந்தியுட்கார்ந்து, ஏதோசெய்து கொண்டிருப்பதைச் சந்திர குப்தன் பார்த்தான். "எல்லோரும் விருந்திலோ, விருந்து வேலையிலோ ஈடுபட்டிருக்கும் வேளையில் இது யார் இப்படி ஒதுப்புறமாயிருப்பது, இதனை அறிவோம்' என்று எண்ணி, அப்பக்கம் அவன் தன் நடையைச் செலுத்தினான்.

அருகில் செல்லுந்தோறும், அவ்வுருவமும் அதன் செயலும் அவனுக்கு விளங்காப் புதிர்களாயிருந்தன. அவனுடைய கறுப்பு நிறமும், குள்ளமான உயரமும் அவன் (வட நாட்டினர் கருத்தில்) உயர் குலத்தவன் எனப்படுபவன் அல்லன் என்பதைக் காட்டிற்று. ஆனால், அதே சமயம் அவன் குஞ்சிக்கொண்டையும், பூணூலும், அவன் வட நாட்டிலுள்ள குடியானவர் மரபினனும் அல்லன் என்று காட்டின. அவன் செயல் தோற்றத்தினும் புதிதாயிருந்தது. அவன் புல்லைப்பிடுங்கி, அதன் வேருடன் அதனைக் கிள்ளி எடுத்து நெருப்பிட்டுப் புதைத்து, அச் சாம்பரை நீரில், கரைத்துக் குடித்து வந்தான்.

இவ்வுருவம் வேறு யாருமல்ல, சாணக்கியனே. பாதையைக் கெடுக்கும் களைப்புல்லை அடியோடழிக்கும் அவன் விடாப்பிடிவாதச் செயலே மேலே குறிப்பிடப் பட்டது.

சந்திர குப்தன் அவன் அருகில் சென்று, "அடிகளே! தங்கள் அமைதியான வேலையிடையே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். பெரியோர்கள் செயலின் பொருள் தெரியாமல் மலைப்பது சிற்றறிவுடைய உலக மக்கள் இயல்பு.

ஆகவே, அறிவு விளக்கம் பெறத் தங்களை அடுத்தேன். தாங்கள் யார்? ஊர் எது? தாங்கள் கரைத்துக் குடிக்கும் பூண்டு ஏதேனும் சிறந்த மருந்தா யிருக்கலாமோ என்று எண்ணுகிறேன்" என்றான்.

உயர் அரசியல் பணியாளன் ஒருவன் இவ்வளவு வணக்க ஒடுக்கமாகப் பேசுவது கேட்டுச் சாணக்கியன் மகிழ்ந்தான். "ஐய, நான் விருந்துக்கு வந்த பிராமணன். நான் காசியிலிருந்து வருகிறேன். என் பிறப்பிடம் தமிழ் நாட்டிலுள்ள முசிறிப்பட்டினம். நான் கரைத்துக்குடிப்பது அரியபூண்டு எதுவுமன்று, வெறும் புல்தான். அதன் நெடியதாள்களில் தடுக்குற்று நான் விழ இருந்தேன். எனக்கு ஊறு விளைத்த அதற்கும், அதன் கிளைகளுக்கும், வேருக்கும் ஒரு முடிவுகாண விழைந்தேன். சாணக்கியனுக்குத் தீங்கு இழைக்க நினைப்பவர் யாராயினும் இம் முடிவினின்று தப்பமாட்டார்" என்று சாணக்கியன் கூறினான்.

சந்திர: அறிவுடைப் பெரியீர், புல்லுக்கு உயிர்தானுண்டே தவிர அறிவு ஏது? அது குற்றம் செய்யுமா? அதனைத் தண்டிப்பதால் என்ன பயன்?

சாணக்: குற்றம் என்பதும், தண்டனை என்பதும் இவ்விடத்தில் சரியான சொற்கள் அல்லதான். தீமை என்றும், சரிசெய்தல் அல்லது தடுத்தல் என்றும் கூறலாம். மரத்தை ஒழிப்பது மரத்தின்மீது பழிவாங்குவதற்காக அன்று; மேலும் மரம் தழைக்காமலிருப்பதற்காக. தைத்த முள்ளை மட்டுமன்றித் தைக்கக்கூடியது என்று வழியில் கிடக்கும் முள்ளையும் அப்புறப் படுத்துகிறோமல்லவா? இன்று தீமை செய்யாத புல் நாளை வளர்ந்து தீமை செய்யும். ஆகவே, அறிவுடையோர் சென்ற கால

மும் நிகழ்காலமுமட்டுமன்றி, வருங்காலமும் நோக்கிச் செயலாற்றுவர்.

சந்திர: நீங்கள் கூறுவது உண்மையே. ஆனால், தாங்கள் புல்லைக் கல்லும்போது என் பகைவர் எல்லோரும் இவ்வாறு ஒழிக என்று கூறினீர்களே. அறிவுடையோர் எதன்மீதும் பகைமை கொள்ளலாமா? மேலும், பேரரசர் போன்றவர் மாறுசெய்யின், தங்கள் பகையைச் சாதித்தல் எங்ஙனம்?

சாணக்: நான் பகை என்றது என் பகைமையல்ல. நான் எப்போதும் ஆரிய தர்மத்திற்காகவே பாடுபடுபவன். ஆகவே, தர்மத்தின் பகைவரையே நான் என் பகைவர் என்றேன். அப்பகைவர் பேரரசராயினும், அதே தர்மத்தின் பெயரால், அவர்களை அழித்தொழிக்க என்னால் இயலும்.

சாணக்கியனை இப்போது சந்திரகுப்தன் நன்றாக அறிந்துகொண்டான். ஆனால், சாணக்கியன் இன்னும் சந்திரகுப்தனை அறியவில்லை. சந்திரகுப்தன் சாணக்கியனை நோக்கி, "தங்களிடம் நான் இன்னொரு சமயம் பேசுகிறேன். தங்களுக்கு இப்போது என்னால் ஆகவேண்டிய காரியம் ஏதேனும் உண்டா?" என்று கேட்டான்.

சாணக்: "உண்டு. இவ்விருந்தில் கலக்க நான் விரும்புகிறேன். அதற்கான சீட்டுக் கொடுக்கிறவனுமே சந்திரகுப்தன் என்ற விருஷலன்*. அவனைக்கண்டு சீட்டுப் பெறவேண்டும். அவனை எப்பக்கத்தில் காணலாம்?"

சந்திர: அடியேன்தான் அந்த விருஷலன். தங்கள் சீட்டு இதோ!

---

*புத்த சமயம் சார்ந்து ஆரியதர்மத்தினின்று நழுவி விட்டவர்கள் ஆசாரங்கெட்ட இழிமக்கள் என்ற பொருளில் விருஷலர் எனப்பட்டனர். இவர்கள் சூத்திரரோடு சூத்திரராகக் கணிக்கப் பட்டனர்.

சாணக்: அந்தோ, நான் ஆளடையாளமறியாமல், ஒரு பெருந்தன்மையான மனிதனைப் புண்படுத்திவிட்டேன். சாதிப் பெயரால் ஒருவரை அழைக்கும் நம் நாட்டின் கெட்ட வழக்கத்தால் இவ் விடையூறு நேர்ந்தது; மன்னிக்கவும்.

சந்திர: தாங்கள் இதில் தவறொன்றும் செய்யவில்லை. விருஷலனை விருஷலன் என்றழைப்பது தவறா? தங்கள் திருவாயால் எப்போதும் அப்படி அழைப்பதையே நான் விரும்புகிறேன்.

இது நிற்க. இப்போது நீங்களும் என்னை அறிந்து கொண்டீர்கள். நான் நந்தர்களால் கொலையுண்ட மௌரியனது பெயரன். என் பாட்டனார் தங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு, என்னைத் தங்கள் நட்பைப் பெறும்படி ஆணையிட்டுள்ளார். நான் விரைவில் தங்களைக் காண்கிறேன். சென்று வருக.

சாணக்கியன் சென்றதும், சந்திரகுப்தன் தன் தோழனை பகீரதனை அழைத்து, "சாணக்கியனுக்கு விருந்து மண்டபத்தில் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்துக் கொண்டு வெளியில் நில்லுங்கள். தேவைப்படும்போது அவனுக்கு வேண்டிய ஒத்தாசையும் செய்யுங்கள். அவன் வெளியேறும்போது பிறரறியாது அவனை யடுத்து அவனை எம்மிடம் இட்டுக்கொண்டு வாருங்கள்" என்று கூறி, அகன்றான்.

## ரு. சாணக்கியன் உரிமைப் போராட்டம்

நந்தர்களின் பேரரசாட்சியும், பெருஞ்செல்வமும் இந்தியாவெங்கும் பேர்போனவை. இவற்றுக்கு ஏற்ற பகட்டும், ஆரவாரமும் விருந்துமண்டபம் எங்கணும்

காணப்பட்டன. பிராமணர்கள் உண்ணுவதற்காக ஆயிரம் வெள்ளியிலைகளுக்குமேல் போடப்பட்டிருந்தன. அரசனும், அவன் உடன் பிறந்தார்களும், ஆசிரியரும் ஆக ஒன்பதின்மருக்கும் ஒன்பது பொன் இலைகள் இடப்பட்டிருந்தன. வெள்ளியிலைகள் பலவற்றின்முன் பிராமணர் பலர் ஏற்கெனவே உட்கார்ந்துகொண்டுவிட்டனர். அவற்றுள் ஒரு சிலவே மீந்திருந்தன. நந்தர் வராமையால், பொன் இலைகள் ஆளில்லாமலிருந்தன. பொன் இலைகள் ஒன்பது இருப்பது கண்டு, ஒன்பதாவது இலையாருக்கென்று சாணக்கியன் ஒருவனிடம் வினவினன். 'கல்வி, கேள்விகளில் ஒப்பற்ற, முதன்மையுடைய பிராமணர்க்கு அது உரியது. மற்றவர்கள் வெள்ளியிலையில் அமரவேண்டும்' என்றான் அவன்.

சாணக்கியன் வெள்ளி யிலைகளைக் கடந்து, பொன் இலை நோக்கிச் செல்வது கண்ட பணியாள் ஒருவன், 'ஐயா! அவ்விடம் செல்லவேண்டாம். உம்மிடம் சீட்டிருக்கிறதா? இருந்தால் வெள்ளியிலையில் உட்காரலாம். இல்லாவிட்டால் வெளியில் போகலாம். அடுத்த பந்திக்கு முன்சீட்டு வாங்கி வாரும்' என்றான்.

சாணக்: ஐயா, அவமதிப்பாகப் பேசவேண்டாம். என்னிடம் சீட்டிருக்கிறது. ஆனால், என் தகுதி வெள்ளியிலையில் இருப்பதற்குரியதன்று. தங்க இலையிலேயே நான் அமரப் போகிறேன். என் பெயர் சாணக்கியன். தட்சசிலையிலும், காசியிலும் பிராமணர்களில் அறிவுத் துறையில் தலைசிறந்தவன் என நன்கு மதிக்கப் பட்டுள்ளேன்.

சாணக்கியன் என்ற பெயர் கேட்டதுமே எல்லோர் கண்களும் அவன் பக்கம் திரும்பின. தலைப் பணியாளன் திகைத்து நின்றான். அதற்கிடையே சாணக்கியன் ஒன்பதாவது பொன் இலை முன் சென்று, தன் துண்டை விரித்து, அதன் முன் அமர்ந்துகொண்டான்.

பணித்தலைவன் சாணக்கியன் முன் வந்து வணக்க மாக, "ஐயா, தங்கள் கல்வி பற்றியும், தகுதி பற்றியும் நான் யாதொன்றும் கூறவில்லை. ஆனால், இந்த இருக்கை அரச குருவாகிய மாகனம் சுபந்துவுக் குரியது. இங்குப் பிராமணர்களுக்குத் தலைமை வகிப்பவர் அவரே. ஆகவே, தயவுசெய்து இவ்விடம் விட்டு, வெள்ளியிலை முன் சென்று அமரும்படி கோருகிறேன்' என்றான்.

சாணக்: நான் வறிதே போகமுடியாது. இது வரை உங்கள் அரசகுரு பிராமணர்கட்குத் தலைமை வகித்திருக்கலாம். யாரும் போட்டியிடத் துணியாம லிருந்திருக்கலாம். இன்று அவருக்கு அத்தலைமை கிடை யாது. உலகமொப்ப அத்தலைமையை நான் பெற்றிருக்கி றேன். என்னுடன் வாது செய்து அவர் வெல்வதானால் இவ்விடவுரிமையை விடுவேன். அல்லது விடமாட்டேன்.

பணித்தலைவன் மேன்மேலும் சினம் கொண்டு, அவரை எழுந்து செல்லத் தூண்டினான். அங்குள்ள பிராமணர்களில் பலர் வேடிக்கை பார்த்தனர். சிலர் தலைவ னுடன் சேர்ந்து, அவனை விலகிவிடும்படி அச்சுறுத்தினர். ஒரு சிலர் இந்த நந்தர் சபையில் உன் வாதம் செல்லாது. மரியாதையாக எழுந்துவிடுக என்று எச்சரித்தனர்.

சாணக்கியன் ஒன்றுக்கும் அசைபவனாகக் காணப்பட வில்லை. அவனிடம் நீதியும், சட்டமும் சொல்ல வந்தவர் களை அவன் தன் முழுப்பேச்சுத் திறத்தையும் காட்டி வாயடைத்தான். பிராமணர்கள் அதற்குமேல் என்ன செய்ய முடியும்! பணியாளர்களோ சினங்கொண்டு, அவனை அப்புறப்படுத்த முயன்றனர். ஆனால், அவன் பிராமணனானதால், மேலிடத்து உத்தரவின்றி, அவனை அவர்கள் தீண்டத் துணியவில்லை. ஆயினும், பணித்தலை

வன் 'ஐயா! எங்கள்மீது பின்னல் தாங்கள் குறைகூறக் கூடாது. இங்கே இப்படி அமர்ந்திருப்பது உங்கட்கு நன்மையைத் தராது. வீணுக அவமதிப்பை விலைக்கு வாங்கவேண்டாம். நந்தர்களின் கோபம் கொடிது' என்றனன்.

**சாணக்:** அரசர் கோபத்திற்குப் பிராமணர் என்றும் பயப்படுவதில்லை. அப்படி பிராமணர்மீது கோபப் படும் அரசனும் அரசனல்லன். அவன் ஆட்சி கணமும் நில்லாதொழியும்.

சாணக்கியன் துணிகரச் சொற்கள் நந்தர் ஆட்சியில் எவரும் முன் கேட்டிராதவை. ஒளித்துக்கூட அத்தகைய சொற்களை எவரும் கூறுர். ஆகவே, பொது மன்றிலேயே அயலான் ஒருவன் இவ்வாறு கூறத் துணிவான் என்று யாரும் கனவு கண்டது கூட இல்லை. ஆகவே, யாவரும் 'என்ன நேருமோ, எது விளையுமோ? நாம் இத்தகைய செய்திகளில் மாட்டிக்கொள்ளாதிருப்பதே நல்லது' என்று வாய்புதைத்திருந்துவிட்டனர்.

இதற்கிடையில் நந்தர்களும், அரச குரு மாகனம் சுபந்துவும், அமைச்சர்களான இராட்சசன், நக்ரணுசன், சகடலன் ஆகியவர்களும் வந்தனர். யாவரும் தத்தம் இருக்கையில் அமர்ந்தனர். அரசகுரு தம் இருக்கையில் குள்ள உருவுடன் கருங்காக்கைபோன்ற ஓர் அயலான் துணிந்து இறுமாந்து வீற்றிருப்பது கண்டு, கடுஞ் சினங்கொண்டு, பணியாட்களை அதட்டி, அவனை அப்புறப் படுத்தும்படி கட்டளையிட்டான். பணியாட்கள் தீண்டவும் முடியாமல், வெளியேற்றுதிருக்கவும் துணியாமல், சாணக்கியனிடம் கடுமையாக 'எழுந்துவா ஐயா, இப்புறம்' என்று அச்சுறுத்தினர். அதுகண்டும், சாணக்கியன் அசையவில்லை.

சுபந்து: (கோப நகை நகைத்து) மூடப்பிராமணனே! நீ யார் இருக்கையில் வந்து இருக்கத் துணிந்தாய் என்று உனக்குத் தெரியுமா?

சாணக்: மூடப்பிராமணன் இங்கில்லை, அறிஞர்களிடையேயும் நன்கு மதிக்கப்பட்ட ஒருவனே இங்கிருப்பது. இந்த இருக்கை யாருக்கு உரியது என்பதும் நன்கு அறிவேன். இன்றைய உலகின் தலைசிறந்த பிராமண அறிஞனுக்கு அது உரியது. அந்த உரிமைபற்றித்தான் நான் வந்திருக்கிறேன். நான் சாணக்கியன். தட்ச சிலையிலும், காசியிலும் போட்டியில் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தலைமை நிலை பெற்றவனே நான்.

சாணக்கியன் என்ற பெயர் கேட்டதும், சுபந்துவுக்குத் தன்னையறியாமலே கிலி ஏற்பட்டது. நந்தர்களிடம் தனக்குள்ள செல்வாக்கினால் அவனைத் துரத்துவது தனக்கு ஒரு பொருட்டல்லவாயினும், தன்னை அறிவுப் போட்டிக் கழைப்பதானல் பிராமணர் காண அவமதிப்புப் பெறவேண்டி வருமே என்று அவன் தயங்கினான். சபையின் எதிர்பாராத அவல நிலை கண்டு, எவரும் எதுவும் தோன்றாது திகைத்தனர்.

நந்த அரசன் சுகற்பன் தன் தம்பியருள் கடைக்குட்டியான தனானந்தனை நோக்கி "தனா! இது என்ன, உன் குறும்புத்தனத் திட்டங்களுள் ஒன்றா?" என்று கேட்டான். தனானந்தன் வயதுக்கேற்றபடி குறும்புத் தனம் உடையவனேயாதலால், அரசனுக்கு இவ்வையம் ஏற்பட்டது இயற்கையே. ஆனால், தனானந்தன் "இல்லை அண்ணா! அரச குருவினிடம் என் குறும்புகளைச் செய்யும் அளவு நான் அறிவிலியல்ல. இது யார் சூழ்ச்சியோ, ஒன்றும் எனக்கும் விளங்கவில்லை" என்றான். அப்படி

யானல் இதனை இப்படியே விட்டுவைத்தல் தகாது. நம் அரச குரு நம் கண்முன்பே அவமதிக்கப்படுவதா? விரைவில் இவ்விடையூற்றை ஒழித்துத் தீமை செய்தவரை ஒறுத்தடக்குக' என்றான்.

தனநந்தன் நிலைமையின் நெருக்கடி கண்டு தானே எழுந்து, சாணக்கியனிடம் சென்று, 'அப்பா, உன் நாடகம் ஆட வேறு இடமும் சமயமும் பார்த்துக்கொள். உடனே எழுந்து அப்பால் செல்' என்றான். சாணக்கியன் அவன் கூறியதைச் செவியில் வாங்காது, அரசனை நோக்கி, 'இங்கிருப்பவர்களில் அறிவிற் சிறந்தவன் நானே. நான் அதை மெய்ப்பிப்பேன். உங்கள் விதிப்படி நானே இதில் இருப்பதற்குரியவன்' என்றான்.

தன: இந்த வாதமெல்லாம் இங்கே எதற்கு? எழுந்து செல் என்றால் எழுந்து செல்.

சாணக்: அரசன் விதிப்படி இங்கிருக்கிறேன். என்னை எழுந்துசெல்லக் கட்டளையிடும் உரிமையும் அரசருக்கே உண்டு.

அரசன் தானே தலையிட்டு 'ஆம். நான் தான் கட்டளையிடுகிறேன். எழுந்து செல்' என்றான்.

சாணக்: அரசர் இரு திறமும் ஆராய்ந்தன்றோ ஒரு முடிவு கூறுவார்.

சுகற்பன்: (தனக்குள்) இது ஏதடா சனி. (வெளிப்படையாக) ஆராய்ந்து தான் சொல்லுகிறோம். அவ்விடத்தில் இருக்கத் தகுந்தவர் சுபந்துவே. எழுந்து செல்.

சாணக்: அரசே, சுகற்பன் என்ற தங்கள் பெயரின் பொருள் நல்ல தீர்ப்பாளன் என்பதாகும். இருவரையும் பரிசோதனை செய்தன்றித் தாங்கள் முடிவு கூறுவது எவ்வாறு?

சுகற்பன்: (சீற்றத்துடன் தலைநிமிர்ந்து சாணக்கியனை நோக்கி) இளைஞனே, அரசனாகிய என்னிடமா எதிர்த்து எதிர்த்துப் பேசுகிறாய்? அரசனுக்கு நீதிபுகட்ட நீ யார்?

சாணக்: 'ஊகமுளதேல் அரசன் சிறுவர் உரையையும் கொள்ளல் வேண்டும்' என்பது நூல் நெறி. மேலும் தங்கள் விதியைத் தாங்களே மதிக்காவிட்டால் வேறு யார் மதிப்பார்கள்? என்னை இவ்விடம் விட்டகற்ற இரு வழிகள் உண்டு. ஒன்று என்னைவிட அறிவுடையவர் உண்டு என்று காட்டுவது. மற்றொன்று இவ்விருக்கை அறிவிற் சிறந்தவர்களுக்கன்று, ஒரு தனி ஆளுக்கு என்று கூறி விடுவது. இவ் விரண்டில் ஒன்றுசெய்தால் நான் விலகி விடுவேன்.

சுகற்பன்: அடே முட்டாள்! உன் வாதங்களுக்காக நான் காத்துக்கொண்டிருக்கவில்லை. நீ இவ்வூர் வளமை தெரியாத தெற்கத்தியனா யிருக்கிறாய் என்று இதுவரை சற்று இரக்கம் காட்டினேன். உடனே வெள்ளியிலை ஒன்றின்முன் உட்கார். அல்லது நீ பிராமணன் என்றும் பாராமல், உன்னைப் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன்.

பணியாட்கள் மெல்லச் சாணக்கியன் பக்கமாக வரத் துணிந்தனர். சாணக்கியன், 'இது என்ன அரசநீதி? இங்கே அமைச்சர்களில்லையா அரசனுக்கு நீதி கூற' என்று கூவினான்.

சுகற்பன் மந்திரிகள் பக்கமாக நோக்கிப் பெருமிதத்துடன் "இது மந்திரிகள் சொற்கேட்டு நடக்கும் அரசன் நாடல்ல என்று இப் பேதை அறியான். நம் மந்திரிமார்கள் நாம் கூறியபடி கேட்பர்" என்று கூறி நகைத்தான்.

சாணக்: அரசே, மகத அரசர் ஆரியதர்மத்தின் பாதுகாவலர்கள் என்ப் புகழ் பெற்றவர்கள். ஆகவே, நீதி காட்டும்படி கோருகிறேன். நான் பிராமணரில் வேத அறிவில் மட்டுமன்றி, அரசர்க்கு வேண்டிய அரசியல் துறை அறிவிலும் பயிற்சி யுடையவன். மேலும், இம் மன்றம் பிராமணர் நிறைந்தது. ஆகவே, என்னுடன் சொற்போரிட்டன்றிச் சுபந்துவுக்கு இவ்விடம் தரா திருக்க வேண்டுகிறேன்.

சாணக்கியன் சொற்கள் செவிடன் காதில் சங் கொலியாயின. அரசன் படைவீரர்களை ஏவி, அவன் தலை யைப் பிடித்து அடித்து வெளியேற்ற உத்தரவிட்டான். மந்திரியான இராட்சசன் மட்டும் அப்போதும் சாணக் கியனிடம் வணக்கமாக, 'பிராமணீயத்தின் மதிப்பை எண்ணியாவது வாதாடாமல் செல்லும்படி கோருகி றேன்' என்ருன்.

சாணக்: நான் அரசன் விதித்த விதிப்படியான உரிமையையே கேட்கிறேன்.

இராட்: அரசனே இடும் உத்தரவு அவன் விதியை அகற்றவல்லது தானே. அரசன் ஆணை சரியாயினும், தவருயினும் பின்பற்றப்படவே வேண்டும்.

சாணக்: மற்ற மக்களுக்கு அது சரி. பிராமணர் அரசன் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்களல்லர். நீதிக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள். அரசன் நீதியை எதிர்க் கும் உரிமை பிராமணர்களுக்கு உண்டு. இவ்வகையில் அவர்கள் பொதுமக்கள் நிலையிலிருந்து வேறுபட்டவர்கள் என்று நூல்கள் கூறும்.

வாதங்கள் எதுவும் முடியாமல் மந்திரிகள் திட்டுதலி லும், அவமதிப்பிலும் இறங்கினர்கள். 'இவனோடு பேசிப் பயனில்லை. இவன் வாய்த்துடுக்குச் செயல்துடுக்கிலேயே

அடங்கும். கருங்குரங்கு மாதிரியிருக்கும் இவனைக் கருங்குரங்கு மாதிரி நடத்துவதுதான் சரி. பிராமணனும் பிராமணன்! அறிவிற் சிறந்தவனும்! சுபந்துவையும் பார், இவனையும் பார். சூத்திரர்கூட இவனைப் பார்க்கிலும் உருவில் நல்ல ஆரியர் என்று கூறலாம். இவன் பிராமண னல்ல. எவனோ மிலேச்சன். தென்னாட்டில் பிராமண வேடமிட்டு உலகை ஏமாற்ற வந்திருக்கிறான்." என் றெல்லாம் அவதூறுகள் எழுந்தன.

அரசன் எழுந்து, தானே சாணக்கியனை உதைக்கச் சென்றான். அதற்குள் படைவீரன் ஒருவன் அவன் குடுமி யைப் பிடித்திழுத்து, அவனை வெளியே தள்ளினான். சாணக்கியன் உடல் நிலத்தில் புரண்டது. அவன் கந்த லாடைகள் தாறுமாறாகக் கிழிந்தன. அவன் பூணூல் புழுதி படிந்தது.

## ௬. வெகுளியும் வெஞ்சினமும்

ஆலகால விடத்தைப்போன்ற கடுஞ்சீற்றத்துடன் சாணக்கியன் எழுந்து நின்று 'வசிட்டர்மீது விசுவாமித்தி ரர் போர்தொடுத்ததுபோல், இன்று அரசன் பிராமணீயத் தின்மீது போர் தொடுத்துள்ளான். இன்று முதல் நந்தர் வீழ்ச்சி நாளாகக் கொள்க. நந்தர் முடி நிலத்தில் புரண்டா லன்றி, இனி நான் இச் சிதைந்த குடுமியை முடிப்பதில்லை. பிராமணர் யாவரும் இதற்குச் சான்று' என்று வெஞ் சினம் கூறினான். இது கேட்டு அரசன் பின்னும் சினந் தெழலானான். ஆனால், தலைமையமைச்சன் 'இப் பித்தன் உளறலை யாரும் கவனிக்கவேண்டாம். விருந்து நடக்கட் டும்' என்றனன்.

சாணக்கியன்மீது கைபட்டு அவன் அவமதிக்கப்படு வது கண்ட பிராமணர் பலர் கண்களில் தீப்பொறி பறந்

ததைக் கவனித்த இராட்சசன் படைவீரர்களுக்குச் சமிக்ஞைசெய்து, சாணக்கியனை மண்டபத்துக்கு வெளியே கொண்டுசென்று தள்ளிவிடும்படி கட்டளையிட்டான்.

சாணக்கியன் வெளியேறியபின் அரசன் "நம்மை எதிர்க்கத்துணிந்த இப்பதரை உயிருடன் விடலாமா? அவனைத் தூக்கிலிட விரும்புகிறேன். உங்கள் எண்ணம் என்ன?" என்று மந்திரிகளைக் கேட்டான்.

இராட்சசனும், மந்திரிகளில் சிலரும் அரசனைச் சாந்தப்படுத்தினர். "இவனை ஒரு பொருட்டாக எண்ணுவது நம் பெருமைக்கு ஒவ்வாது. இவனைத் தண்டியாது துரத்துவதே இவன் ஏலமாட்டாமையை நன்கு எடுத்துக் காட்டும்" என்றனர்.

ஒரு சில பிராமணரைத் தவிர்த்துச் சாணக்கியன் கோபத்தை யாரும் மதிக்கவில்லை.

சாணக்கியன் கடுஞ்சீற்றம் கண்டு, உள்ளூர மகிழ்ந்தவன் பகீரதன் மட்டுமே. "இனிச் சந்திர குப்தனுக்குச் சாணக்கியன் உதவுவது நிச்சயம். 'விருந்து மண்டபத்தில் அவனைக் கவனித்துக்காக்க' என்று சந்திரன் கூறினனே. அவன் முன் நோக்கே முன்நோக்கு. தவிர, நந்தர்கள் எவ்வளவு விருந்து நடத்தினும் பிராமணர்களை இனி ஏய்க்க முடியாது. அரசன் ஆற்றலுக்கு அவர்கள் அடங்கி நடந்தாலும், அவர்கள் உள்ளம் குமுறுவது உறுதி" என்று அவன் எண்ணமிட்டான்.

சாணக்கியன் கோபம் சற்றுத் தணிந்தபின், பகீரதன் அவனை அண்டி உரையாடினன். "அறிஞர் பெரும! தாங்கள் இவ்வளவு தூரம் சென்றிருக்கக் கூடாது. எங்கே உங்கள் உயிருக்கு ஊறுவிளையுமோ என்று நான் கவலையுடனிருந்தேன்' என்றான். 'நண்பா, நான் முன்கூட்டி

எதுவும் ஆராயாது செய்பவன் என்று எண்ணவேண்டாம். இந்திய அரசர்கள் வேறு எதுவும் துணிந்து செய்வர். பிராமணர்களை அண்டத்துணியார். ஏனெனில், பிராமணர் இருகூருடைய வாள்கள். மேலும் இந்தப் பிராமணன் கைவரிசைகளை நந்தர் அறியார். இந்த விருந்து மண்டபத்திலேயே என் ஒற்றர்கள் ஆங்காங்கு உள்ளனர். எனக்கு எந்தத்தீங்கு நடந்தாலும் அவர்கள் காரியம் மிஞ்சுமுன் செயல் செய்வர். உனக்கோ, சந்திர குப்தனுக்கோ—என், இந்த நந்தர்களுக்குக்கூட—என்னளவு ஆற்றல் வாய்ந்த படை இருக்கமுடியாது. ஏனென்றால், என் ஒற்றர் படையமைப்பு அரசுகள் பேரரசுகள் எல்லையை எல்லாம் தாண்டி, இந்தியா முழுவதும் பல்லாயிரம் கண்களுடனும், கைகளுடனும் வேலை செய்து வருகின்றனர். ஆம், இனி சந்திரகுப்தன் உரிமைகட்கு உயிர் வந்தது. அவன் ஆரிய அறமுறைக்கு ஆக்கம்தர உறுதி கூறின், நந்தர் முடிமட்டுமென்ன, இந்திய உபகண்டத்தின் தனிப்பெரு முடியையே அவனுக்குத்தரக் கூடும்' என்றான்.

பகீரதன் மகிழ்ச்சியுடனும், வியப்புடனும் இதனைக் கேட்டுப் பூரித்தான்.

அன்றிரவு சாணக்கியன் சந்திரகுப்தன் மாளிகையில் அவனுடன் அளவளாவினான்.

## எ. மந்திராலோசனை

சந்திரன் சாணக்கியனுக்கு நேர்ந்த அவமதிப்புக்காக மிகவும் மனம் வருந்தினான். சாணக்கியன் "இது வருந்தும் நேரமன்று. எனக்கு வேறு ஆறுதல் தேவையில்லை. இன்று முதல் நான் நந்தர்கள் பிறப்பு வைரி. ஆரிய அறத்தை உள்ளிருந்து அழிக்கும் நந்தரையும் சரி, வெளியிலிருந்து எதிர்க்கும் யவனரையும் சரி, இனி ஒரு கை பார்க்கிறேன்.

அவர்களை நீ எதிர்ப்பதானால் உனக்கு நான் ஆயிரயானைப் பலமாவேன்' என்றான்.

சந்திர: அறிஞர் பெரும! தங்கள் சித்தம் என் பாக்கியம். தங்கள் திட்டங்களைக் கூறுக.

சாணக்: கேள். நான் பிராமண அறிஞனாயினும், ஆரிய அறமுறைகாக்க ஏற்கெனவே இந்தியாவெங்கும் எண்ணற்ற ஒற்றர்களை அமர்த்தியுள்ளேன். அவர்கள் எல்லா இடத்திலும், எல்லா வேடங்களிலும் செயலாற்று கின்றனர். அவர்கள் எல்லையற்ற ஆற்றலுடையவர். ஆனால், அவர்களை யாரும் கண்டறிந்துகொள்ள முடியாது. அவர்கள் ஒருவரை ஒருவர்கூட குழூஉச் சொற்கள் மூலமன்றி அறியார். ஒற்றர் ஒருவர் ஒத்துழைப்பு நாடும் போது 'முனிவர்களுக்கு வணக்கம்' என்று கூறுவர். பக்கத்திலுள்ள ஒற்றர் முன்வந்து நாகர்களுக்கும், தேவ மாதர்கட்கும் வணக்கம் செலுத்துகிறேன் என்பர். ஒற்றர் கள் மீது ஐயம் தோன்றின் மூன்றாவது குழூஉச் சொல் அவர்களிடமிருந்து தெளிவ கோரும். அச்சொல் 'பிரமா வுக்கும் குசத்துவசனுக்கும் வணக்கம்' என்பதாகும். 'திங்களஞ் செல்வனுக்கு எம் வாயுறை' என்று மறு மொழி கிடைத்தால் அவர்கள் நம்பகமானவர் என்று காணலாம். இவ்வொற்றர்கள் இனி உனக்கு எங்கும் உதவி செய்வர்.

சந்திர: தங்கள் திட்டம் ஆபத்து நிறைந்ததாகக் காணப்படுகிறது.

சாணக்: ஆம். அங்ஙனம் தோன்றும். ஆனால், பாரதநாட்டில் ஆரியதர்மம் பிழைத்த அரசன் வாழ்வுதான் அதனினும் ஆபத்து நிறைந்தது என்பதை நீ காண்பாய். அரசர்களைக் காப்பது அவர்கள் கூலிப்படைகளல்ல. ஆரிய தர்மமே. ஆகவே அஞ்சற்க.

சந்திர: நான் எனக்காக அஞ்சவில்லை. என் வாழ்க்கையை நீங்கள் அறிந்தால் இது தெளிவாகத் தெரியும். நான் அஞ்சுவது தங்களுக்காகவே.

சாணக்: அதையே நானும் எதிர் பார்த்திருந்தேன். தாங்கள் தூய க்ஷத்திரிய வீரர். வீரர்க்குரியனவென நூல்களில் கூறப்படும் முப்பத்திரண்டு பண்புகளும் தங்கள் பால் அமைந்துள்ளன.

சந்திர குப்தன் தன் பெருமை கேட்க விருப்பமின்றிப் பேச்சை வேறுவழியில் திருப்பினான். "ஐயா, தங்கள் பால் எனக்கு ஒரு விண்ணப்பமுள்ளது" என்றான் அவன்.

சாணக்: என்னாலாவது எதுவும் தங்கள் சேவையில் ஈடுபடுத்தச் சித்தமே.

சந்திர: எனக்குத் தாங்களே குலகுருவாயிருந்து உதவவேண்டும் என்று விரும்புகிறேன்.

சாணக்: இவ்வளவு பெரிய சீடனையடைய எந்தக் குருவும் பெருமையடையவேண்டும். மனமகிழ்ச்சியுடன் உங்களைச் சீடனாய் ஏற்றோம். இன்றுமுதல் என் உபதேசம் தங்களுக்கு வழிகாட்டும். முதல் உபதேசம் இதுவே: என்றும் ஆவும் ஆனியற் பார்ப்பனமாக்களும் பேணுக. மக்கள் அனைவரும் அவரவர் வருணநீதியில் நின்று கடனாற்றும்படி செய்து ஆரிய அறநெறி காக்க."

சந்திர: (தலைவணங்கி) அங்ஙனமே செய்வதாக உறுதி கூறுகிறேன்.

சாணக்: இனி நம் செயலுக்கு அடிகோலுவோம். நம் திட்டம் எதுவும் வெளியில் தெரியவேண்டாம். உண்மை அரசியல் வீரம் வீரத்தைக் காட்டுவது மட்டுமல்ல. வேண்டும்போது வீரத்தை மறைத்து அவசியமானால் கோழையாக நடிப்பதும் அரசியல் வீரமேயாகும்.

சந்திர : அங்ஙனமே செய்து வருகிறேன். இப்போது நீங்கள் இவ்விடம் விட்டு விரைந்து சென்றுவிடல் வேண்டும். நந்தரின் மந்திரிகள் தங்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தூண்டினாலும் தூண்டக்கூடும். என் பணியாள் ஒருவன் வெளியே வேகமாகச் செல்லும் குதிரை யூர்தியுடன் நிற்கிறான். இதோ தங்கள் செலவுக்கு இப்பொற்கிழி உதவும். பணம்பற்றிய கவலை எதுவும் வேண்டாம். என் பாட்டன் இதற்கெனப் பெருந்திரள் விட்டுப் போயிருக்கிறார்.

சாணக்கியன் : தங்கள் தொலைநோக்கு விரைவில் வெற்றிதரும். போய்வருகிறேன்.

## அ. ஜீவசித்தியின் சூழ்ச்சித்திறம்

சாணக்கியன்மீது நந்தன் மந்திரிகள் நடவடிக்கை எடுக்கக் கூடும் என்று சந்திரகுப்தன் அஞ்சியது சரியா யிற்று. அன்றிரவே மந்திரி சுபுத்திசர்மனும், தனனந் தனும் முதல் மந்திரியான இராட்சசன் மனத்தைக் கலைத் தனர். சாணக்கியன் அரசியல் சூழ்ச்சியில் மட்டுமன்றி, அதற்குத் துணைசெய்யும் எல்லாத் துறைகளிலும் வல்ல வன் என்பதையும், அவன் புகழும், செல்வாக்கும் நாவ லந் தீவுமுழுவதும் பரந்துள்ளன என்பதையும், அவன் அவமதிப்புக்காளான காரணத்தால் விருந்து மண்டபத்தி லேயே பல பிராமணர் அவன்மீது அனுதாபம் காட் டினர் என்பதையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

சூழ்ச்சித்திறத்தில் ஒப்பற்றவன் என்ற பெயர் எடுத்த இராட்சசன் இவற்றைப் பொறுமையுடன் கேட்டு மறுமொழி புகன்றான்.

"நீங்கள் கூறுவது யாவும் உண்மைதான். சாணக் கியன் திறமையை நான் குறைவாக நினைக்கவில்லை.

உண்மையில் உங்களைவிட நான் அதனை நன்கு அறிவேன். ஆனால், அவனை எதிர்க்கும் முறைகள்தான் எனக்குப் பிடிக்கவில்லை. இன்று அவனை அவமதித்ததன் மூலம் அவன் சக்திதான் அதிகரித்துள்ளது. அவனைப் பிடித்தடைப்பதனாலோ தண்டிப்பதனாலோ வெளிப்படையாக எதிர்ப்பதனாலோ கூட அவன் ஆற்றல் குறையாது; பெருகத்தான் செய்யும். அவனை வெல்லும் வகை அவனை நண்பனாக்குவது என்றால் நீங்கள் தவறாகக் கோபம் கொள்ளக்கூடும். ஆயினும் உண்மை அதுவே. சுபந்துவைப்போல் சோற்றுக்குச் சுமையான ஒரு பிராமணனை வைத்துக்கொண்டு நந்த அரசன் அழுகிறான். சாணக்கியனைப்போன்றவன் அவ்விடத்தில் இருந்தால் என்னிலும் மிகுதியான ஆதாயம் உண்டு. நான் குடிகளைக் கசக்கிப் பிழிந்து ஈயாய்த்திரட்டி ஆண்டுக்கு 80 கோடிப் பொன் தான் ஈட்டமுடிகிறது. ஒரு காசு பணந்திரட்ட வகை கூறமுடியாத சுபந்து போன்றவர்கள் அதில் பெரும் பகுதியை விழுங்கி ஏப்பமிடுகின்றனர். சாணக்கியனோ புதுப்புது வரிகளுக்கெல்லாம் தன் அர்த்த சாஸ்திரத்தில் வழி வகுத்திருப்பதாகக் கேள்வி—அதுவும் குடிகள் அதிருப்தி இல்லாத வழிகளாம்!"

சுபுத்தி: அமைச்சரேறே; அறிஞரை அறிஞர் புகழ்வது இயற்கை; ஆனால், எதிரியைப் புகழ்வதால் எத்தகைய நன்மையுமில்லை. அவனை நண்பனாக்கும் திட்டம் இனி நடக்கமுடியாதது. இனி அவன் நண்பனாகக் கூடியது சந்திரகுப்தனுக்கே. அந்நட்பு வலுக்குமுன் இருவரையும் தனித்தனி கவனிக்கவேண்டும். தங்கள் ஆராய்ச்சிகளை விடுத்துச் சாணக்கியனை அடக்கவும், சந்திரகுப்தனை மடக்கவும் வழி தேடுங்கள். சாணக்கியன் மந்திர தந்திரம் வல்லவன். அவன் மந்திரம் அடக்கும் மந்திரவாதியும்

நமக்கு வேண்டும். இவ்விரண்டுக்கும் ஏற்பாடு செய்வது இன்றியமையாதது.

சுபுத்தியின் அறிவுரை ஏற்கப்பட்டது. சந்திர குப்தனைப் பிடித்துச் சிறையிட உத்தரவிடப்பட்டது. சாணக்கியன் சூழ்ச்சியை எதிர்க்க இராட்சசனும் கங்கணம் கட்டிக்கொண்டான். மேலும் அவன் சூனியங்கள் செய்வதாகக் கருதப்பட்டதால் அதற்கு எதிர் சூனியம் செய்யத்தக்க மந்திரவாதிகளையும் அமைச்சர் தேடலாயினர்.

சாணக்கியன் இதற்கிடையில் தன் ஊர்தியில் சந்திர குப்தன் தந்த பொன்னுடன் வர்த்தமானபுரம் என்னும் நகரத்திற்குச் சென்று, அங்குத் தன் நண்பனான ஒரு வணிகச் செல்வன் வீட்டில் தங்கினான். அன்றிரவே அவன் தன் ஒற்றர் தலைவனும் பள்ளித் தோழனுமான இந்து சர்மனிடம் சென்று பேசினான். "நண்பனே, பிராமண அறிஞரும் வணிகச் செல்வருமே இதுவரை நம் கூட்டுறவில் இருந்து வந்தார்கள். இப்போது ஓர் ஒப்பற்ற இளவரசனும் நம் கூட்டாளியாயிருக்கிறான்" என்று சாணக்கியன் இந்துசர்மனிடம் கூறிச் சந்திரகுப்தனைச் சந்தித்த வரலாறு தெரிவித்தான்.

மேல் வேண்டிய திட்டங்களையும் சாணக்கியன் எடுத்துரைத்தான். "இனி ஒரு முக்கியமான காரியம் உன்னாலாக வேண்டிருக்கிறது. மந்திரவாதமறிந்த புத்த சன்னியாசியாக மாறி நீ ஜீவசித்தி என்ற பெயருடன் நந்தர்களிடம் போய்ப் பணியிலமர்வாயாக. சந்திர குப்தனை மறைவாகக்கண்டு, நந்தர் பற்றிய இரகசியங்களை அறிந்துகொள். சமயம் பார்த்து அவற்றின் மூலம் அவர்கள் நம்பிக்கையைப் பெற்றுச் சாணக்கியன் மந்திரத்தை

மாய்ப்பதாகக் கூறிச் செயலாற்று. அவ்வப்போது மேல் வருவனவற்றிற்கு நம் ஒற்றர் மூலம் செய்தி தெரிவிப்பேன்'' என்று கூறினன்.

தன் நண்பனாகிய தலைவன் தன்மீது ஒப்படைத்த பொறுப்பை இந்துசர்மன் விருப்புடன் ஏற்று நந்தரிடம் சென்றான். சந்திரகுப்தனைத் தனியாய்க் கண்டு நந்தர் பற்றிய பல மறைவான இரகசியங்களை அறிந்தபின் சுபுத்தி சர்மனிடம் சென்று, தான் மந்திர தந்திரம் வல்லவ னென்றும், பாரதநாட்டிலிருந்து பிராமணரைஒழிப்பதே தன் நோக்கம் என்றும் கூறினன். சுபுத்தி இத்தகையவன் தான் சாணக்கியனை ஒழிக்க நல்ல கருவி எனக் கொண்டு நந்தர்களிடம் அவனை வேலைக்கமர்த்தினன். ஜீவசித்தி யென்ற புத்த தந்திரி சாணக்கியனை எதிர்த்தழிக்க வந்து விட்டான் என்ற பேச்சு நந்தர் நண்பர்களிடையே அடி பட்டது.

ஜீவசித்தியாகிய இந்துசர்மன் நந்தரிடம் வந்த சில நாட்களுக்குள் அவர்கள் அவன் மந்திர சக்தியில் நம் பிக்கை கொள்ளும்படியான சூழ்ச்சி ஒன்றைச் செய்தான். சாணக்கியன்மீது தான் ஏவும் வினைகளை அரண்மனையிலுள்ள பிராமணபூதம் ஒன்று தடுக்கிற தென்றும், அரண்மனையினுள் புதையுண் டிருக்கும் பிராமணன் உடலை அகற்றினாலன்றி அது அகலாதென் றும் அவன் கூறினன். அத்தகைய உடல் அங்கிருக்க முடியாதென்று யாவரும் கூறினர். ஜீவசித்தி பணியாட் கள்மூலம் படுக்கையறையின் தளத்தைத் தோண்ட அங்கே ஒரு எலும்புக்கூடு அகப்பட்டது. நந்தர்களுக்குக் கூடத்தெரியாத இவ்விரகசியத்தைக் கண்டுபிடித்ததனால் ஜீவசித்தியின் மந்திர ஆற்றலில் யாவருக்கும் நம்பிக்கை வலுத்தது.

ஜீவசித்தி நந்தர்களுக்குக் கொடுக்கும் பாலில் சில மருந்துகளைப் போட்டுக் காய்ச்சல் உண்டுபண்ணி, அது சாணக்கியன் ஏவலால் வந்ததெனக் கூறினான். பின் வேறு மருந்தால் குணப்படுத்தித் தன் மந்திரத்தால் குணமாயிற்று என்றான்.

ஜீவசித்தி நந்தர்களைத் தூண்டி பிராமணர்களுக்கு விருந்தளிப்பதை நிறுத்தினான். 'உழைக்கும் மக்களிடமிருந்து வரிவாங்கி உழையாது கொழுக்கும் இச் சோம்பேறிகளுக்கு என் செலவுசெய்யவேண்டும்' என்று அவன் கேட்டான். பிராமணர் தெய்வப் பிறப்பு என்றும், அரிய ஆற்றலுடையவர் என்றும் நந்தர் சார்பில் கூறப்பட்டது கேட்டு, அவன் சீற்றங்கொண்டு, அப்படியானால் அவர்களுக்கு வேறு இரத்தம், பிறருக்கு இரத்தம் வேறா? மருத்துவர் நால்வருணத்தவர் இரத்தமும் பரிசோதித்துப் பார்க்கட்டும் என்றான். வெறும் சொல்லுடன் நில்லாமல் பரிசோதனை நடத்தி யாவும் ஒரு நிறமே எனக் காட்டினான். இவ்வாற்றால் அவனிடம் பிராமண வைரிகளான புத்தர்களுக்கும், நந்தர்களுக்கும் உறுதியான நம்பிக்கை ஏற்பட்டது.

ஜீவசித்தியின் பிராமணப் பழிப்பு இராட்சசனுக்கு அவ்வப்போது திகில் தந்தது. "பிராமணர்களெல்லோரும் தூய உள்ளத்தவர் அல்லர் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். சாணக்கியன் போன்ற பிராமணர் இருப்பது யாவரும் அறிந்ததே. ஆனால், பிராமணர் யாவரும் சூழ்ச்சிக்காரர் என்பதும் சரியாக முடியாது" என்றான்.

'கெட்டவர்களை ஆதரிப்பவர்கள் கெட்டவர்களாயல்லாமல் எப்படியிருக்க முடியும்' என்றான் ஜீவசித்தி.

சாத்திரங்களில் பிராமணர் உயர்வு சொல்லப்பட்டிருக்கிறதே என்ற இராட்சசன் வாதத்திற்கு அவன் 'பிராமணர் எழுதிய சாஸ்திரங்களில் வேறு என்ன எதிர்பார்க்கக்கூடும்!' என்றான்.

இவற்றை யெல்லாம் கேட்ட நந்தர்கள் உள்ளூர மகிழ்ந்தனர்.

ஆனால், ஜீவசித்தியின் புகழும், செயலும் பிராமணர் அனைவரும், ஜீவசித்தியையும், அவரை ஆதரிக்கும் நந்தரையும் பலபடியாக வெறுக்கத் தூண்டின. 'எவ்வழி அந்தணர் அவ்வழி உலகே' என்ற உண்மையை உணர்ந்த ஜீவசித்தியும் தன் செயல்வெற்றி உணர்ந்து மகிழ்ந்தான்.

## க. மௌரியன் வரலாறு

சந்திரகுப்தன் ஆற்றலும், புகழும் மிகுந்துகொண்டு வந்ததால், அவனை உடனே கொன்றழிக்க வேண்டுமென்று நந்தர் துணைவர் சிலர் கூறினர். 'அவனை நாடு கடத்துவதே சரி; ஏனெனில், அவனைக் கொல்வதால் எதிரிகளுக்கு வெறி ஏற்படும். மக்கள் ஆதரவு மிகும்' என்று ஜீவசித்தி எடுத்துரைத்தான். ஆயினும், மற்ற அமைச்சரும், துணைவரும் கொல்வதே சிறந்ததென்றனர். காற்று வீசும் திசையறிந்து ஜீவசித்தியும் தன் கருத்தைத் திருத்திக் கொண்டு பிறர் முடிவை ஆதரித்தான். இச் செய்தியை ஜீவசித்தி சந்திரகுப்தனுக்கு மறைவாய் அறிவித்தான். ஆனால், அதற்கு முன்பே அதனை அறிந்த சாணக்கியன் தன் நண்பன் சித்தார்த்தகனை அனுப்பி, மாற்றுருவுடன் சந்திரகுப்தனை அழைத்து வருமாறு பணித்தான்.

சந்திரகுப்தன் வீட்டின் முன் மறுநாட் காலை துணி மூட்டைகளுடன் ஒரு வண்டி வந்து நின்றது. சித்

தார்த்தகனே வண்டிக்காரனுருவில் வந்திருந்தான். வண்டியோட்டியின் துணைவனாக வேடங்கொண்டு, சந்திரகுப்தன் அவனுடன் புறப்பட்டான். நந்தர்கள் சந்திரகுப்தனைப் பிடித்துக் கொடுப்பவர்கட்குப் பதினாயிரம் பொன் பரிசளிப்பதாகப் பறையறைந்திருந்தனர். காவலரும், பணியாளரும் எங்கும் தேடினர். போவார் வருவார் எல்லாம் வழியில் சந்தேகத்துடன் பரிசோதிக்கப்பட்டனர். சித்தார்த்தகனும், சந்திரகுப்தனும் பல இடங்களில் அவர்களைச் சந்தித்தனர். ஆனால், அவர்கள் உடையில் மாறுவேடம் கொண்டதன்றி, நடை பேச்சுத் தோற்றங்களிலும் மாறுபட்ட நடிப்புடையவரா யிருந்தனர். மேலும், அச்சந்தவிர்த்துக் காவலர்களுடனேயே ஊடாடி உறவுகொண்டு வந்தனர். எனவே, அவர்கள் எத்தகைய இடையூறுமின்றி நகர் எல்லை கடந்தனர். "பகைவன் கண்ணடியில் நிற்பதைவிடப் பாதுகாப்பான இடம் வேறு கிடையாது" என்ற சாணக்கியன் பொன்மொழிகளைச் சித்தார்த்தகன் அடிக்கடி மேற்கோளாக எடுத்துரைத்து வந்தான்.

நான்கு நாள் பயணத்துக்குப்பின் சந்திரகுப்தன் சித்தார்த்தகனுடன் வர்த்தமானபுரம் வந்து சேர்ந்தான். இவ்விடத்தில் சாணக்கியனுக்கு உடந்தையாயிருந்த நண்பனான ஒரு வணிகச்செல்வன் வீட்டில் அவன் தங்கினான் சாணக்கியன் அவனை அவ்விடம் வந்து கண்டு ஆரத்தழுவிக்கொண்டான். சந்திரகுப்தன் இளைப்பாறிக் குளித்து உணவருந்தியபின் இருவரும் அமர்ந்து உரையாடலாயினர்.

**சாணக்கியன்:** நாம் மேலே சென்று திட்டமிடுவதற்குமுன், தங்கள் வரலாறும், தங்கள் பாட்டன் வரலாறும் முற்றிலும் அறிய விரும்புகிறேன். அவற்றின்

இரகசியங்களில் சில ஜீவசித்திக்கு ஏற்கெனவே பேருதவியாயுள்ளன. பிற செய்திகளும் நமக்கு உதவக் கூடும்.

சந்திரகுப்தன்: ஆம். உண்மையில் அவற்றை உங்கட்கு அறிவிப்பதே என் வேலையைத் தொடங்குவதன் முதற்படியாகும். அதனை ஆதிமுதல் விரிவாகக் கூறுவேன்.

"மௌரியன் மகத அரசன் மகாநந்தியின் மகன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவன் தாய் முரா பிப்பல வனத்து மோரியர் மரபில் வந்தவள். இம்மரபு விராத க்ஷத்திரிய* வகுப்பைச் சேர்ந்தது. எனவே, மௌரியன் பட்டத்துக்கு உரியவனல்லன் என்று அந்நாளைய பிராமண அறிஞர் கருதினர். ஆயினும், அவன் ஒப்பற்ற திறமையால் அவன் மதிப்புடையவனா யிருந்தான்.

"மகாநந்திக்கு மகாபத்மன் என்றொரு நண்ப னிருந்தான். இவன் தாய் சூத்திர மரபினள். தந்தை க்ஷத்திரியனாயினும், வறுமையால் அம்பட்டத் தொழில் செய்து வந்தவன். மகாபத்மன் அத்தொழிலில் உயர் திறமடைந்து, அரசனின அம்பட்டனாய் அவன் நட்பாலும், தன் திறத்தாலும் படைத்தலைவனும், அமைச்சனும் ஆனான். அரசியிடம் அவன் மறைவாக நட்புக்கொண்டு, அரசனையும், அவன் இரு புதல்வர்களையும் கொன்று, அவளை மணந்து அரசனானான். அவர்கட்குப் பிறந்த பிள்ளைகளே நந்தர்கள்.

---

* ஆரிய தர்மத்திலிருந்து புத்தருடன் பழகியதால் வழுவியவர்கள் விராதர் ஆவர். அவர்கள் விருஷலர் போல அதை எதிர்த்து மீறியவர் அல்லர். வரலாற்றாசிரியர் சந்திரகுப்தனை மகாபத்ம நந்தனுக்கும், முரா என்ற அம்பட்ட நங்கைக்கும் பிறந்தவனாகக் கூறுவர்.

"மகாபத்மன் நல்ல வீரன். திறமான நல் ஆட்சியுடையவன். ஆகவே, மக்கள் அவன் ஆட்சியை விரும்பி ஏற்றனர். மௌரியன் அவன் படைத் தலைவனயிருந்து வட இந்தியாவின் பெரும் பகுதியையும், தெக்கணத்தையும் வென்ருன்.

"மகாபத்மன் ஆட்சியை எதிர்க்கத் துணிந்தவன் சகடலன் என்ற பிராமண அமைச்சன் மகன் ஒருவன் மட்டுமே. அவனை அரசன் கொன்று, அரண்மனைக்குள்ளேயே புதைத்தான். ஜீவசித்தி கண்டெடுத்த எலும்புக்கூடு அவனுடையதே யாகும்.

"மகாபத்மனுக்குப் பின் அரசுரிமைக்கு வந்தவன் இன்று மகதத்தையாளும் நந்தர்களில் மூத்தவனுகிய சுகற்பனே. நந்தர்கள் தந்தையைப்போல் திறமையுடையவர்களல்ல. ஆகவே நாடு சீர் குலையலாயிற்று. படை வீரர்கள் நந்தர்களை வெறுத்தனர். ஆயினும், மௌரியன் எல்லார் அன்புக்கும் பாத்திரமானுன். நந்தர்கள் அவன் மீது பொருமை கொண்டு, அவனை நீக்கித் தம் தோழனுன பத்திசாலனைப் படைத் தலைவனுக்க விரும்பினர். ஆயினும், நேரிடையாக அவனை எதிர்க்க அஞ்சி, அவர்கள் அவனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தனர்.

"மகாநந்தி கங்கைக் கரையில் ஒரு பெரிய நிலவறைக் கூடம் அமைத்திருந்தான். பாஞ்சாலத்தை ஒழிக்கத் திட்டமிடுவதாகக்கூறி, நந்தர்கள் மௌரியனையும், அவன் நண்பர்களையும் இரகசிய ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைத்தனர். நானும் உடன் சென்றிருந்தேன். நாங்கள் உட்சென்றதும், தந்திரமாக எங்களை அவர்கள் உள்ளேயிட்டடைத்தனர். நூறு பேருக்கும் ஒரு நாள் உணவு மட்டும் வைக்கப்பட்டிருந்தது. எங்களை உள்ளே பூட்டிப்

பட்டினி யிட்டுக்கொல்லவே நந்தர்கள் சூழ்ச்சி செய்தனர் என்பது தெளிவாயிற்று.

"எங்கள் நூறுபேருக்கும் இருக்கும் உணவை உண்டால் அத்தனை பேரும் சில நாளில் இறக்கவேண்டிவரும். ஒருவராவது பிழைத்திருக்க முடியுமானல், பழிக்குப்பழி வாங்கக்கூடும்' என்று மௌரியன் எண்ணினன். நந்தர்கள் பகைமைக்கு ஆளாகாதவனும், இளைஞனுமான என்னையே அவர்கள் இவ்வகைக்கு வற்புறுத்தித் தேர்ந்தெடுத்தனர். அதன்பின் மௌரியன் எனக்கு வேண்டும் அறிவுரைகள் யாவும் தந்து 'சாணக்கியன் என்று ஓர் இளைஞன் உளன். அவன் அறிவிலும், சூழ்ச்சித் திறத்திலும், நற்குணத்திலும், நாட்டுப்பற்றிலும் மிக்கவன். எப்பாடு பட்டாயினும் அவன் உதவியைப்பெற்று நம் குடிப்பெயர் நிறுவுவாய்' என்று கூறினன். மேலும் பழைய மகத அரசர் சேமித்து வைத்திருந்த பொற்குவை இருக்குமிடத்தையும் அவன் எனக்குக் கூறினன். மகாபத்மன் திடீரெனமகாநந்தியைக்கொன்றதால் இதை அவன் அறியமாட்டான்.

"எனக்கு வேண்டுவனவற்றைச் செய்துமுடித்தபின், கண்ணீரும் கம்பலையுமாக என்னிடம் விடைபெற்றுக்கொண்டு, அவர்கள் தத்தம் வாளில் வீழ்ந்து மாண்டனர். ஒரு மாதம் சென்றபின் கதவு திறக்கப்பட்டு நான் விடுதலையடைந்தேன். நான் ஒன்றும் வர்மம் கொள்ளாத சிறுபிள்ளையாக நடித்துத் தப்பினேன். ஆயினும், வெளிவந்ததும், அவர்கள் எனக்கு ஒரு கடுமையான கட்டளையிட்டனர். சிங்கபுர அரசன் சிங்கக் கூண்டொன்றில் ஒரு சிங்கத்தை வைத்து அனுப்பியிருந்தான். சிங்கம் கூண்டினுள் சுற்றித்திரிந்துகொண்டிருந்தது. மகதநாட்டில் யாராவது ஒருவர் கூண்டு திறவாமல் அதனை வெளியே ஓட்டி

விட்டால், மகதநாட்டின் அறிவில் சிங்கபுரத்தாருக்கு நம்பிக்கை உண்டு என்று சிங்கபுர அரசன் சொல்லியனுப்பினும்!. இச்செயலை முடிக்கவே நந்தர் என்னை விடுவித்ததாகக் கூறினர். இங்ஙனம் உயிர் ஆபத்துக்களில் தள்ளப்படுவதைவிட மற்றவர்போல் இறப்பது நன்று என்று நான் கூறினேன். அதன்பேரில் "இத்தடவை வெற்றி பெற்றால், பின் என்றும் எத்தகைய தொல்லைக்கும் ஆளாக்குவதில்லை' என்று அவர்கள் உறுதி கூறினர்.

"சிங்கபுரத்தார் என்ன சூழ்ச்சி செய்திருக்கக்கூடும் என்று நான் அனுமானித்தேன். பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கூண்டினுள் நீட்டினேன். சிங்கம் உண்மையில் மெழுகினல் செய்த பொறியமை பாவையே ஆதலால், அது உருகியோடிற்று. சிங்கபுரத்தார் கோரிக்கையும் நிறைவேறிற்று. நந்தர்கள் என்னைப் புகழ்ந்து பாராட்டினர். அதுமுதல் மதிப்புடன் நடத்தப்படுகிறேன். விருந்து மண்டப மேற்பார்வையும் எனக்குத் தரப்பட்டது.

"மௌரியன் கூறியபடி சென்று மகத அரசர்களின் பொற்குவைவயை எடுத்து வைத்திருக்கிறேன். குடிப்பழி நீக்கி, அரசுரிமை நிறுவ, அது பேருதவியா யிருக்கும். மற்றச் செய்திகள் யாவும் தாங்கள் அறிந்தவையே".

மௌரியன் வீரக்கதையைக் கேட்டுச் சாணக்கியனும் அவன் நண்பர்களும் வியப்பும், பெருமிதமும் அடைந்தனர்.

## ௧௦. அலக்ஸான்டர். சூழ்ச்சிப் பொறி

சந்திரகுப்தனுடன் சாணக்கியன் தம் எதிர்காலத் திட்டம்பற்றி ஆலோசித்தான். அவர்கட்குச் சாதகமான பல செய்திகளிருந்தன. நந்தர்கள் திறமற்ற ஆட்சியும், கொடுமைகளும் குடிமக்கள் வெறுப்பை உண்டாக்கின.

அவர்கள் குடிகளின் பொருள்பறித்து வாழ்ந்து வந்ததனுல், படைகளுக்கு ஊதியம் ஒழுங்காகத் தரப்படவில்லை. அதனுல் படைவீரர்களும் நந்தரை வெறுத்தனர். மேலும், அவ்வீரர் தம்மை அன்புடனும், ஆண்மையுடனும் நடாத்திய மௌரியன்மீதும், அவன் பெயரன் சந்திரகுப்தன் மீதும் பற்றுடையவரா யிருந்தனர். பிராமணர் பலவழியிலும் நந்தரை வெறுத்தனர். இவற்றுக்கெல்லாம் மேலாகச் சந்திரகுப்தனிடம் போதிய பொருளும், வீரமும்; சாணக்கியனிடம் அறிவும், நல்ல ஒற்றர் படையும் இருந்தன. ஆனுல் இவ்வளவுக்கிடையிலும், படையோ, அயலரசர் நட்போ இல்லாமல் நந்தரை வீழ்த்த முடியாதென்று சாணக்கியன் கருதினுன். ஆகவே, மேற்கு மன்னர் உதவியும், கூடுமாயின் அலக்ஸாண்டர் முதலிய வெளிநாட்டார் உதவியும் பெறவேண்டும் என்று கருதப்பட்டது.

சந்திரகுப்தன் "வெளிநாட்டார் உதவினுல் அவர்கள் நம் நாட்டை அடிமைப்படுத்த நேருமே" என்று தயங்கினுன். சாணக்கியன் "பொருள்மட்டும் தருவோம்" என்று பேசுவோம். அதற்கிணங்காதவரை விட்டுவிடுவோம். மேலும், நம் விருப்பத்திற்கு ஊறு செய்பவரை ஐவகைச் சூழ்ச்சிகளாலும் வெல்வோம்" என்று தேற்றினுன்.

மேற்கு நாடுகள் நோக்கி, அவர்கள் பயணம் செய்கையில், பல இடங்களில் நந்தர் ஒற்றர்கள் சோதனைக்கு அவர்கள் இலக்காயினர். சந்திரகுப்தன் பிராமணவேடங் கொண்டு, சாணக்கியன் சீடனுய்ச் சென்ருன். ஒரு காயஸ்தப் பணியாளன் அவன் பிராமணனுகக் காணவில்லையே யென ஐயுற்ருன். சாணக்கியன் "காயஸ்தனுகிய உன்னை இப்போது பிராமணன் என்னலாமே. என்னைச் சூத்திரன் என்னலாம். இக்காலத்தில் உருவம் கண்டு எது

கூறமுடியும் என்ருன். பணியாளன் தன் வடிவழகின் புகழ்கேட்டுப் புன்முறுவல் செய்து அகன்ருன். மற்ருேரிடத்தில் சமித்தார்த்தகன் சாணக்கியனுடன் வீம்புப் போரிட்டும், இன்னேரிடத்தில் பாம்புப்பிடாரனுய்வந்து பாம்பை வெளியில் தப்பவிட்டும் பிறர் கவனத்தை மாற்றினுன்.

மகதப் பேரரசின் எல்லையான இந்திரப்பிரஸ்தத்தில் (டில்லி) அலெக்ஸான்டர் படையெடுக்கக்கூடும் என்ற எண்ணத்தால், அதனைத் தடுக்கும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவ்விடத்தில் பழைய தலைவனிடம் சாணக்கியன் பேச்சுக்கொடுத்து, அவன் நந்தரை வெறுத்தவன் என்றும், சந்திரகுப்தன் நண்பனென்றும் கண்டு, அவன் ஆதரவும், உதவியும் பெற்ருன். சதத்ரு ஆற்றுக்குச் சென்றதும், அலக்ஸாண்டர் நந்தரை எதிர்க்காது பின்னடைந்தது கேட்டனர். அப்போதும் அவனை அடுத்து, நந்தர்மீது அவனை ஏவும் நம்பிக்கையைச் சாணக்கியன் இழக்கவில்லை.

ஜீலம் ஆற்றங்கரையில் அலக்ஸான்டர் (அளகசுந்தரர்) பர்வதேசுவரனுடன் தங்கியிருந்தான். சந்திரகுப்தனும், சாணக்கியனும் அங்கே சென்று அவனைக் கண்டனர். அலக்ஸான்டர் பல இந்திய அரசருடன் பெருந்தன்மையாய் நடந்துகொண்டான் என்று சாணக்கியன் கேள்விப்பட்டிருந்தான். ஆகவே, அவன் தம்மிடமும் பெருந்தன்மையாய் நடப்பான் என்று எண்ணினுன். ஆனுல், சாணக்கியன் எதிர்பார்த்தது வீணுயிற்று. இந்தியா முழுவதும் தன் வெற்றிக்குரியது என்றும், தன் உரிமைக்குக் கட்டுப்பட்டுத் தன் ஆலோசனையாளர்களுடனிணங்கி ஆள்வதானுல் மட்டுமே உதவக்கூடும் என்றும் அவன் கூறிவிட்டான். அதோடு மட்டுமன்றி, சந்திரகுப்தன் செலவும்,

பெருந்தேர்கையும் கொடுப்பதாகக் கூறியதும், அவன் "நான் வணிகனல்ல, என் பகைவர்களும் கூலிப்படைக ளல்ல", என்று முழங்கி எழுந்தான். சந்திரகுப்தன் "அப்படியானால் தங்கள் உதவி தேவையில்லை. அரசரு டன் அரசர் என்ற நட்பு முறையிலேயே உதவி கோரி னோம். இப்பெருந்தன்மை எங்கள் நாட்டரசரிடம் உண்டு. அதைத் தங்களிடம் எதிர்பார்த்தோம். அது தவறு என் றுணர்ந்தோம். போய்வருகிறோம்" என்றெழுந்தான்.

"தன்னுடன் சரிநிகராக ஒரு மனிதன் பேசுவதா, அதிலும் தன் நாட்டின் பண்பை இகழ்வதா" என்று, கடுஞ்சினங்கொண்டு அலெக்ஸான்டர் "என்னை எதிர்த்த உன் துடுக்குத்தனத்துக்கு உன்னைத் தூக்கிலிடவேண்டும். இதோ" என்று கூறிப் பணியாளர்மூலம் அவனைச் சிறை யிட்டான். சாணக்கியன் இவ் விடையூற்றைக்கண்டு, எதிர்செயலாற்றும் எண்ணத்துடன் மெல்ல நழுவினான்.

சந்திரகுப்தன் பர்வதேசுரனின் நிலவறை ஒன்றில் அடைப்பட்டான். வெளியேசெல்ல வழியில்லை என்று கண்டபின், அவன் தான் தப்புவதற்கான வழி சாணக்கிய னிடமேயுள்ளது என்று அவன்மீதே சிந்தனையை ஓடவிட் டான். எந்தக் கணமும் அவன் எவ்வகைச் சூழ்ச்சி யேனும்செய்து, அதன்மூலம் கதவு திறக்குமென்று அவன் கதவையே நோக்கியிருந்தான். ஆனால், முன்னிரவில் கத வுக்கு மாறாகச் சுவரே குதித்தெழுந்து அகன்றது. இது சாணக்கியன் மாயமாய்த்தானிருக்கவேண்டும் என்று ஆவலுடன் அவனைச் சந்திரகுப்தன் எதிர்பார்த்தான். ஆனால், வந்தது சாணக்கியனன்று; ஓர் பெண் உருவே.

சாணக்கியன் சூழ்ச்சியைவிடப் பெரியதொரு சக்தி, தன்னை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பதை அவன் அறியவில்லை.

## கக. கல்லையும் பிளக்கும் காதல்

பர்வதேசுவரன் அரண்மனையில் அவன் மைத்துனனாகிய சிங்கபுரத்தரசன் மகள் சாந்தாவதி வந்து தங்கியிருந்தாள். சந்திரகுப்தன் சிங்கப்பொறிக் கூண்டைத் திறவாது ஓடவைத்த கதையைக் கேட்டதுமுதல் அவள் அவன் புகழில் ஈடுபட்டாள். அவள் வளரவளர அவளுடைய காதலும் வளர்ந்துவந்தது. காதலனுருவம் அறியாமலே அவள் மனம் காதலில் ஈடுபட்டது. அம்மனத்தை அவள் தன் அத்தையாகிய பர்வதேசுவரன் மனைவி சுவர்ணமயினிடம் மட்டும் கூறி, அவள் அனுதாபம் பெற்றிருந்தாள்.

அத்தைவீட்டில் சாந்தா இருக்கும்போது சந்திரகுப்தன் அங்கு வர இருப்பதை அறிந்து அவள், பரபரப்படைந்தாள். அரசியை இழுத்துக்கொண்டு, அவள் மேல் மாடியில்வந்து சந்திரகுப்தனும், சாணக்கியனும் பேரவை வருவதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள். அவளையும் அறியாமல் அவள் ஒரு மல்லிகை மலரைச் சந்திரகுப்தன் வழியில் இட்டாள். தொலைவில் அவள் மதிமுகத்தை நோக்கி, அதன் அழகில் ஈடுபட்ட சந்திரகுப்தன் அச்செயலைக் குறிப்பாலறிந்து, யாரும் அறியாமல் அதை எடுத்து வைத்துக்கொண்டான்.

அரசியின் கேலிச்சொற்களுக்கிடையே சாந்தாவதி சந்திரகுப்தன் அலக்ஸாண்டரிடம் உரையாடியதைக் கூர்ந்து கவனித்து வந்தாள். அலெக்ஸாண்டர் பொறியில் அவன் வீழ்ந்தது கண்டதே அவள் உள்ளம் துடிதுடித்தது. அரசியை விடாப்பிடியாக வற்புறுத்தி, அவள் சந்திரகுப்தனை விடுவிக்க உதவும்படி தூண்டினாள்.

சாணக்கியன் தன் ஒற்றர்கள் மூலம் இளவரசியின் மனப்பான்மையையும், அரசியின் ஆதரவையும் அறிந்து,

அரசியுடன் தொடர்புகொண்டான். இளவரசி சந்திர குப்தனை மீட்டு வருவதென்றும், வாயிலில் சாணக்கியன் ஆள் ஊர்தியுடனிருப்பதென்றும் ஏற்பாடு செய்யப் பட்டது. அரசிக்கு நிலவறையுட்புகும் மறைவழி தெரியுமா தலால், சுவரில் மறைந்த அம்மறைவழி மூலமாகவே இளவரசி சந்திரகுப்தனை விடுவிக்க உட்புகுந்தாள்.

புகுந்தது சாணக்கியன் என்று எண்ணிச் சந்திர குப்தன் "ஐய" என்று கூற வாயெடுத்தான். பின் தான் எதிர்பார்த்தது சாணக்கியனை என்று விளக்கி, "ஓர் இளவரசி என்னை விடுவிப்பாள் என்று நான் எண்ண வில்லை" என்றான்.

**சாந்தா:** அப்படியானால் இளவரசி விடுவித்தது தங்களுக்கு விருப்பமில்லையோ!

**சந்திரகுப்தன்:** "அன்று அன்று, எதிர்பாராத தாயினும், அதனை எத்தனையோ மடங்கு விரும்புகிறேன் என்பதை இது காட்டாதா" என்று கூறித் தன் பையில் வைத்திருந்த மல்லிகையைத் தந்தான்.

காதலர் சிறிது நேரம் காதல் பேச்சில் செயல் மறந் திருந்தனர். பின் சாந்தா வெளியேறுவதன் அவசியம் பற்றிக் கூறினாள். சந்திரன் "உன்னை ஆபத்தில் மாட்டி நான் போகமாட்டேன்" என்றான். சாந்தா, "நான் விரைவில் என் தந்தை வீடு செல்வேன்? கவலை வேண்டாம்" என்றாள்.

"விடுதலையை விட இப்போது உன் காதலே எனக்குப் பெரிது. நீ தாய்வீடு சென்றபின் என் காதலன்றோ சிறைப்படும்!" என்றான் சந்திரன். சாந்தா, "நான் எங்கி ருப்பினும் தங்களுக்குரியவளே. தாங்கள் ஊரறிய என்னை மணக்கும்வரை உங்களை என் மனத்தகத்தே சிறைவைப்

பேன்" என்று கூறி நகைத்தாள். "தொடர்ந்து தாங்கள் பேரரசரானபின் என்னை மறக்கக்கூடும்" என்றாள். சந்திரன் "அப்படியன்று; நீ பிரியுமுன்பே கந்தருவமுறையில் உன்னை மணப்பேன். நாடறியப் பின் திருமணம் நிகழ்த்தலாம்" என்றான். அதன்படியே அச்சிறைக் கூடத்தில்தானே அரசியும், சாணக்கியன் தூதனும் சான்றாக மணம் நிறைவேறியது. அதன் முடிவில் சந்திரகுப்தன் தன் கணையாழியை அவளிடம் தந்து, பிரியா விடை பெற்றகன்றான்.

சந்திரகுப்தன் தப்பிவிட்ட செய்தி யாருக்கும் தெரியாமலேயிருந்தது.

மறுநாளே சாந்தாவதியும் தாயகம் சென்றாள்.

அரசி சுவர்ணமயி நயமாக இச்செய்திகளைக் கணவனிடம் கூறி, அவனனுமதிபெற்றுத் தமயனுக்கு மருமகள் மணவகையில் தான் கொண்ட கருத்தையும், சாந்தாவின் மனநிலையையும் கூறி, மணத்திற்குப் பெற்றோர் இணக்கம் பெற்றாள்.

சந்திரகுப்தன் காட்டில் துயிலும்போது ஒருநாள் சிங்கம் ஒன்று அவன் பக்கமிருந்தது. அது அவனுக்கு ஊறு செய்யாதகன்றது. அது கண்டு சிங்கம் அவனைக் காவல்செய்து நின்றதாகச் சாணக்கியன் வெளியிட்டான். சந்திரகுப்தன் பேரரசனாவான் என்ற நம்பிக்கையையூட்டி, இச்செய்தி அவன் புகழைப் பெருக்கிற்று. இதனால் சிங்கபுரத்தரசனும் அவன்மீது மதிப்புக்கொண்டான். அவன் விருப்பப்படி சாந்தாவிற்குச் சுயம்வரம் நடத்தப்பட்டது. சாந்தா அதில் சந்திரகுப்தனுக்கு மாலையிட்டு, அவனைப் பாரறிய மீண்டும் மணந்து மணவுறுதி செய்தாள்.

அலெக்ஸாண்டர் சந்திரகுப்தனைத் தண்டிக்க எண்ணிப் பணியாட்கள் முன் அவனை இட்டுவரும்படி கூறிய போது தான், அவன் தப்பிய செய்தி யாவருக்கும் தெரிய வந்தது. பர்வதேசுரன் தனக்கு ஒன்றுந் தெரியாதெனக் கூறிவிட்டான். தன் எல்லாக் கோபத்தையும் அலக்ஸான்டர் அடக்கிக்கொண்டானாயினும், சாணக்கியன் சூழ்ச்சி இது வென நினைத்துப் பிராமணர்மீதும், பிற இந்தியர்மீதும், அடிக்கடி வஞ்சம் தீர்க்கலானான். இதனால் அவன் மீதுள்ள வெறுப்பு பன்மடங்காயிற்று.

## கஉ. கிரேக்கப் பேரரசின் வீழ்ச்சி

அலக்ஸாண்டர் தன் தாய்நாட்டை நோக்கித் திரும்பிச் செல்லும் பயணம் இந்தியாவிலேயே முள்நிறைந்ததாயிருந்தது. அதில் சந்திரகுப்தன் அவன் கையில் படாமல் தப்பியது முதல் முள்ளாய் அமைந்தது. சாணக்கியன் தன் ஒற்றர்களை எல்லா நாடுகளுக்கும் அனுப்பி, எல்லோரையும் கிரேக்கருக்கு எதிராகத் தூண்டினான். "பாண்டவரும், கௌரவரும் தம்முள் பகைவராயினும், புறப்பகைவர் வந்தபோது ஒன்றுபட்டு எதிர்த்தனர். அதுபோல் உங்களிடையேயுள்ள சச்சரவுகளை விடுத்து, அயல்நாட்டானை ஒன்றுபட்டு எதிருங்கள்" என்று சாணக்கியன் ஆட்கள் எங்கும் மக்களுக்கு அறிவுரை தந்தனர்.

அலக்ஸான்டருக்கு இந்தியாவுக்குள் வழிவிட்ட அசுவகானியர் இப்போது மீண்டும் கிளர்ந்தெழுந்து, அவ்வழியைத் தடைசெய்துவிட்டனர். அவன் இந்தியாவில் ஆட்சி செய்யும்படி ஏற்பாடு செய்த பெருந்தலைவர்களுள் ஒருவனான பிலிப்பாஸை அவன் கொடுமை பொறுக்காத கிரேக்க வீரரேகொன்றுவிட்டனர். சிந்து ஆற்றின் வழி

கடல் நோக்கியே, அலெக்ஸாண்டர் செல்லும்போதும், மாளவம் சிந்து முதலிய நாடுகளில் பேரெதிர்ப்பு ஏற்பட்டது. அலக்ஸான்டர் இவ்விடங்களில் நடந்த போராட்டங்கள் ஒன்றில் படுகாயமுற்றுச் சிலநாள் படுக்கையில் கிடந்தான். கிளர்ந்தெழுந்த அரசர்களேயும், கிளர்ச்சிக்குத் தூண்டிய பிராமணர்களேயும் அவன் தூக்கிலிட்டும் கலவரங்கள் பெருகினவேயன்றி அடங்கவில்லை. மற்றும் பலர் அவன் சென்றவுடன் கிளர்ச்சி செய்வதற்கே காத்திருந்தனர். இந்நிலையில் அலக்ஸான்டர் தன் படைகளில் ஒரு பகுதியைப் பெய்த்தான் என்ற தலைவனிடம் விட்டு விட்டுக் கடலிலுள்ள ஒரு தீவு சேர்ந்தான். இங்கேயும் தன் படையை நியார்க்கஸ் என்ற தலைவனிடம் விட்டு, பின்னல் வரும்படி கூறிப் பாரசீகம் சென்ருன்.

சந்திரகுப்தன் சாந்தாவதியை மணம் செய்துகொண்டபின், சிங்கபுரத்தரசன் அவனே இளவரசனுக்கி 10,000 'யாட்' வீரர் படையை அவன் வசமாக்கினன். மகதத்திலிருந்தும் சந்திரகுப்தன் நண்பனுன இராஜசேனன் என்ற படைத்தலைவன் 10,000 பேர் கொண்ட தன் படையுடன் சந்திரகுப்தனிடம் வந்து சேர்ந்தான். மகதப் பேரரசை எதிர்க்கப் புகுமுன் போராலோ நட்புறவுகளாலோ மேற்கிந்தியாவில் வலிமைபெறவேண்டும் என்று சாணக்கியன் விரும்பினன். பர்வதேசுரன் அம்பி முதலிய அரசர் கிரேக்கர் கைப்பாவைகளாயிருந்ததனல், கிரேக்கரைப் பலவீனப்படுத்துவதன் மூலம் தாமும் பலமடைந்து, அவர்கள் நட்பையும், மதிப்பையும் பெறலாம் என்று அவன் எண்ணினன். இவ்வெண்ணத்துடன் சந்திரகுப்தன் சிந்து ஆற்று வாய்முகத்தில் தங்கிய கிரேக்கப்படையைத் தாக்க முனைந்தான். அவர்கள் எதிர்பார்த்தபடி வழியில் பல்லாயிரக்கணக்கான கிளர்ச்சிப்

படை வீரர் சந்திரகுப்தனுடன் வந்து சேர்ந்துகொண்டனர். கிரேக்கப் படைத்தலைவனும் போகிற பயணத்திடையே போர் செய்து, வீண் அழிவு தேடுவானேன் என்று கருதிக் கப்பலேறிச் சென்றான். போரிடாமலேயே சந்திரகுப்தன் வலிமை இவ்வாறு பெருகிற்று.

கிரேக்கக் கோட்டைகளைப் பிடிக்க யானைகள் மிகவும் வேண்டியவையாயிருந்தன. சாணக்கியன் அதற்கான வழிதுறைகளைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருந்தான். இச்சமயம் கலிங்க அரசன் சந்திரகுப்தனுடன் கலந்து, அரசியல் ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்பினான் என்று தெரியவந்தது. அதன்படி அவர்கள் கலிங்கம் சென்றனர். கலிங்கநாட்டுக்கு நூறாண்டு திறையிலாத் தனியுரிமை தருவதானால், சந்திரகுப்தன் படையெடுக்கும் போது உதவுவதாக அவன் வாக்களித்தான். அத்துடன் அவன் அவர்கட்கு 300 யானைகளைத் தந்து, காட்டு யானைகளைப் பிடித்துப் பழக்கும் மாவுத்தர்களும் அளித்தான். சந்திரகுப்தன் 300 யானைகளைப் பிடித்தடக்கியதுடன் பன்னிரண்டு அடி உயரமுள்ள ஒரு பேரானையையும் தன் வயப்படுத்திப் புகழடைந்தான். அவனிடம் அவ்யானை நேசமாயிருக்கவே, சாணக்கியன் அது அவனைக்கண்டு தானாக வணங்கி வழிபட்டதென்று செய்தி பரப்பினான்.

தாய்நாடு செல்லும் வழியில் அலக்ஸான்டர் கி. மு. 323-ல் இறந்தான். மாத்திரக வீரர்களும், பிற இந்தியக் குடிகளும் உடனே கிளர்ந்தெழுந்து, கிரேக்கக் கோட்டைகளைத் தாக்கினர். சந்திரகுப்தனும், சாணக்கியனும் கிளர்ச்சிக்காரருடன் சேர்ந்துகொண்டனர். அலோர்க் கோட்டை முதலிய பலகோட்டைகள் வீழ்ச்சியடைந்தன. முன் இந்தியரை அழித்தும், தூக்கிலிட்டும், கிரேக்கர் செய்த கொடுமைகள் இப்போது முற்றிலும் பழி வாங்கப்

பட்டன. சிந்து ஆற்றுக்கப்பால் மீந்துள்ள 7,000 கிரேக்கரையும், அவர்கள் தலைவர்களையும் அழித்தொழிக்க இந்தியர் கச்சைகட்டி நின்றனர்.

தம் இறுதித் தோல்விவரை அந்நாட்டுப் பேரரசரிடமும் கிரேக்கர் உதவி கோரினர்.

ஆனால், இது வீணாயிற்று. கடைசியில் பெய்த்தான் பர்வதேசுரனின் பேராவலைத் தூண்டினான். தங்கட்கு உதவினால் சிந்து ஆற்றுக்குக் கிழக்கேயுள்ள நாடு முற்றிலும் அவனிடமே தர உறுதி கூறினான். இவ்வாசைப் பொறியில் சிக்கிப் பர்வதேசுரன் சந்திரகுப்தனை அச்சுறுத்திக் கிரேக்கரைத் தப்பிச்செல்ல அனுமதித்தான்.

கிரேக்க இந்தியப் பேரரசில் சிந்து ஆற்றுக்குக் கிழக்கிலுள்ள பகுதி சந்திரகுப்தனிடம் வரவில்லையாயினும், இந்தியர் வசமாயிற்று. மீந்த பகுதியை மகதத்தை வென்ற பின் பார்த்துக்கொள்ள எண்ணிச் சந்திரகுப்தன் சாணக்கியன் கவனத்தைக் கிழக்கே திருப்பினான்.

### கரு. நந்தர்வீழ்ச்சி

சாந்தாவதியின் திருமண மூலம் பர்வதேசுரன் சந்திரகுப்தனின் உறவினன் ஆனான். எனவே, அவன் அவனுடன் நட்புடையவனாகவே இருந்தான். ஆயினும், அவன் நந்தரைப் பகைத்துக்கொள்ளவும் விரும்பாமல், சந்திரகுப்தனையும் பகைக்காமல் மதில்மேல் பூனையாயிருந்தான். இந்நிலைக்குப் பெரிதும் காரணமாயிருந்தது நந்தர்கள் பேரரஸனுக்கு ஆண்டுதோறும் கொடுத்துவந்த நூறாயிரம் பொன்னேயாகும். அலக்ஸான்டரை எதிர்ப்பதில் பக்கபலமாயிருக்கவே இது கொடுக்கப்பட்டதாயினும், பர்வதேசுரன் தன் தற்பெருமையால் அது தனக்களிக்கப்

பட்ட திண்மை என்று எண்ணினன். இக்கருத்துடன் அவன் அத்திறையை ஐந்து நூறாயிரமாக்கும்படி கோரி யிருந்தான்.

ஜீவசித்தியின் தூண்டுதலால் நந்தர் இதற்கு மிகவும் அவமதிப்பான மறுமொழி அனுப்பினர். பர்வதேசுரனிடம் அமைச்சனாயிருந்த சாணக்கியன் ஒற்றர்களில் ஒருவன் நந்தர்கள் அவமதிப்பின்மீது அவன் கோபத்தைக் கிளறினன். 'வெற்றி வீரனாகிய அலெக்ஸாண்டரே உங்களை மதித்து நடத்தினன். இந்த அம்பட்டன் மகன் உங்களை அவமதிப்பதா' என்ற அவன் சொற்கள் பர்வதேசுரனுக்கு இயல்பான மடமையுணர்ச்சியைச் சிதறடித்து, அவன் ஆண்மையைத் தூண்டின. அவன் சந்திரகுப்தனை முழுமனதுடன் ஆதரித்து, நந்தர்மீது படையெடுக்க இணங்கினன்.

இதேசமயம் மஞ்சபட்டணத்தரசனும், காமரூப அரசனும் மகதப் படையெடுப்பின்போது தாமும் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் தாக்க இணங்குவதாகத் தெரிவித்தனர். சாணக்கியன் சந்திரகுப்தனிடம் "இதுவே நல்ல சமயம். நந்தர்களை வீழ்த்தும்வரை இக்கூட்டுறவைப் பயன்படுத்துவோம். அதன்பின் அவர்களைத் தனித்தனி கவனிப்போம்" என்றான்.

மகதப் படையெடுப்புத் தொடங்கிற்று.

சந்திரகுப்தன் படையெடுப்பு எற்பாடுகள் கேட்டு, நந்தர்களும் போருக்கான ஆயத்தங்கள் செய்தனர். நந்தர்கள் இதுவரை இன்பவாழ்வு வாழ்ந்து வந்ததனால், படைகள் கவனிக்கப்படவில்லை. படைகளுக்கு ஊதியமும் கொடுக்கப்படவில்லை. சாதனங்களும் ஒழுங்காய் வாங்கப்பெறவில்லை. நந்தரும், படைத்தலைவரும் பிறரும்

இச்செலவுகளை மிச்சமாக்கித் தமக்கெடுத்துக்கொண்டனர். படைத்தலைவன் பத்தசாலனும் அவர்கள் போக்குக்கொத்த நண்பனுகவே தேர்ந்தெடுக்கப்பட்டவன். ஆகவே, அவன் வீரமோ, திறமையோ அற்றவனுக அமைந்தது இயல்பே. படைத்தலைவருள் சிறந்தவர்களான புருஷதத்தன், பத்திரபட்டன், சிம்மபலன், சந்திரபானு, பாகுராயணன் ஆகியவர்கள் இரகசியமாகச் சந்திர குப்தனுடன் ஒப்பந்தம் செய்து, போரின் நெருக்கடிக் கட்டத்தில் அவன் பக்கம் வருவதாக வாக்குறுதி கூறினர்.

படைத்தலைவர் கூட்டத்தில் சந்திரகுப்தனுக்கு உடந்தையான தலைவர்கள் பத்தசாலனிடம் 'எதிரியைத் தலைநகர் வரும்வரை எதிர்க்காதிருப்பதே நல்லமுறை' என்றனர். பத்தசாலனும் ஒத்துக்கொண்டான். அமைச்சவையில் இராட்சசன் இதனைக்கேட்டு வியப்படைந்தான். ஆனால், ஜீவசித்தியும் அதனை ஆதரிக்கவே அம்முறை ஏற்கப்பட்டது.

கலிங்க அரசன் கலிங்கவீரர் 60,000 பேருடனும், சவரர்படைவீரர் 10,000 பேருடனும் தெற்கேயிருந்து பாய்ந்து, வர்த்தமானபுரத்தைக் கைப்பற்றி முன்னேறினன். காமரூப அரசன் 50,000 வீரருடன் வைசாலியைப் பிடித்துக்கொண்டான். மஞ்சுப்பட்டணத்தரசன் 40,000 நேபாளருடன் நந்தங்காடு, ராம்பூர்வா ஆகியவற்றைக் கைப்பற்றி வந்தான்.

ஜீவசித்திமூலம் சந்திரகுப்தன் நந்தர் ஏற்பாடுகளைப் பற்றிக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைந்தான். இந்திரபிரஸ்தம், பிரயாகை, காசி முதலிய எல்லா நகரங்களுமே பாதுகாப்பற்றவையாய் இருந்தன. நகரமக்கள் சந்திர குப்தன் படைகளை வரவேற்றனர். சந்திரகுப்தனும் தன் படைவீரர்களிடம் "நாட்டுமக்களை எக்காரணம் கொண்

டும் துன்புறுத்தவோ சூறையாடவோ கூடாது'' என்றும், "வேண்டிய பொருள்கள் எவற்றிற்கும் வாணிகக்களத்தில் ஏற்பட்ட விலையைக் கொடுத்துவிட வேண்டும்'' என்றும் கட்டளையிட்டான். பர்வதேசுரனுக்கும் அவனுடன் வந்த கிரேக்கவீரருக்கும் இது மிகவும் கடுமையாகவே இருந்தது. ஆனல், சந்திரகுப்தன் அவர்களிடம் "இப்போது கைப்பணத்தைச் செலவு செய்யுங்கள். பாடலி நகரம் பிடிபட்டதும், நந்தர்கள் பொருட்குவையிலிருந்து உங்களுக்கு ஏராளமாகப் பணம் தருவேன்'' என்று கூறி அமைதிப்படுத்தினன்.

எல்லாப் படைகளும் பாடலிபுரத்தின் புறநகரை அடைந்தபோது ஜீவசித்தி நந்தர் படைத்தலைவர்களை அழைத்துப் பேசினன். "நான் சோதிடநூல் எல்லாம் கணித்துப் பார்த்து விட்டேன். நாளையதினம் ஒரு பெரும் போர் நடப்பது உறுதி. ஆனல் நாளை நந்தர்களுக்குக் கண்டமான நாள்'' என்ருன். தலைவர்கள் "எம் கதி என்ன ஆகும்?'' என்று கவலையுடன் கேட்டனர். ஜீவசித்தி, "நீங்கள் அஞ்சவேண்டாம். நீங்கள் உயிருடன் தப்புவது உறுதி'' என்ருன். அவன் சொற்கள் அவர்களிடமிருந்த சிறிதளவு ஊக்கத்தையும் கெடுத்தன.

மறுநாள்காலை நகரின் நான்கு வாயில்களிலும் போர் மூண்டது. ஜீவசித்தி வடக்குத் திசையே சுபசூசனமானதெனக்கூறி, நந்தர்களை அவ்வாயிலுக்கு அனுப்பினன். இப்பக்கம் பர்வதேசுரனும், கிரேக்கப்படைவீரர்களும் எதிர் நின்றனர். சாணக்கியனும் உடனிருந்தான். போர் நடுவில் சாணக்கியன் தன் பக்கத்திலுள்ள படைகளைத் தோற்ருேடுவதுபோல் பாசாங்கு செய்வித்தான். நந்தர் தம் தேர்களுடன் பின்தொடர்ந்து, தம் படைகளிடமிருந்து பிரிந்து, எதிரியின் படைகளிடையே சிக்கி நெடுங்

தொலை சென்றுவிட்டனர். சாணக்கியன் கட்டளையால் ஓடிய படைகள் திரும்பி நின்று, அவர்களை வளைத்துக் கொண்டன. நெடுநேரம் சண்டைசெய்து அவர்கள் மாண்டனர். அவர்கள் படைகளும் கலவரமுற்றுக் கலைந்தோடின.

தெற்கு வாயிலில் இராட்சசன் நூறாயிர மகதவீரருடன் சந்திரகுப்தனையும், கலிங்கனையும் எதிர்த்துச் சண்டைசெய்தான். போர் மும்முரமாகவே இருந்தது. ஆனால், அதற்கிடையே நந்தர் இறந்தசெய்தி வந்தது. இராட்சசன் போர்செய்வதை விடுத்துச் சில குதிரைப் படைவீரருடன் அவர்கள் உடலைக் கைப்பற்ற ஓடினான். படைகளோ தலைவனின்றிக் குலைந்தன. சாணக்கியன் நந்தர் உடல்களை இராட்சசனிடம் ஒப்படைத்து, அடக்கம் செய்யும் உரிமை கொடுத்தான். அறிவிற் சிறந்த இராட்சசன் தன் தலைவர்கள் உடல்மீது உருகியழுத காட்சி எதிரிகள் மனத்தையும் உருக்குவதா யிருந்தது.

சாணக்கியன் சந்திரகுப்தனுடனும் பர்வதேசுரனுடனும் நகருள் நுழைந்து, அரசு நிலையங்களைக் கைப்பற்றினான். நந்தர்களின் சுகங்கா அரண்மனையில் முறைப்படி நுழையும்வரை சாணக்கியன் சந்திரகுப்தனைத் தற்காலிகமாக ஒரு மாளிகையில் தங்கவைத்தான். இராட்சசன் செய்யக்கூடும் சூழ்ச்சிகளையும் பர்வதேசுரன், அவன் மகன் மலயகேது, அவன் நேசமன்னன் வைரோசகன் ஆகியவர் உட்பகைகளையும் சமாளிப்பதற்காகச் சாணக்கியன் ஒற்றர்களை எங்கும் பரக்க அனுப்பினான்.

## கச. சந்திரகுப்தனின் முடிசூட்டு விழா

பர்வதேசுரனை உதவிக்கழைக்கும்போது சாணக்கியன் அவனுக்கு மகதப் பேரரசில் பாதி தருவதாக வாக்

களித்திருந்தான். ஆனால், அதை அடைவதுடன் பர்வதேசுரன் மனக்கோட்டை அமைவதாயில்லை. அவன் எடுத்த எடுப்பிலேயே பேரரசன், உலக முழுமுதல் இறைவன் என்றெல்லாம் பட்டம் சூட்டிக்கொள்ளத் தலைப்பட்டான். சந்திரகுப்தன் முயற்சியில் முட்டுக்கட்டையாயிருந்த அவனை அகற்றுவது எளிதாயில்லை; ஏனெனில், அவன் படைகளுடன் மலயகேது படைகளும், வைரோசகன் படைகளும், கிரேக்கக் கூலிப்படைகளும் இருந்தன. போதாக்குறைக்கு மற்றொருபுறம் நந்தர் அமைச்சர் திலகங்களான இராட்சசன், சர்வார்த்தசித்தி ஆகியவர்களின் சூழ்ச்சிக்கு ஈடுசெலுத்த வேண்டியிருந்தது. நந்தர் படைவீரர்களும் ஆங்காங்கே சிதறுண்டிருந்தனர். இவற்றுக்கிடையில் கலிங்க, காமரூப, மஞ்சுப்பட்டண அரசர் படைகளும் பாடலிபுரத்திலிருந்தன. இவ்வளவையும் ஒதுக்கிச் சந்திரகுப்தனை முடிசூட்டும் பொறுப்புச் சாணக்கியன் மூளைக்கு விருந்தாயிருந்தது.

சாணக்கியன் முதல் எதிரியும், முதன்மையான எதிரியும் இராட்சசனே. அன்றைய இந்திய அறிஞர்குழுவிலேயே சாணக்கியனுக்கடுத்தபடி சூழ்ச்சியில் வல்லவனும், உண்மையான உழைப்பாளியும் அவனே. நந்தர்கள் இறந்தபின், அவன் அவர்களுக்குச் செய்யவேண்டுவது பழிவாங்குவது தவிர வேறில்லை. ஆகவே, சர்வார்த்தசித்தி அரசனாகத்தக்க திறமற்றவன் என்று தெரிந்திருந்தும், அவன் சர்வார்த்தசித்திக்கு அவ்வாசை காட்டி அவனைச் சந்திரகுப்தனுக் கெதிராகத் தூண்டினான்.

இராட்சசன் முதலில் சந்திரகுப்தனுக்கு நஞ்சிட்ட பழம் ஒன்றை அனுப்பினான். சாணக்கியன் பழத்தை மாற்றி அனுப்பி, நஞ்சிட்ட பழத்தை இராட்சசன் அனுப்பியதாகச் சர்வார்த்தசித்திக்குத் தந்து அவனை

ஒழித்தான். இராட்சசன் இரண்டாவது சூழ்ச்சியாக நஞ்சுக்கோப்பையுடன் உடலெல்லாம் நஞ்சூட்டப்பட்ட நங்கையை ஜீவசித்தி மூலம் தருவித்து அனுப்பினன். சாணக்கியன் நங்கையைக் குடிவெறியிலிருந்த பர்வதேசுரனிடம் அனுப்பி இராட்சசன் கையாலேயே அவனை அழித்தான். இங்ஙனம் இராட்சசன் திட்டம் தோல்வியுற்றதோடு சாணக்கியன் திட்டத்தில் ஒரு பகுதி நிறைவேறிற்று. இராட்சசன் இச்செயலின் விளைவுக்கஞ்சி ஓடினன். அவன் தொலைவிலிருப்பது நன்றாதலால் அவனைத் தப்பவிடும்படி சாணக்கியன் தன் ஒற்றர்களிடம் கூறியிருந்தான். அதே சமயம் மற்றொரு ஒற்றன் பர்வதேசுரன் புதல்வன் மலயகேதுவிடம் இரகசியமாக இதனையும் சாணக்கியன் சூழ்ச்சி என்றறிவித்தான். இதனால் அவன் தன் உயிருக்கும் சாணக்கியன் உலைவைக்கக் கூடும் என்றெண்ணித் தன் நாட்டுக்கே திரும்பிவிட்டான்.

சந்திரகுப்தன் முடிசூட்டு விழாவில் ஊர்வலம் செல்லுகையில் அவனைக் கொல்லவேண்டு மென்பதே இராட்சசன் அடுத்த சூழ்ச்சியாகும். வெற்றி வளைவு ஒன்று சந்திரகுப்தன் வரும்போது விழும்படியும், நந்தரின் மாவுத்தன் சந்திரகுப்தனைச் சமயம் பார்த்துக் கொலை செய்யும்படியும் இரண்டு தனித்தனி சூழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவற்றைச் சாணக்கியன் அறிந்து கொண்டான். அவன் வைரோசகனை யடுத்து, "பர்வேதசுரன் இறந்து விட்டான். மலயகேது ஓடிவிட்டான். ஆகவே உன்னைப் பேரரசின் பாதிக்கு இறைவனாக்க விரும்புகிறேன். மகதநாட்டினர் இதனை முதலில் எதிர்க்கக் கூடுமாதலால் முதலில் சந்திரகுப்தன் உடையுடன் உன்னை யிட்டுச் சென்று முடிசூட்டி விடுகிறேன். அதன்பின் இது பாதிப்பேரரசுக்கான முடிசூட்டு என்று

கூறிச் சந்திரகுப்தனை முடிசூட்டிக் கொள்ளலாம். இது பற்றி உங்கள் கருத்தென்ன?'' என்றான். வைரோசகன் பேராசனுகும் வாய்ப்பை விட எண்ணுமல் ஒத்துக்கொண்டான். அதன்படி வைரோசகன் சந்திரகுப்தன் உருவில் ஊர்வலம் வர, வளைவு அவன்மீதே வீழ்த்தப்பட்டது. ஆனால் இதற்குள் மாவுத்தன் சந்திரகுப்தன் வடிவிலிருந்த வைரோசகனை எதிர்க்க முனைந்ததால், வளைவு சற்று விலகி மாவுத்தன் மீது விழுந்து அவனைக் கொன்றது. வளைவுப் பொறியை இயக்கியவன் தன் தவற்றைச் சரி செய்ய வைரோசகனைக் கொன்றான். இப்படு கொலைகளைக் கண்டு சீற்றங் கொண்ட மக்கள் பொறியமைப்பாளனையும் கொன்று விட்டனர். இக்குழப்பத்தினிடையே சாணக்கியன் சந்திரகுப்தனை யானை மீது கொண்டுவந்து காட்டி இறந்தது வைரோசகனே என்பதை விளக்கினான்.

பேராசனாய் முடிசூட்டப்பட்ட சந்திரகுப்தன் சாணக்கியன் நல்லூழியங்களுக்கு மகிழ்ந்து அவனுக்கு ஓர் அரண்மனையும் நூறாயிரம்பொன்னும் இராஜசேனன் மூலம் கொடுத்தனுப்பினான். சாணக்கியன் இல்லாதபோது கௌதமி அதனைப் பெற்றாள். ஆனால் சாணக்கியன் அதனைத் திருப்பி அனுப்பிவிட்டான். ''பிராமணர் தமக்கென எதுவும் பெறமாட்டார்கள். பணத்தைப் பிறருக்காகப் பயன்படுத்துவதன்றித் தமக்கெனக் கொள்ளார்'' என்ற தன் குறிக்கோளில் அவன் உறுதியாக நின்றான்.

சாணக்கியன் அரண்மனைப் பணியாளரையும் நகரப் பணியாளரையும் புதிதாக அமர்த்தி அவர்களை ஒழுங்கு படுத்துவதற்கான சட்டதிட்டம் செய்தான். புதிய அரசனுக்கெதிரான சூழ்ச்சிகள் பல எதிர்பாராத வகையில் எழுந்தன. ஆனால் சாணக்கியனின் கூரிய கண்கள் அவற்றை அவ்வப்போது கண்டுபிடித்தன. உட்பகைகள் ஈரமின்றிக்

கருவறுக்கப்பட்டன. சந்திரகுப்தன் படுக்கையறையில் கீழ்ச்சுரங்கமிட்டுச் செய்த ஒரு சதி கண்டுபிடிக்கப்பட்ட பின் அரசன் ஒவ்வொருநாளும் ஒரு புது அறையில் படுக்கைகொண்டான். சோதிடனுகவும், குதிரை விற்பவனுகவும், கோயில் குருக்களாகவும் வந்து சந்திரகுப்தன் உயிருக்கு உலைவைக்க எண்ணிய எதிரிகளின் சூழ்ச்சிகள் கையற்றுப் போனபின் அமைதி நிலவலாயிற்று.

## கரு. வலேஞனைப் பிடிக்கும் வலைவீச்சு

சந்திரகுப்தனும் சாணக்கியனும் சுகங்க அரண்மனை மாடியிலமர்ந்து அரச காரியங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சு இராட்சசன் பக்கம் சென்றது. சந்திரகுப்தன் "இராட்சசனைப் பற்றிய புதிய செய்திகள் ஏதேனும் உண்டா?" என்று கேட்டான்.

**சாணக்கியன் :** உண்டு. மலயகேதுவிடம் சென்ற இராட்சசன் மேற்குத்திசையரசர் அனைவரையும் திரட்டி மீண்டும் மகதத்தின்மீது படையெடுத்து வந்து மலயகேதுவை மகத அரசனுக்க முயற்சிப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

**சந்திர :** அப்படியானுல் நாம் மீண்டும் ஒருமுறை இந்த அரசிருக்கைக்காகப் போரிடத்தான்வேண்டும் போலிருக்கிறது. அதைப் பார்க்கும்போது இந்த இராட்சசனை நாம் தப்பியோடவிட்டது தவறு என்று தோற்றுகிறதல்லவா?

**சாணக்கியன் :** இராட்சசனை எதிரியாக மட்டும் நினைத்தால் தவறுதான். ஆனுல் நான் அவனைத் தங்கள் அரசுரிமைக்குரிய ஒரு நாயகமணியாகக் கருதுகிறேன். என் திட்டம் அவனை அழித்தொழிப்பதன்று. அவன்

பகைமையை ஒழித்து அவனைத் தம் முதலமைச்சராக ஆக்கிவைப்பதே.

சந்திர: தங்கள் அறிவுத்திறத்தை அளக்கும் ஆற்றல் என்போன்றவர்க்கு இல்லை. ஆயினும் அதுபற்றிய என் ஐயத்தைக் கூறிவிடுகிறேன். எதிரியின் கையாளை நாம் வசப்படுத்தக்கூடும். நேர் எதிரியாயிருப்பவனை, அதிலும் இராட்சசனைப் போன்ற திறமையான எதிரியை, நண்பனாகக் கொள்வது சரியா? அதிலும் எனக்கு முதலமைச்சராக நீங்களே இருக்கவேண்டும் என்று நான் விரும்பியிருக்க, கையிலுள்ள வெண்ணெயை விட்டு விட்டுச் சந்தேகத்துக்கும் சங்கடத்துக்கும் இடமான வெண்ணெயை நாடுவதேனோ?

சந்திரகுப்தன் தன்மீது கொண்ட பற்றுக்கண்டு சாணக்கியன் பூரிப்புடன் புன்முறுவல் செய்தான். ஆனால் அவன் கருத்து மாறவில்லை. "என் உதவி தங்கட்கு எப்போதும்தான் இருக்கும். அதுவகையில் பதவியும் ஊதியமும் தேவையில்லை. ஆனால் நான் நிலவரமாக அரசியற் பணியாற்ற முடியாது. உங்கள் அரசியல் குடை நிழலிலிருந்து நான் செய்யவேண்டிய வேலைகள் எண்ணற்றவை உண்டு. புத்தறிவுகாண்டல், அறிவு பரப்பல், கல்வி இயக்கங்கள் ஆகியவை வேறு எவராலும் கவனிக்கப்பட முடியாத என் தனிப்பட்ட துறைகள். ஆகவேதான் அறிவிலும் செயல் திறத்திலும் வழுவாது கடமைப் பற்றிலும் தலைசிறந்த ஒருவனை முதலமைச்சனாக நாடினேன். இவ்வெல்லாப் பண்புகளையும் இராட்சசனிடம் நான் காண்கிறேன். தலைவர் இறந்தபின்னும் அவர்கள் புகழ் நிற்கப் பாடுபடும் இவ்வொப்பற்ற அமைச்சர் திலகத்தைவிட்டு உங்கட்கு வேறு அமைச்சரை நான் எங்கே தேடுவேன்?

சந்திர: சரி. ஆனால் அவன் நந்தரிடம் மாறாப் பற்றுடையவனாயிற்றே. எப்படி அவனை ஏய்ப்பீர்?

சாணக்: அவன் பற்று நந்தரிடமன்று; கடமையிடம். நந்தரிடம் கடமை தீர்ந்தது; இனி கடமை உங்களிடம் என்று அவன் எண்ணினால், அவன் மலை குலைந்தாலும் குலையா உறுதியுடையவனாய் இருப்பான். நானும் உங்கள் ஆட்சிபற்றிய கவலையைப் பேரளவு ஒழித்து வேறு பணியில் மனத்தைச் செலுத்துவேன்.

சந்திர: எல்லாம் தங்கள் நல்லெண்ணத்தின்படி நடக்கட்டும். இப்போது தாங்கள் நிறைவேற்ற விருக்கும் திட்டம் யாது?

சாணக்கியன் "இராட்சசனின் ஒற்றர்கள் நம்மிடையே வேலை செய்கின்றனர். அவர்களில் பலரை நான் பிடித்தடைத்துவிட்டேன். அவர்களில் தலைசிறந்தவர்களான சகடதாசன், சந்தனதாஸன் ஆகிய இருவரைமட்டும் விட்டுவைத்திருக்கிறேன். ஏனெனில் அவர்கள் மூலமே நான் என் திட்டங்களை நிறைவேற்ற விருக்கிறேன். பாகுராயணன், பத்திரபட்டன், புருஷதத்தன், திங்-நாதன், பாலகுப்தன், இராஜசேனன் முதலிய படைத் தலைவர்கள் என் கொடுமைகள் பொறுக்கமாட்டாமல் எதிரியிடம் செல்வதுபோல் இராட்சசன் பக்கம் சேர்ந்து பாடலிபுரத்தின்மீது படையெடுத்து வரும்படி கூறியிருக்கிறேன். அதற்குள்ளாக, கௌமுதி விழா வன்று நானும் நீங்களும் வேறுபட்டு நான் பிரிந்து செல்வதாகப் பாசாங்கு செய்வேன். அதன்பின் நடப்பவற்றை நீங்களே காணலாம்" என்றான்.

சூழ்ச்சியால் காரியம் சாதித்துக் கொள்பவர்களை வலைவீசி மீன் பிடிப்பவர்களுக்கு ஒப்பிடுவதுண்டு. ஆனால்

சாணக்கியின் வலைவீசி வலைஞனொருவனையே பிடிக்க முனைந்தான் என்று கூறுதல் வேண்டும். ஏனெனில் அவன் சூழ்ச்சியி லீடுபடுத்த எண்ணிய இராட்சசன் தானே ஓர் ஒப்பற்ற சூழ்ச்சியாளனாகவிருந்தான். சாணக்கியன் இவ் வகையில் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சூழ்ச்சியாளர் சூழ்ச்சியாழத்துக்கும் எட்டாதவை.

இராட்சசனுடைய ஒற்றர்களும் அவனுக்கு உடந்தையாய் இரகசிய ஆதரவு தந்தவர்களும் பலர். அவர்களுள் சாணக்கியனால் சிறைப்படுத்தப்படாத சகடதாசன், சந்தனதாசன் என்ற இரு நண்பர்கள் முக்கியமானவர்கள். சந்தனதாசன் என்ற செல்வமிக்க வணிகனே இராட்சசனுக்குப் பேருதவியாயிருந்தவன். இராட்சசன் மேற்கு நாட்டுக்குச் செல்லும்போது தன் மனைவியையும், மகளையும் சந்தனதாசன் வீட்டிலேயேவிட்டுச் சென்றிருந்தான். அவர்களைச் சந்தனதாசன் மனைவி வெளியே விடாமல் பாதுகாத்துவந்தாள். இராட்சசன் போகும்போது மனைவியிடம் தன் முத்திரை மோதிரத்தைக் கொடுத்து, தனக்கு எழுதும் இரகசியக் கடிதங்களில் அதன் பொறிப்பைப் பயன்படுத்தும்படி கூறிச் சென்றிருந்தான்.

இராட்சசன் ஒற்றர்கள் யார் என்பதை அறியச் சாணக்கியன் தன் ஒற்றர்களை எங்கும் அனுப்பினான். ஆனால் அவன் ஒற்றர்கள்கூட முற்றிலும் அவன் மாய வலைகளை அறிந்துகொள்ளாமல் தமக்குத் தெரிந்த அளவிலேயே ஒற்றாடிச் செய்திகள் கொண்டுவந்தனர். சாதாரண ஒற்றன் ஒருவன் ஜீவசித்தி, சகடதாசன், சந்தனதாசன் ஆகிய மூவருமே இராட்சசனின் கையாட்கள் என்று உளவு கூறினான். ஜீவசித்தி இராட்சசனின் ஒற்றனாகவே பாசாங்கு செய்த சாணக்கியனின் ஒற்றன் என்பதை யாரும் அறியவில்லை. ஆனால் அச்சாதாரண ஒற்றன் சந்தனதாசன்

வீட்டிலிருந்து விலை மதிப்பிட முடியாத ஒரு பொருளைக் கொண்டுவந்தான். அதுவே இராட்சசனின் கணையாழி.

கூற்றுவன் படத்துடன் 'மூவர்க்கும் தேவர்க்கும் முடிவருளும் தெய்வம்' எனப் பாடிக்கொண்டு சாணக்கியனின் ஒற்றன் நகர்த் தெருக்கள் வழியாகச் சென்றான். சந்தனதாசன் வீட்டிலிருந்த இராட்சசனின் சிறுவன் படம்பார்க்க வந்தான். சந்தனதாசனின் மனைவி அதுகண்டு அஞ்சிக் கூக்குரலிட, இராட்சசனின் மனைவி பிள்ளைப் பாசத்தால் சற்று ஆத்திரமுற்று வெளிவந்து குழந்தையை இட்டுச் சென்றாள். அச்சமயம் அவள் கையிலிருந்து இராட்சசனின் முத்திரை மோதிரம் நழுவிவிழுந்தது. ஒற்றன் இவ்வரலாறு கூறி மோதிரத்தையும் சாணக்கியனிடம் கொடுத்தான்.

மலயகேதுவுடன் பல இந்திய அரசர்களும் பாரசீக, கிரேக்க அரசர்களும் சேர்ந்து உதவி செய்து இராட்சசனுடன் ஒத்துழைக்கச் சித்தமாயிருந்தனர். சாணக்கியன் அவ்வரசர்களை மலயகேதுவினிடமிருந்து பிரிக்க எண்ணிச் சகடதாசன் எழுதியதாக இராட்சசனுக்கு ஒரு பொய்க் கடிதம் எழுதத் தீர்மானித்தான். இதற்கும் முத்திரை மோதிரம் பெரிதும் உதவிற்று. அக்கடிதத்தைச் சந்தனதாசன் அனுப்பியதாக இராட்சசனிடம் கொண்டு கொடுக்கும்படி சாணக்கியன் சித்தார்த்தகனை அனுப்பினான். அத்துடன் இராட்சசன் அவனைத் தனக்கு உடந்தையானவன் என்று நம்பவைப்பதற்காக மற்றொரு ஒப்பற்ற சூழ்ச்சி செய்தான்.

இதன்படி, சித்தார்த்தகன் நகரத் தண்டத்தலைவரால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட சகடதாசனை விடுவிக்க வேண்டும். பின் அவனுடன் இராட்சசனைச் சென்றடைந்து, சாணக்கியன் கொடுமைகள் தாங்காது தானும்

இராட்சசனுடன் சேர்ந்துகொள்ள விரும்பியதாகக் கூற வேண்டும். இராட்சசன் கொடுக்கும் பரிசுகள் பெற்று உடனிருக்க வேண்டும். இத்துணிகரச் சூழ்ச்சியைச் சித்தார்த்தகன் ஏற்று அதன்படி நடந்துகொண்டான். சகடதாசனும் தப்பிச் சித்தார்த்தகனுடன் மலயகேதுவின் நாட்டுக்குப் பயணமானுன்.

சகடதாசனை விடுவித்துச் சித்தார்த்தகன் அவனுடன் தப்பிவிட்டானென்ற செய்தியைப் பணியாளர் சாணக்கியனிடம் சொன்னபோது சாணக்கியன் அவர்களைப் பிடிக்கப் பாகுராயணனை அனுப்பும்படி கட்டளையிட்டான். அவனும் எதிரியுடன் போனதாகக் கூறப்படவே பத்திரபட்டன், புருஷதத்தன் முதலிய படைத்தலைவர்களுதவியால் அவர்களைத் துரத்தும்படி ஏவக் கட்டளையிட்டான். ஆனல் அத்தனைபேருமே எதிரிபக்கம் சென்று விட்டதாகக் கேட்டதும் அவன் 'அப்படியா சரி, பார்க்கிறேன். நீ போ' என்று பாகுராயணனைக் கோபத்துடன் அனுப்பிவிட்டுச் சந்திரகுப்தனிடம் சென்றுன். உண்மையில் இவர்களனைவரும் சாணக்கியன் கட்டளையினுலேயே எதிரியுடன் சேர்வதாகப் பாசாங்கு செய்தனர். இத்தலைவர்களைப் போலவே ஜீவசித்தியும் எதிரியின் கையாளெனக் குற்றஞ் சாட்டப்பட்டுத் துரத்தப்பட்டான்.

இங்ஙனம் சாணக்கியன் ஏற்பாட்டின்படி சந்திரகுப்தன் ஆட்கள் பலருமே இராட்சசனுடன் சென்று அவனிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்கள் துணையுடன் எதிரிகள் மகதத்தைப் படையெடுக்கத் திட்டமிட்டனர். மகதத்தில் நடப்பவை யாவற்றையும் தன் ஒற்றர்கள் மூலம் கேட்டுவந்த இராட்சசன் அவர்களை நம்பியதில் வியப்பில்லை. சாணக்கியன் வலை அவ்வொற்றர்களில் பலரையும்கூடக் கண்கட்டி மயக்கிவிட்டது.

இதற்கிடையில் சாணக்கியன் சந்தனதாசனை அழைத்து அவன் இராட்சசன் குடும்பத்திற்கு ஆதரவளித்ததைக் கூறிக் குற்றஞ்சாட்டினான். பின் சந்தனதாசன் அவர்களைத் தப்ப விட்டதற்காக அவனைக் கடிந்து கொண்டு அவர்களை ஒப்புவிக்கும்படி வற்புறுத்தினான். அவன் நட்புறுதியும், வீரமும் உடையவனாதலால் அங்ஙனம் செய்ய மறுத்தான். அதன்மீது சாணக்கியன் அவனைச் சிறைசெய்து அவன் உடைமைகளைப் பறிமுதல் செய்தான். இவை போதாமல் அவன்மீது நாட்டுப் பகைமைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப் பட்டது.

## கசு. இராட்சசனின் துயரம்

தொலைதூரத்தில் மலயகேதுவின் நாட்டில் இருந்த இராட்சசனிடம் சாணக்கியனின் ஒற்றர்களுள் ஒருவனான விராதகுப்தன் பாம்பாட்டி உருவில் சென்று பேச்சுடன் பேச்சாகச் சாணக்கியன் கொடுமைகள், சந்திரகுப்தனுக்கும் சாணக்கியனுக்கும் ஏற்பட்டுவரும் பகைமைகள், சாணக்கியனை வெறுத்துப் படைத்தலைவர்கள் வெளியேறியது, ஜீவசித்தி வெளியேற்றுவிக்கப்பட்டது ஆகிய செய்திகளைக் கூறினான். இறுதியில் சகடதாசன் கொலைத் தண்டனை பற்றிக் குறிப்பிட்டான்.

சாணக்கியனால் தன் சூழ்ச்சிகள் எல்லாம் தோல்வியடைந்ததுகண்டு இராட்சசன் இதுவரை வருத்தமுற்றிருந்தான். சாணக்கியன் தோல்விகள் ஓரளவு இப்போது ஆறுதலளித்தன. சகடதாசன் செய்தி அவனுக்கு மீண்டும் துன்பமூட்டியது. "ஆ, நந்தர்களில் முதன் மந்திரியாயிருந்த நான் எத்தனை அற்பப் பதர்; வெறுங் கணக்கனாயிருந்த சகடதாசன் எத்தனை உயர்ந்த பத்தரைமாற்றுப் பொன்' என்று அவன் அழுதரற்றினான்.

இராட்சசனை ஊக்குவிக்க விரும்பி மலயகேது அவனுக்குத் தன் பொன் மாலையைப் பரிசாக அனுப்பினன். சற்றுநேரத்தில் சகடதாசன் வந்து தான் சித்தார்த்தகனல் காப்பாற்றப்பட்டதைக் கூறினன். இராட்சசன் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் சித்தார்த்தகனைத் தழுவிக்கொண்டு அரசன் தந்த பொன் மாலையை அவனிடம் கொடுத்தான். சித்தார்த்தகன் "அதனை நீங்களே வைத்திருந்து நாம் வெற்றியடைந்தபின் கொடுங்கள்" என்முன். இராட்சசன் சகடதாசனிடம் அதைக் கொடுக்கச் சொன்னன். ஆனல் கொடுக்குமுன் சித்தார்த்தகன் அதனை உறையிலிட்டுத் தன்னிடமிருந்த இராட்சசன் மோதிரத்தால் முத்திரையிட்டுக் கொடுத்தான். அம் மோதிரம் கண்டு அது ஏதென இராட்சசன் வினவ, சித்தார்த்தகன் தான் அதனைச் சந்தனதாசன் என்ற செல்வன் வீட்டின் பக்கம் கண்டெடுத்ததாகக் கூறினன். இர்ட்சசன் அவ்விளக்கங் கேட்டு இது இயல்பான நிகழ்ச்சியே என அமைந்தான்.

பர்வதேசுரன் இறந்தபின் அவன் அணிமணிகளைச் சந்திரகுப்தன் பிராமணர்கட்குத் தானம் வழங்க விருந்தான். சாணக்கியன் ஒற்றர்கள் பிராமண யாசகர்களாகச் சென்று அவற்றைப் பெற்றுச்கொண்டனர். அதன்பின் அவர்கள் சாணக்கியன் சொற்படி வணிகர் வேடமிட்டு இராட்சசனிடம் வந்து அவற்றை மிக மலிவான விலைக்கு விற்பனை செய்துவிட்டனர்.

பாகுராயணனும் சாணக்கியன் அனுப்பிய மற்றப் படைத் தலைவர்களும் வாய்ப்பு நேரும்போதெல்லாம் மலயகேதுவும் இராட்சசனும் ஒருவரை ஒருவர் அவநம்பிக்கை கொள்ளும்படி செய்துவந்தனர். மலயகேது எளிதில் மனமாறக் கூடியவன். சந்திரகுப்தனை எதிர்க்கப்

போதிய படைவலிமையும், துணைவலிமையும் பெற்று விட்டதாக எண்ணி அவன் படையெடுப்பைத் தொடங்கத் துடிதுடித்தான். ஆனால் இராட்சசனோ சாணக்கியனும் சந்திரகுப்தனும் பூசலிடுவதாகத் தெரிவதனால் அது முற்றும்வரை பொறுப்போம் என்றான். இத்தாமதத்தால் மனக்கசப்படைந்து அவன் இராட்சசன்மீது வெறுப்பும், பகைமையும் கொண்டான். இராட்சசன் சந்திரகுப்தனிடம் நண்பனாய்ச் சாணக்கியனுக்குப்பதிலாக முதலமைச்சராகவும் கூடும் என்ற பொறுப்பற்ற பேச்சுக்களுக்கும் அவன் செவிகொடுத்தான்.

இராட்சசன் ஒருநாள் உடல் நலிவுற்றிருப்பதாகக் கேட்டு மலயகேதுவும் படைத்தலைவர்களும் அவனைக் காணச் சென்றனர். இச்சமயம் சாணக்கியன் ஒற்றருள் ஒருவனான கரபகன் இராட்சசனுடனிருந்தான். சந்திரகுப்தனுக்கும் சாணக்கியனுக்கும் ஏற்பட்டுவிட்ட பிளவைப் பற்றி அவன் சாணக்கியனிடம் கூறிக்கொண்டிருந்தான். முழுநிலா (கௌமுதி) விழாக் கொண்டாட்டத்தை ஒட்டிச் சாணக்கியனைச் சந்திரகுப்தன் மீறி எதிர்த்துவிட்டதாகவும் சாணக்கியன் வெளியேறிச் சென்றுவிட்டதாகவும் அவன் கூறினான். இதனை மறைவிலிருந்து கேட்ட மலயகேதுவின் உள்ளத்தில் இராட்சசனைப்பற்றி எழுந்த ஐயம் வலுத்தது.

ஜீவசித்தி குறித்த மறையுவா (அமாவாசை) நாளில் படைகள் புலம்பெயர்ந்தன. படைகளுக்கு எங்கும் எதிர்ப்பு இல்லை. நகரங்களை எதிர்க்கவேண்டுமா, கடக்கவேண்டுமா என்று போர்க்குழுவில் கேள்வி எழுந்தது. பாகுராயணன், 'நகரங்களை எதிர்ப்பதில் செல்லும் நேரத்தில் தலைநகரையே முன்னேறித் திடுமென எதிர்த்துவிடலாம்' என்றான்.

பாடலிபுரத்தை யடைந்ததும் பாகுராயணன் மலய கேதுவை யடுத்து "எதிரியின் இருப்பிடம் வந்து விட்டோம். எதிரிகளின் ஒற்றர்கள் நம் படைகளை உளவு காண வரக்கூடும். ஆதலால் இணக்கச்சீட்டு இன்றி யாரும் வரவோ, போகவோ செய்யாதபடி தடைசெய்தல் நலம்" என்றான். சீட்டுக் கொடுக்கும் பொறுப்பைப் பாகு ராயணனே எடுத்துக்கொண்டான்.

அடுத்தநாள் ஜீவசித்தி பாடலிநகரம் செல்ல விரும் பினன். பாகுராயணன், நீ "இராட்சசன் காரியமாகத் தானே போகிறாய்?" என்றான்.

ஜீவ: இப்போதெல்லாம் நான் அவனுக்கு ஆள் வேலை செய்வதில்லை.

பாகு: ஏன், அவன் யாது செய்தான்?

ஜீவ: அதை நான் கூறமுடியாது. என் முடிவு அது, அவ்வளவுதான்.

பாகு: அப்படியா? நீ சொல்லாவிட்டால் உனக்குச் சீட்டுக் கிடையாது

ஜீவ: சரி, சொல்கிறேன். யாரிடமும் சொல்லாதே. இராட்சசன் தான் பர்வதேசுரனை நச்சுமங்கை மூலம் ஒழித்தது.

பாகு: சாணக்கியன் அதைச் செய்ததாகவல்லவோ கேள்வி.

ஜீவ: அது இராட்சசனின் கூற்று. உண்மையில் அப் பெண் யார் என்பது சாணக்கியனுக்குத் தெரியாது. எனக்கும் இராட்சசனுக்குமே தெரியும். நான் இதில் இராட்சசனுக்கு உதவியதனால்தான் என்னைச் சாணக் கியன் துரத்தினான். இராட்சசன் சாணக்கியனுக்கும் சந்திரகுப்தனுக்கும் அஞ்சவில்லை. அவர்களை நயத்தால் வெல்ல எண்ணியுள்ளான். அவன் பர்வதேசுரனையே

அஞ்சினன். ஆதலாலேதான் அவள் அத்தனை பாடுபட்டு அவனைக் கொன்றாள்.

இதே சமயம் சகடதாசனிடத்திலிருந்த முத்திரையிட்ட உறையுடன் சித்தார்த்தகன் வெளியே செல்லப் போனான். சீட்டில்லாமல் போனதற்காக அவனும் பிடிக்கப்பட்டான். அவனைப் பரிசோதித்த போது அவனிடம் ஓர் உறை காணப்பட்டது. அவ்வுறையில் மலயகேது இராட்சசனுக்குக் கொடுத்த பொன் மாலையும் ஒரு கடிதமும் இருந்தன. கடிதம் உண்மையில் சாணக்கியன் முன்பு எழுதி முத்திரையிட்டதே. அதன் விவரம் வருமாறு :

"மேதகையீர், நலம்! 'பெருந்தகையாளர்' தம் வாய்மொழிப்படி உம் எதிரியை விலக்கினர். இனி வேண்டுவது உம் பெருந்தகைத் தோழர்களுக்குக் கூறிய உறுதி மொழிகளை நிறைவேற்றுவதே. ஆனால், அதற்குமுன் அவர்கள் தம் தற்போதைய தோழரைத் துறந்து மேதக்க தம்மிடம் சார்வர். அவர்களில் சிலர் செல்வமும் சிலர் அரசுரிமையும் வேண்டுகின்றனர். நீவிர் அனுப்பிய அணி மணிகள் பெற்றேன். எளியேன் இத்துடன் அனுப்பும் கையுறையும் ஏற்றருள்க. இது கொணரும் நம்பியிடம் பிற முக்கிய செய்திகள் கூறியுள்ளேன்."

இராட்சசன் முத்திரையுடனிருந்த இக்கடிதத்தால் இராட்சசன் இதனைச் சந்திரகுப்தனுக்கு எழுதியதாகத் தொனிப்பு ஏற்பட்டது. கடிதத்தில் கையுறை என்று கூறியதன்படி கடிதத்துடன் ஒரு பொன்மாலை இருந்தது. மலயகேதுவிடம் அதைக் காட்டியதும் அவன், 'ஆ! என் பரிசையே என் எதிரிக்கு அளித்த துரோகி!' எனச் சீறினன். இராட்சசன் சிறைப்படுத்தப்பட்டுச் சோதனை செய்யப்பட்டதும், சந்திரகுப்தன் அணிமணிகள் அகப்

பட்டன. இவையே சந்திரகுப்தனிடம் அவன் ஏற்றுக் கொண்ட அணிமணிகள் என்று கருதுதல் எளிதாயிற்று. ஏனெனில், அவையே மலயகேதுவின் தந்தையான பர்வ தேசுரன் அணிமணிகள். கையும் மெய்யுமாகக் காணப் பட்ட இத்துப்புக்களை மறுக்கமாட்டாமல் இராட்சசன் விழித்தான்.

சிறையாளிகளால் துன்புறுத்தப்பட்டு இரகசிய உண் மையை வெளியிடுபவன்போலச் சித்தார்த்தன் இராட் சசன்மீது பின்னும் குற்றம் சாட்டினான். மலயகேது வுடன்வந்த மன்னர்களுக்குச் செல்வமும் அரசுரிமைகளுந் தந்து சந்திரகுப்தனுடன் சேர்த்துவிடச் சதி செய்திருப்ப தாக இராட்சசன் சந்திரகுப்தனுக்குச் செய்தி அனுப்பி னான் என்பதே அக்குற்றச்சாட்டு. இராட்சசனால் இதனை யும் தெளிவுடன் மறுக்கக்கூடாமல் போயிற்று.

மலயகேதுவுக்குவந்த கோபத்தில் அவன் இராட் சசனை அவமதித்து "போ! உன் சந்திரகுப்தனிடமே போய் அவன் அமைச்சனாயிரு! அவனை ஒழிக்கும்போது உன்னையும் ஒழித்துவிடுகிறேன்! இதைப்போய் அவ னிடம் சொல்லு!" என்று அவனைத் துரத்தினான். சாணக் கியன் ஒற்றரான படைத்தலைவர் சிலர் அவன் துயரத் திடையே ஆறுதல் உரைத்துச் சந்திரகுப்தனைப் புகழ்ந்து அவனைச் சந்திரகுப்தனிடம் நயமாக இழுத்துக்கொண்டு வந்தனர். இதற்கிடையில் மலயகேது திடீரெனத் தன் படைவீரரை அனுப்பித் தன் நேச அரசரைப் பிடித்து வந்து தூக்கிலிடுமாறு பணித்தான். அவனது இத்திடீர்ச் செயலைப் புரிந்துகொள்ள முடியாது திகிலடைந்த நேசப் படைகள்யாவும் கலைந்தோடின. இச்சமயத்துக்கே காத் திருந்தவர்களான பாகுராயணன் முதலிய படைத்தலைவர் கள் தம்படைகளுடன் மலயகேதுவைத் துறந்து, சந்திர

குப்தனிடம் சென்றனர். மலயகேதுவின் படைகள் ஒருமித்த அவர்கள் எதிர்ப்பால் நிலை குலைந்தோடின.

## கஎ. நட்பின் வெற்றி

தன் பழைய நண்பர்களிடையே எழுந்த விசித்திரமான உட்பூசல்களையும் தோல்விகளையும் கேட்டு இராட்சசன் மனமுடைந்தான். இந்நிலையிலும் சந்தனதாசன் தூக்கிலிடப்படுவது தெரிய வந்ததும், அவன் வாளுடன் சென்று அவனை விடுவிக்க எண்ணினான். தூக்கு மேடையைச் சூழநின்ற காவலர்களைக் கண்டதும் அவன் வாளுடன் கடக்க முடியாதென்று கண்டு, ஆயுதமின்றி அருகில் சென்றான். சந்தனதாசன் மனைவியும் குழந்தைகளும் கோவென அழுதரற்றி, அவனிடம் விடைபெற்றுக் கண் கலங்கினர். அதனிடையே கொலையாளிகளாய் வந்திருந்த சித்தார்த்தகனும் சமித்தார்த்தகனும் சந்தனதாசனைத் தூக்கு மரமேற்றச் சென்றனர். இராட்சசன் தன் இறுதி மூச்சுடன் தன் நண்பர்களைக் காக்க எண்ணிக் கொலைஞர் காலில் வீழ்ந்து, "நண்பீர், என் உயிர்கொண்டு இவ்வீர வாணிகன் உயிரைக் காப்பாற்றுக! நான் இவன் குற்றத்துக் கெல்லாம் காரணமான இராட்சசன்," என்றான்.

அவனது உயர்ந்த நட்புக் கனிவு கண்டு சந்தனதாசன் வெளிப்படையாக வியப்படைந்தான். கொலையாளிகளாயிருந்தவர்களும் உள்ளூற வியந்தனர். சித்தார்த்தகன் உடனே ஓராளிடம் சாடைகாட்ட, அவன் சாணக்கியனையும் சந்திரகுப்தனையும் அவ்விடம் அழைத்து வந்தான். சந்திரகுப்தன் இராட்சசனை நோக்கி, "அறிவிற் சிறந்த அமைச்சரே; இந்நண்பன் உயிர் உம் உயிரினும் சிறந்ததென எண்ணுவீரானால், அவனைக்காப்பாற்ற உமக்கு வழி கூறுகிறேன். அஃது இஃது ஒன்றே : நீர் உம் பகைமை

எல்லாம் விடுத்து எம் முதலமைச்சராயிருந்து பணிசெய்ய வேண்டும் என்பதே. இதற்கிணங்கர்விடில், உம் சந்தன தாசன் உயிரிழப்பது உறுதி!'' என்றான்.

இராட்சசன் கூரிய அறிவை இதுவரை மயக்கி மூடியிருந்த மாய முகில் திரையூடாக மின்னலென முழு உண்மையும் விளங்கிற்று. வியப்பும் பாராட்டும் தன் நண்பன் உயிரும் அவன் ஏலமாட்டாப் பகைமையை வேரோடு சாய்த்தன. "பழைய இராட்சசனே, நீ தோற்றாய்! தோல்வி காணமாட்டாத புதிய இராட்சசனே, வாரும்'' என்று தனக்குள் கூறிக்கொண்டு, அவன் சந்திரகுப்தனை வணங்கி, 'உம் விருப்பப்படியே ஆகுக. வாழ்க, மகதப் பேரரசன்! சந்திரகுப்தன் வாழ்க!' என்றான்.

சாணக்கியன் இராட்சசனையடுத்து, "என் சூழ்ச்சிகளை மன்னிக்க. உங்களைப்போன்ற ஒப்பற்ற அறிவும், வாய்மையும், கடமையுணர்ச்சியும் வாய்ந்த விலையிலா முத்தை இச்சூழ்ச்சிக்கடலில் மூழ்கியன்றோ பெற்றேன்!'' என்று கூறி ஆரத்தழுவினான்.

கலை சாரா அரசியலறிவின் சிகரம், கலை சார்ந்த அரசியலறிவாகிய மலைக்காட்டோடிணைந்து வீறடைந்தது.

சந்திரகுப்தன் இராட்சசனை நோக்கி "இக்கணமுதல் என் ஆட்சியே உம் ஆட்சி. மலயகேதுவை நான் சிறையிட்டுள்ளேன். அவனை ஆக்கும் பொறுப்பும் அழிக்கும் பொறுப்பும் உமதே. உம் விருப்பப்படி அவனை நடத்தலாம்,'' என்றான். இராட்சசன், "எனக்கு இனித் தனி விருப்பம் இல்லை. சந்திரகுப்த அரசர் விருப்பமே எனது விருப்பம். ஆயினும், மலயகேதுவுடன் நான் ஈடுபட்டவன். ஆதலால், அவன் காரியத்தில் சாணக்கியர் முடிவையே நான் எதிர் நோக்குகிறேன்,'' என்றான்.

'மலயகேதுவும் சிறைப்பட்ட தலைவரும் வீரரும் யாவரும் விடுதலை பெறுவர்,' என்றான் சாணக்கியன்.

சூழ்ச்சியும் பகைமையும் ஒழிந்தன. 'வாழ்க சந்திரகுப்தன்' என்ற ஒலி எங்கணும் பரந்தது.

## கஅ. புயலுக்குப்பின் அமைதி

மௌரியன் கண்ட கனவு இப்போது நனவாயிற்று: நந்தர்கள்மீது சந்திரகுப்தன் பழிக்குப்பழி வாங்கிவிட்டான். மகதப் பேரரசு அவன் காலடியில் கிடந்தது. ஆட்சியற்று நாடோடியாயிருந்த காலத்திலேயே அவனை மணந்த இளவரசி சாந்தாவதி இப்போது பேரரசியாய், அவனை ஒரு பேரரசனாகக் கண்டாள். ஆனால், சந்திரகுப்தன் கனா முற்றிலும் நிறைவேறவில்லை. அலெக்ஸாண்டர் படையெடுப்பின் போது இந்திய அரசரிடையே—சிறப்பாக மேற்கு நாட்டரசரிடையே—காணப்பட்ட வேற்றுமை உணர்ச்சிகள் அவர்களை அயலான் கைப்பாவைகளாக்கியதை அவன் அறிந்திருந்தான். அதன் பயனாக நாட்டு மக்கள் பட்ட அவதிகளும், வெற்றி வெறியில் மதியிழந்த அவ்வயலான் கையில் தானடைந்த அவமதிப்பையும் அவன் மறக்கவில்லை. இந்நிலை மீண்டும் ஏற்படாதவாறு இந்தியாவை ஒரே அரசாக்கி ஒன்றுபடுத்தி அயலார் அணுக முடியாத வலிமை வாய்ந்த கோட்டையாக்க அவன் விரும்பினான். சாணக்கியன் இதனை ஆதரித்ததுடன் விரைவில் அதை நிறைவேற்றுவிப்பதாகவும் வாக்களித்தான்.

சாணக்கியன் வாழ்விலும் இப்போது பெருமாறுதல் ஏற்பட்டது. சூழ்ச்சி எதிர்சூழ்ச்சிகளில் அவன் காலம் கழிக்கவேண்டிய நிலைமை மலையேறிவிட்டது. அரசியலின் பெரும்பொறுப்பை இராட்சசன் ஏற்றுச் செவ்வனே நடத்தி வந்தான். ஆகவே, அவன் தன் நேரத்தின் பெரும்

பகுதியை நாட்டில் அறிவு பரப்புவதில் செலவு செய்தான்; கல்லாமையை அடியோடு ஒழிக்கத் திட்டங்கள் வகுத்தான்.

இந்தியாவை ஒரு கோட்டையாக்க வேண்டுமானல், கோட்டைவாயிலான மேல் திசையைமட்டும் வலுப்படுத்துதல் போதாது என அவன் கண்டான். மேல் திசை இந்தியாவின் போர்க்களமாக மட்டும் பயன்பட முடியும். போருக்கு வேண்டிய தளவாடங்களும் அதற்கு ஆதாரமான செல்வமும் வலிமையும் பிற பகுதிகளிலிருந்து வர வேண்டும் என்பதை அவன் உணர்ந்தான். இவ்வெண்ணத்துடன் அவன் கரைப் படைகளையும் அவற்றுக்கு உதவியாகக் கடற்படையையும் நாற்புறமும் அனுப்பினன். அவர்கள் மூலம் இந்தியாவிலுள்ள எல்லா நாடுகளிலுமுள்ள அரசரைப் போராலோ பேச்சு வார்த்தைகளாலோ கீழடக்கித்திறைகொண்டான். "பேரரசாட்சியில் அந்நாடுகள் தம் கடனாற்றும்படி திட்டம் செய்க. ஆனல், தென்கோடியிலுள்ள சேர சோழ பாண்டிய அரசர்களை மட்டும் எதிர்க்காமல், சரிசமமாக நடத்தி, அவர்கள் நட்பைப் பெறுக. அம்மூவர் ஆளும் தமிழ் நாட்டிலுள்ள மக்கள் ஒப்பற்ற வீரம் உடையவர்கள்; விடுதலையார்வம் மிக்கவர்கள். ஆனல், அதே சமயம் அவர்கள் நாட்டுப் பற்றும், பரந்த உலகப் பற்றும் உடையவர்கள். அவர்கள் பகைமை கொடிது! நட்போ, திட்பமும் ஒட்பமும் உடையது! சந்திரகுப்தன் பரிசில்களை அவர்கட்கு ஈந்து, அவர்கள் ஆட்சியைப் புகழ்ந்த பின் சந்திரகுப்தன் ஆட்சியைப் புகழ்க!" என்றான்.

சாணக்கியன் கூறியபடியே மகதப்படைத் தலைவர், கலிங்கர், ஆந்திரர், வடுகர், இராட்டிரிகர் முதலிய பல நாட்டினரை வென்றும் திறை வாங்கியும் பேரரசுக்கு

உட்படுத்தினர். தமிழகத்துக்குள் செல்லும் எண்ணம் அவர்கட்கு இல்லை. ஆயினும், மௌரியத் தலைவனுடன் நட்புக் கொண்ட வடுகரையும் கோங்குநாட்டெல்லையி லுள்ள கோசரையும், தமிழ்நாட்டுச் சிற்றரசனாகிய மோகூர்ப் பழயன் எதிர்த்துத் துரத்தினன். இதனால், மௌரியப்படைத் தலைவன் சிம்மபலன் வெகுண்டு பழயனை எதிர்த்தான். ஆனால், தமிழகச் சிற்றரசனாயினும், ஆற்றல் மிக்கவனாகிய பழயன், மௌரியரைத் துரத்தியடித்தான். அவன் உண்மை வலிமையின் அளவு கண்ட மௌரியர், பெரும்படையுடன் மலையில் தம் தேர்களுருளும்படி பாதை செப்பனிட்டு வந்து படையெடுத்தனர். பழயன் தோற் கடிக்கப்பட்டான். ஆயினும், சாணக்கியன் ஆணையைக் காக்க எண்ணிய மௌரியத் தலைவர் பழயனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன்பின் மௌரியர் தமிழரசருடன் அரசியல் வாணிக நேச உறவு நிறுவினர்.

தென்திசையில் ஒழுங்கு கண்டபின் மகதப் படைகள் மேல் திசை சென்று எல்லாச் சிற்றரர்களையும் அடக்கின. மலயகேது இப்போது நண்பனாய் இம்முயற்சிக்குத் துணை தந்தான். அத்துடன் சாணக்கியன் அலெக்ஸாண்டர் படையெடுப்பின் தடமெல்லாம் அழித்து, அதன் சின்னங்களை இந்தியப் பண்பாடமைய மாற்றி, இந்தியப் பெயர்கள் சூட்டினான். நாட்டின் பல மொழிகளிலும் உள்ள எழுத்தாளர்களை அழைத்து அலெக்ஸாண்டர் பெயரையே இந்தியாவின் வரலாற்றிலோ கதைகளிலோ இலக்கியங்களிலோ குறிக்கக்கூடாது எனக் கண்டிப்பான கட்டளையிட்டான்.

## கக. வெற்றி வேந்தனை வென்ற வெற்றி வேந்து

அலெக்ஸாண்டர் இறந்தபின் அவன் பேரரசில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. அவன் படைத் தலைவர்கள்

அடிக்கடி பேரரசைப் பங்கிட்டும், ஒருவருடன் ஒருவர் பூசலிட்டும் வந்தனர். அவர்களிடையே எல்லாரினும் மேம்பட்ட வீரன் ஸெலியூக்கஸ் நிக்கேடார். அலெக்ஸாண்டரின் பூசிபாலாக் கொலுவிருக்கையின்போது அவன் ஒரு சிறுவனாயிருந்தான். அப்போதிருந்தே சந்திரகுப்தனை அவன் ஒரு அனுபவமற்ற இன்ப வாழ்வினன் என எண்ணியிருந்தான். கிரேக்கப் பேரரசின் பெரும்பகுதியையும் வென்ற இறுமாப்பில் அவன் தன்னை ஓர் இரண்டாம் அலெக்ஸாண்டராக நினைத்துக்கொண்டு, அலெக்ஸாண்டரைப் போலவே இந்தியா மீது படையெடுத்து வந்தான். அலெக்ஸாண்டர் பர்வதேசுரனை எளிதில் வென்றதுபோலத் தானும் சந்திரகுப்தனை எளிதில் வென்றுவிடலாம் என்ற எண்ணத்துடன் அவன் புறப்பட்டான். ஆகவே, அவன் தன் செல்வப் புதல்வியாகிய டயோபாண்டிஸை வேடிக்கை பார்க்க உடனழைத்து வந்தான்.

ஸெலியூக்கஸ் தன் படைகளில் ஒரு பிரிவை வடக்கே காஷ்மீர் வழியாக வளைந்து வந்து சந்திரகுப்தன் படைகளைப் பின்னாலிருந்து எதிர்க்கும்படி அனுப்பினான். காஷ்மீரின் அழகைக்காண விரும்பி, டயோபாண்டிஸும் உடன் சென்றாள். ஆனால், மகதப் படைகள் எதிரிகளின் படைகள் நுழையுமளவும் பொறுத்திருந்து, இருபுறமும் அவர்களை வளைத்துப் பொறியில் சிக்க வைத்தன. அதே சமயம் தெற்கே ஸெலியூக்கஸும் போரில் முறியடிக்கப் பட்டான்.

சாணக்கியன் இராட்சசனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யும்போதே எதிர்காலத்தில் சந்திரகுப்தன் வெற்றியையுன்னி மற்றுமொரு துணிகரச் சூழ்ச்சி செய்திருந்தான்: சோதிடரை அவன் அரசி சாந்தாவதியிடம்

அனுப்பிச் சந்திரகுப்தன் அரச செல்வத்தைப் புகழும்படி கூறினான். அதற்கிடையே சாந்தா மக்கட்செல்வம் பற்றிய வகையில் தன் நிலை யாது என வினவினாள். சோதிடன், "அம்மா, உங்களுக்கு வேறு குறை எதுவும் இல்லை. ஆனால், உங்கள் வயிற்றில் சந்திரகுப்தருக்குப் பிள்ளை பிறவாது," என்றான். சாந்தா இது கேட்டு மனமுருகினாள். ஆனால், அதனையடுத்து அவன் "சந்திரகுப்தருக்கு இந்தியா முழுவதும் நீண்டநாள் புகழுடன் ஆளும் ஒப்பற்ற மகன் பிறப்பது உறுதி," என்றான். சாந்தா இதனைச் சாணக்கியனிடம் கூறினாள். அவன் அவளுக்கு ஆறுதல் கூறி, "பெண்களுக்குத் தங்கள் வயிற்றிலேதான் குழந்தை பிறந்து தீரவேண்டுமென்பதில்லை. அறிவுடைய பெண்கள் கணவர் நலத்திற்கே பிள்ளையை விரும்புவர். அதிலும் உங்கள் போன்ற அரசியர் நாட்டு நலனையும் எண்ணியே வாழ்வைக் கோரவேண்டும். ஆகவே, அரசருக்கு ஏற்ற மற்றொரு மனைவியை நாடி எதிர்பார்த்திருங்கள்," என்று கூறியிருந்தான்.

போரில் தோற்றுப் புதல்வியைக் காஷ்மீரில் சிக்க வைத்துத் தவித்த ஸெலியூக்கஸ் எப்படியாவது சமரசம் செய்துகொள்ள விரும்பினான். இந்திய யானைப்படைகள் அலெக்ஸாண்டர் எண்ணியதுபோல எளிதில் வெல்லத் தக்கவையல்லவென்றும், போதிய பயிற்சிபெற்ற யானைகளால் மேல்திசை நாடுகளில் எளிதில் வெற்றி பெறலாம் என்றும் அவன் கண்டான். ஆகவே, சிந்துவுக்கு மேற்கிலுள்ள மாகாணங்களைச் சந்திரகுப்தனுக்குக் கொடுப்பதாகவும், 500 யானைகளை அதற்கு மாறாகப் பெற்றுச் செல்வதாகவும் அவன் பேரம் பேசினான். சந்திரகுப்தன் அவற்றை ஏற்றுக்கொண்டான். அத்துடன் மதிப்பரிய பரிசில்களை அனுப்பி டயோபாண்டிஸைத்

தனக்கு மணமுடித்துத் தரும்படி கோரினான். மகளும் அதையே விரும்புவதறிந்த ஸெலியூக்கஸ் மகிழ்ச்சியுடன் இணங்கினான். அவர்கள் திருமணத்தின் பின் ஸெலியூக்கஸ் தன் செல்வப்புதல்வியிடம் விடைபெற்றுச் சென்றான்.

சந்திரகுப்தன் டயோபாண்டிஸ் பெயரை தேவ பிராந்தா என இந்திய மயமாக்கினான். அவளும் தன் காதல் தூண்ட நடையுடை கருத்துக்களில், விரைவில் இந்தியப் பெண்மணியாயினாள். சந்திரகுப்தனுடன் அவள் ஒரு நாள் உரையாடுகையில், “உலகில் என் தந்தையை வெற்றிவேந்தன் என யாவரும் கூறுகின்றனர். அதோடு வெற்றிவேந்தனை வென்ற வேந்து என்று யாரையோ கூறு கின்றனர். அது ஒருவேளை உங்களைத்தானோ என்னவோ!” என்று நயமாகக் கேட்டாள். சந்திரகுப்தன் புன் முறுவலுடன், “இது தெரியாதா! அவர்கள் என்னைக் கூற வில்லை. உன்னைத்தான் கூறியிருக்கவேண்டும். நீ எங்களிரு வரையும் வென்றவளாயிற்றே!” என்றான். தேவபிராந்தா தன் மகிழ்ச்சியை மறைக்க நிலநோக்கி நிலத்தின்மீது கால் விரலால் கோட்டைக் கீறினாள்.

## ௨௦. கடல் சூழ்வரல்

இந்தியாவின் எல்லையற்ற பரப்பை ஒன்றுபடுத்தவும், மக்கள் அறிவைப் பரப்பவும், அப்பரப்பைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தல் இன்றியமையாதது என்று சாணக்கியன் எண்ணினான். அரசியல் வெற்றியை முன் னிட்டு முன்பு படைத்தலைவர்களும் கடற்படைத்தலைவர் களும் இந்தியா முழுவதும் சுற்றி வந்திருந்தனர். ஆனால், அப்பயணத்தில் போரையும் அரசரையும் அரசியல் ஆதிக் கத்தையுமே அவர்களால் கவனிக்க முடிந்ததே தவிர, மக்கள் வாழ்க்கை, பண்பாடு, பழக்க வழக்கங்கள்,

கோட்பாடுகள் ஆகியவற்றைப்பற்றி உசாவியறிய நேரமோ எண்ணமோ உண்டாக வழியில்லாதிருந்தது. இப்போது சாணக்கியன் இச்சிறிய கருத்தை மேற்கொண்டு சமுத்திர நாதன் என்ற கடற்படைத் தலைவனைப் போதிய சாதனங் களுடனும் அறிஞர் துணையுடனும் கடலக முழுவதும் சுற்றிப் பார்த்து வரும்படி அனுப்பினான்.

சமுத்திரநாதன் இரண்டு ஆண்டுகள் எங்கும் சென்று தான் கண்டதும் கேட்டதும் அனுபவித்ததும் சந்திரகுப் தனது பேரவையில் எடுத்துரைத்தான். அவன் 1000 கப்பலோட்டிகளுடனும், 1000 வணிகர்களுடனும், 100 கப்பல்களில் ஏறிச் சென்றான்.

"முதன்முதல் நாங்கள் சென்ற நாடு கலிங்கம். அங்கே உலகின் விலைமதிப்பேறிய தந்தங்கள் காணப்பட்டன. கப்பல்கள் இவற்றைச் சுமத்திரா, ஜாவா, பலி, மலாயா, பர்மா முதலிய தொலை நாடுகளுக்குக் கொண்டு சென்றன. தெற்கே இலங்கையிலிருந்தும் பாண்டிநாட்டிலிருந்தும் இங்கே முத்துக்கள் வந்தன. கலிங்க நாட்டினர் கடல் வாணிகத்திலும் கடற்பயணம் செய்து பிறநாடுகளில் குடி யேறுவதிலும் துறை போனவர்கள். கடலின் ஆழத்தில் வளர்ந்து புயற்காலங்களில் வெளிக்கிளம்பும் பலவகை விலங்குகள், மீன்கள், நிலப்பொருள்கள் ஆகியவை பற்றி அவர்கள் எங்களுக்குப் பலவும் விளக்கினார்கள். கலிங்கர் கடலின் (வங்காளவிரிகுடா) நடுவில் உள்ள அந்தமான், நக்கவாரத் தீவுகளைப்பற்றியும் அவற்றில் வாழும் நிர்வாண மான மனிதர் பற்றியும் அவர்களிடமிருந்து நாங்கள் கேள்விப்பட்டோம். கப்பலோட்டிகள் அங்கே சென்று ஆடைகள் கொடுத்தபோது அவர்கள் அதை உடுக்காமல் தலையில் அணிகலனாகக் கட்டியாடினார்களாம்! நாங்கள்

நேரில் சென்று பார்த்த போது இவ்விவரங்கள் சரி யானவையே என்பதை உணர்ந்தோம்.

"கீழ்கோடித் தீவுகளான சுமத்திரா, ஜாவா, மதுரைத் தீவு, மதன் (போர்னியோ), சம்பா (அன்னம்), காம்போ ஜம் (கம்போடியா) ஆகிய இடங்களுக்குக் கப்பல்கள் சென்றன. அவ்விடங்களில் தமிழர்களும் அவர்களுடன் கேரள, சிங்கள, சௌராட்டிர, வங்க, கலிங்க மக்களும் சென்று குடியேறியிருந்தனர். இவ்விடங்களில் வெள் ளீயமும் துத்தநாகமும் வெட்டியெடுக்கப்பட்டன. ஏலம், இலவங்கம் முதலிய நன்மணப் பொருள்கள் மிகுதி. அங் குள்ள ஒரு மரத்தின் பால் இறுகிய பின் எறிந்தால் மேலே வியத்தகு முறையில் துள்ளுகிறது. அப்பொருளா லான பந்துகள் மூன்று இதோ கொண்டுவந்திருக்கிறோம்," என்று சமுத்திரநாதன் காட்டி, ஒன்றை நிலத்தில் எறிந் தான். அது மேன்மாடியளவும் எழும்பி விழுந்து மீண்டும் மீண்டும் விழுந்தெழுந்தது. (இம்மரமே 'இரப்பர்' மரம் என்பது தெளிவு.)

"தாமிரபருணி என்று வழங்கப்படும் நாகத்தீவில் (இலங்கை) அனுராதபுரம் என்ற அழகிய நகரம் உளது. அந்நாட்டரசன் சந்திரகுப்தனுக்கு முத்துமாலைகளும் தந்தங்களும் பரிசளித்தான். தென்னையும் கமுகும் இங்கே ஏராளம். நாங்கள் கண்ட நாடுகளில் மிக்க செழிப்புடைய நாடு அதுவே. அந்நாட்டின் பெரும்பகுதியிலும் குமரிக் கோடியில் பேசப்படும் தமிழே பேசப்படுகிறது.

குமரியண்டை சென்றபின் நாங்கள் தமிழக முழு வதும் சுற்றிப் பார்த்தோம். அத்தமிழகம் மேற்பார் வைக்கு நம் நாட்டையே எல்லா வகையிலும் ஒத்துக் காணப்படுகிறது. ஆனால், சிறிது ஊன்றிப்பார்த்தால், ஒரு தனி உலகமென்றே கூற வேண்டும். அந்நாட்டில்

பாண்டியர், சோழர், கேரள புத்திரர் என்ற மூன்று பேரரசர் உள்ளனர். அவர்கள் ஓயாது போரிட்டாலும் நாட்டில் அமைதி குலைவதில்லை. நம் பகவதி போன்ற குமரி என்ற பெண்தெய்வம், நம் கார்த்திகேயன்போன்ற முருகன், நம் உருத்திரன் போன்ற சிவன் ஆகியவர்களே அந்நாட்டில் சிறப்பாக வணங்கப்படும் தெய்வங்கள். ஆனால், மேலீடாகக் குமரி காளிபோன்றிருப்பினும், காளி போன்று கணவனையுடையவளல்லள்; கன்னித்தெய்வமா யிருக்கிறாள். நம்மிடையே மணமாகாத கார்த்திகேயனைப் போலல்லாமல், அவர்கள் முருகன் வள்ளி என்ற தெய்வத் தின் காதலனாய் உருவளிக்கிறான். நம் உருத்திரனைப் போல அழிவுக் கடவுளாயிராமல், அவர்கள் சிவன் அங்கே ஐந்தொழிலும் நடத்தும் முழு முதற்கடவுளாயிருக் கிறான்.

"ஒழுக்கமுறை கிட்டத்தட்ட நமது மாதிரியேயிருக் கிறது. ஆனால், உட்கிடக்கை முற்றிலும் வேறு. அவர் கள் வகுப்புக்கள் தொழிலையும் வாழ்நிலத்தையும் (திணை) பொறுத்தன; பிறப்பை ஒட்டியனவல்ல. நம் நால்வருண முறை அங்கில்லை. பார்ப்பார், தமிழர், பணிசெய் மக்கள் என்ற பிரிவே உண்டு. அங்கே மணவினைகளும் இல்லை. பெண்ணும் பிள்ளையும் விரும்பி உள்ளம் ஒருப்பட்டு மணந்தபின், உறவினர் ஏற்றுக்கொள்கின்றனர். பெண் கள் அங்கே ஆண்களைப்போலவே எல்லாத் துறைகளிலும் ஈடுபடுகின்றனர். பெண்கள் கவிஞர்களாயும் அரசியர் களாயும் அமைச்சர்களாயும் படைத்தலைவர்களாயும் செய லாற்றுவதுண்டு.

"மேலும் தமிழகமக்கள் கடவுளை வழிபடுபவர்; வேள்வி செய்யார். நம்மிடையே முழுக்க ஆடையணிவது உயர்வு. அவர்களிடையே அதுவே வேலைக்காரர் உடை

யாகும். நம் நாட்டுக் குடியானவரை விட அங்கே பார்ப்பார் என்று கூறப்படும் பிராமணர் கறுப்பாயும் குள்ளமாயும் உள்ளனர். ஆனால், அறிவில் அவர்களுக்கு ஈடும் எடுப்பும் இல்லை என்பதற்கு அந்நாட்டினராகிய நம் சாணக்கியரே சான்றாவார். அவர்கள் பேசும் மொழி தமிழ். மற்ற மொழிகளைப்போல அது நம் தேவமொழியின் திரிபோ, அதன் கலப்போ அன்று; அதனுடன் போட்டியிடத் தயங்காத ஓர் உயர்மொழி. வடநாட்டு மக்கள் மொழிகள் போல அது வெறும்பேச்சு மொழி மட்டுமன்று; அன்றி வேத மொழியைப்போலப் புரோகிதர் மொழியுமன்று. அது கிரேக்கர் மொழி போல இலக்கண இலக்கிய வளமிக்க மொழி ஆகும்.

"மன்னர், இளவரசர் அங்கு மக்களுடன் ஊடாடுகின்றனர். மன்னர் தாமே போர் புரிகின்றனர்; புலவர்களையே துணைக்கொள்ளுகின்றனர். போரில் யானைகள் உண்டாயினும், குதிரையே சிறப்புடையதாகக் கொள்ளப்படுகிறது. அரபிநாட்டுக் குதிரைகள் அங்கே பெரும்பொருள் கொடுத்து வாங்கப்படுகின்றன.

"தமிழகத்தின் மேற்கரையில் தமிழக எல்லைக்கு வடக்கிலுள்ள பகுதியில் கடற்கொள்ளைக்காரர் மிகுதி. அவர்களைத் தெற்கே பரவவொட்டாமல் தமிழரசர் கடற்படை காத்து வருகிறது. கிரேக்க வாணிகம் தென்னாட்டிலேயே மிகுதியாயிருப்பதற்கு இது ஒரு காரணம்.

" தமிழகத்தின் கீழ்க்கரையிலுள்ள கொற்கை, இந்தியாவிலேயே மிகப்பெரிய துறைமுகம். உலகிலுள்ள எல்லா நாட்டுக் கப்பல்களையும் எல்லா நாட்டுமக்களையும் பொருள்களையும் அங்கே காணலாம். கலிங்கர்களை போலப் பாண்டியர்களும் நல்ல கப்பலோட்டிகள். பாண்டி

யர் கடற்படை தென்கடலில் போட்டியற்ற ஆட்சி நடத்து கிறது.

“பாண்டிநாட்டைவிடச் சோழநாட்டில் துறைமுகங் கள் மிகுதி. ஆனால், வாணிகம் அங்கு வெளிநாட்டார் கையிலேயே உள்ளது. சோழநாட்டினர் பாண்டியரினும் கடல் ஆற்றலில் குறைந்தவராயினும், கடற்படையில், அவர்களினும் சிறப்புடையவராய் விளங்குகின்றனர்.

“மச்சிலிப்பட்டணம் ஆந்திரர்களின் துறைமுகம். ஆந்திரநாடு ஆடைகளின் நெசவுக்குப் பேர் போனது.”

இந்நீண்ட பயணத்தில் பல கப்பலோட்டிகளும் வாணிகர்களும் இறந்துவிட்டனர். வெற்றியுடன் மீண்ட ஒவ்வொருவருக்கும் சந்திரகுப்தன் 500 பொன்னும், இறந்தவர் உறவினர்கட்கு 1000 பொன்னும் பரிசாக அளித்தான்.

சிலநாட்கழித்து, ஸெல்யூக்கஸ் தன் மகளைப் பார்த்து வரும்படியும் மருமகனைப் பாராட்டி வாழ்த்தும்படியும் மெகாஸ்தனிஸ் என்ற அறிஞரை அனுப்பினான். தேவ பிராந்தா முற்றிலும் இந்திய மாதாக மாறியது கண்டு அவன் வியப்படைந்தான். இந்தியா பற்றி அவன் ஒரு நூல் எழுத நினைத்தான். அதற்காக அவன் பாடலிபுரத் தில் நெடுநாள் தங்கி, இந்தியாவிலும் சுற்றுப்பயணம் செய்தான். சந்திரகுப்தன் அவைப் புலவரான காத்தி யாயனர் அவனுக்கு இந்தியாவைப்பற்றிய பல செய்திகள் கூறினார். மெகாஸ்தனிஸ் கிரேக்க மொழியில் இந்தியா வைப்பற்றி எழுதிய நூல் ‘இந்திகா’ எனப்பட்டது.

## உக. முடிவுரை

நந்தர்கள் கொடுங்கோலாட்சியின் பயன் சந்திரகுப் தன் ஆட்சியிலும் முற்றிலும் நீங்கவில்லை. பயிர் விளைவு

குறைந்த இடங்களில் மழையும் குறைந்து, ஆங்காங்கு, பஞ்சமேற்பட்டு, மக்கள் பெருவாரியாக மடிந்தனர். பெரு நோய்களும் சேர்ந்து அழிவு செய்யத் தொடங்கின. வாழ்க்கைக் கொடுமை தாங்காமல், ஏழைகள் தங்கள் பெண்டு பிள்ளைகளைச் செல்வர்கட்கு விற்கவும் தலைப் பட்டனர்.

இச்சமயம் பத்திரபாகு, சுருதகேவலி என்ற சமணப் பேரறிஞர் மக்களிடையே பணியாற்றினர். 'பஞ்சமும் வறுமையும் மக்கள் மனமாசின் பலன்; மாசு நீக்கி அரு கன் அறநெறியைக் கைப்பிடியுங்கள்" என அவர்கள் எங்கும் முழங்கினர். அத்துடன் அவர்கள் எல்லாரையும் தென்திசை சென்று தவநெறி பரப்பிப் புத்தறம் செய்ய வும் தூண்டினர். இதற்கான அழைப்புக்கள் அரசன் முதல் ஆண்டி வரை யாவருக்கும் அனுப்பப்பட்டன. சந்திரகுப்தனும் சாணக்கியனும் அவர்கள் முயற்சிக்கு ஆதரவும் ஆசியும் கூறினர். ஆனால், நாட்டில் வாழ்பவரைக் காத்தல் தம் கடன் என்றும், தம் நற்கதி நாடிக்கூடக் கட மையை விடமுடியாதென்றும் அவர்கள் கூறிப் பின்தங்கி விட்டனர். ஆனால் தட்சிண நாட்டை ஆண்ட ஆட்பேரரசர் புதல்வனாகிய மற்றொரு சந்திரகுப்தன் அவர்களுடன் சென்றான். அவர்கள் கன்னட நாட்டில் சிரவணபெல கோளா என்ற இடத்தில் தவமியற்றி அறிவு பரப்பி வந்தனர்.

சாணக்கியன் அறிவுரைமீது சந்திரகுப்தன் தன் படைவீரர்களையும் படைகளுக்கான யானை குதிரை கால் நடை யூர்திகளையும் பஞ்ச நீக்கப் பணியில் ஈடுபடுத்தினான். பஞ்சம் விரைவில் நீங்கி, மீண்டும் வாழ்வு தழைத்தது.

பஞ்சப் பிணியிலிருந்து நாடு விடுதலையடைந்ததற் காகச் சந்திரகுப்தன் வழிபாடு நிகழ்த்த எண்ணினான்.

நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள புண்ணிய இடங்களை நேரில் சுற்றிக் காண்பதன் மூலம் இவ் வழிபாட்டைப் பேரளவில் நடத்தினான். காசி, கயா, அல்லது பிரயாகை, அரித்துவாரம், ராம்பூர்வா, முதலிய பல இடங்களுக்கும் அவன் தன் இரு மனைவியருடனும் சாணக்கியனுடனும் சென்றான். அரித்துவாரத்தில் மலைக்கெவியில் ஒடும் கங்கை மீதுள்ள கயிற்றுப்பாலத்தில் நடந்து செல்லும் பக்திப் பரிசோதனையில் சந்திரகுப்தனும் அவன் இரு மனைவியரும் ஈடுபட்டனர். சாணக்கியன் இச்சோதனையில் பங்கு கொள்ள மறுத்தான்.

கயாவில் பிராமணர், புத்தர், சமணர் ஆகியவர்களிடையே பெருத்த எதிர்ப்புக்கள் இருந்தன. அது ஒரு குடியரசானதால் அரசர் ஆணைமூலம் ஒற்றுமை நிலவ முடியாமல் இருந்தது. பேரரசன் என்ற முறையில் சந்திரகுப்தனிடம் பிராமணர் முறையிட்டனர். சந்திரகுப்தன் அவர்களனைவரையும் அழைத்து, "இந்தியா ஒரு சிறு நாடன்று; ஒரு பெரிய கண்டம்; ஓர் உலகென்றுகூடக் கூறலாம். இங்குப் பல மதங்களும் பல வகுப்புக்களும் இருப்பது இயற்கை. எல்லா இனங்களும் ஒன்றுடன் ஒன்று சகிப்புத்தன்மையுடன் வாழ்ந்தால்தான் இந்தியா வளர்ச்சியடையும். ஆகவே, என் பேரரசுக்குட்பட்ட நாடு எதனிலும் குறுகிய மதவெறி, சாதி வெறிக்கு இடம் தரமாட்டேன். எந்த வகுப்பினர் தனிப்பட ஆதிக்கம் விரும்பினாலும் நான் அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டி வரும்," என்றான்.

சாணக்கியன், "பேரரசன் அச்சத்திற்கு மட்டுமன்று நீங்கள் இணங்க வேண்டுவது; நாட்டு நன்மைக்காக மட்டுங்கூட அன்று. உங்கள் சமயத் தலைவரே உங்களுக்கு ஒழுகிக் காட்டிய ஒழுக்கம் உங்களுக்கு இவ்வகையில்

முன்மாதிரியாயிருக்க வேண்டும். பிராமணர், எல்லாத் தெய்வங்களிலும் தம் தெய்வமே இருப்பதாகக் கொள்கிறூர்கள்; எல்லா உயிர்களிலும் தெய்வத்தின் கூறு இருப்பதாகவும் நம்புகிறூர்கள். புத்ததேவர், மனிதர் அனைவரும் உடன் பிறந்தார் எனக் கொண்டார். மகா வீரர், தாம் உடுத்திருந்த ஒரே ஆடையைத் தம்மிடம் இரவலனுய் வந்த சோமதத்தன் என்ற பிராமணனுக்குக் கொடுத்தார். ஆகவே, சமயத்தின் பேரால் நீங்கள் பிற சமயத்தவரைப் பகைப்பது உங்கள் சமயத்துக்கே மாறுக நடப்பதாகும்," என்று கூறினுன்.

ராம்பூர்வாவில் சந்திரகுப்தன் ஒரு பெரிய தூபி கட்டினுன். அதன் உச்சியில் எருது உருவம் அமைக்கப் பட்டது. அதன் ஒரு புறம் புத்தரின் தரும சக்கரமும் புத்தசமயத்தவர் சாதகக் கதைகளும், மற்றொருபுறம் ஜின தீர்த்தங்கரர் உருக்களும், வரலாறுகளும், மூன்ருவது புறம் இராமாயணமும் மகாபாரதமும் வரையப்பட்டன. நான்காவது புறம் பொதுவில் விடப்பட்டது.

மக்கள், பெருமக்கள் வழக்குகள் யாவற்றிலும் சநதிரகுப்தன் கண்டிப்பாகவும் நடுவுநிலையில் வழுவாமலும் இருந்தான். சாணக்கியன் தானும் அச்சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத் தன்னவர், பிறர் என்ற வேறுபாடு காட்டாதிருந்தான். தானே, தன் குடும்பத்தினரோ, தன் பணியினுல் ஊதியம் பெறுவதைக்கூட அவன் எதிர்த்து வந்தான். சாணக்கியன் மருமகனுக்குச் சந்திரகுப்தன் கொடுத்துவந்த சம்பளத்தை இக்காரணத்தினுல் அவன் நிறுத்திவைத்தான். அது தன் உறவினர் என்பதற்காகக் கொடுக்கப்படவில்லை என்ற தீர்ப்புப் பெற்ற பின்பே ஊதியம் கொடுக்கப்பட்டது.

ஆட்சியேற்று இரண்டு ஆண்டுகள் சென்ற பின் சந்திரகுப்தனுக்குத் தேவபிராந்தாவினிடமாக ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்குப் பிந்துசாரன் என்று பெயரிடப்பட்டது. தேவபிராந்தாவும் சாந்தாவும் போட்டியிட்டு அவனை வளர்த்தனர். சாணக்கியன் அவனுக்குக் கல்வி கற்பித்து, அதன் முடிவில் தன் ஒப்பற்ற அரசியல், பொருளியல் கருத்துக்களையும் போதித்தான். தட்சசிலையில் தொடங்கப்பட்ட அவனது அர்த்த சாஸ்திரம் முடிவடைய இது உதவிற்று. இளவரசன் பிந்துசாரன் போதனையில் பகுத்தறிவுவாதமாகிய உலோகாயதம், அதன் ஆராய்ச்சி அல்லது தருக்க தத்துவமான அன்வீக்ஷிகீ (தருக்க நூல்), தண்டநீதி (அரசன் கடமைகள்) ஆகியவை தலைமையான இடம் பெற்றன. வருணாசிரம தருமத்தின் உயர்வு, பிராமணர்களைப் பாது காக்கும் கடமை ஆகியவையும் வலியுறுத்தப்பட்டன. கல்வி முடிவுற்றதும் அவன் தட்சசிலையில் அரசர் ஆட் பெயராக்கப்பட்டான். பிந்துசாரன் தட்சசிலையில் பணியாற்றிய போது தட்சசிலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவொன்றில் சாணக்கியன் சொற்பொழிவாற்றினான். அதில் அவன் பல்கலைக்கழக மாணவர் பொறுப்பைப் பற்றிப் பேசுகையில், இந்தியாவெங்கும் கல்வியை எல்லா வகுப்பினர்க்கும் பரப்பி ஆரிய தருமத்தையும் நிலைநிறுத்துவதே அவர்கள் வாழ்க்கைக் குறிக்கோளாயிருக்க வேண்டும் என்று வற்புறுத்தினான்.

கி. மு. 302-ல் பிந்துசாரனுக்கு இளவரசுப்பட்டம் அளிக்கப்பட்டது. அவனுக்கு இச்சமயம் கலிங்க அரசர் புதல்வி லஜ்ஜாவதியும், உச்சயினி இளவரசி சூரியகாந்தாவும் மனைவியராய் இருந்தனர். ஆனால், விரைவில் சுபத்திராங்கி என்ற பிராமண நங்கையின் காதலில் ஈடுபட்டு அவளையும் அவன் மணந்துகொண்டான்.

சுபத்திராங்கி, சம்பாவிலுள்ள தேவ சர்மன் என்ற பிராமணன் மகள். குழந்தைப் பருவத்திலேயே அவள் பேரரசியாவாள் என்று சோதிடர் கூறியிருந்தனர். அதற்கேற்ப அவள் அழகரசியாய் வளர்ந்தாள். 'ஆருடம் அரைவாசி, முயற்சி முழுவாசி' என்பதை அறிந்த தேவ சர்மன் அவளுக்கு ஆடல் பாடல்கள் கற்பித்து அத்துறையில் பணியிலமரும்படி அவளை அரண்மனைக்கு இட்டுச் சென்றான். ஆனால், அவள் அழகைக் கண்ட இளவரசியர் இருவரும் அவள்மீது பொறாமை கொண்டு, அவளை அப்புறப்படுத்தினர். ஆனால், தேவசர்மன் அப்போதும் மனந் தளரவில்லை. அவளுக்கு மகளிரின் முடியொப்பனைக்கலை கற்பித்து, முடி ஒப்பனைக்காரியாக இளவரசியரிடம் பணியிலமர்வித்தான். இப்பணியில் நன்கு தொண்டாற்றி அவள் இளவரசியர் இருவர் முழு அன்புக்கும் பாத்திரமானாள். இந்நிலையில் அவர்கள் இருவரும் ஒரு விருந்துக்குப் பேரரசன் அரண்மனைக்குச் சென்றிருந்த சமயம், இளவரசன் அவளைக் கண்டு, ஆராக் காதல்கொண்டு அளவளாவினான். அவளும் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள எண்ணித் தன் நெடுநாள் காதலையும் சோதிடர் கூற்றையும் இளவரசியர் தடை செய்ததையும் இளவரசனுக்கு எடுத்துரைத்தாள். இளவரசியர் திரும்பி வருமுன் அவர்கள் களவு மணம் நிறைவேறிற்று. அவளை இளவரசன் மனைவியாக ஏற்றுலன்றி இளவரசன் தம்மீது கொண்ட கோபத்தையும் வெறுப்பையும் மாற்றமுடியாது என்று கண்ட இளவரசியர், அவளை ஏற்றதுடன், அவள் மூலமே இளவரசன் அன்புக்கு மண்டியிட்டனர்.

சுபத்திராங்கியின் கருவிலேயே பிந்துசாரனுக்குச் சுமனு என்ற புதல்வியும் அசோகவர்த்தனன் என்ற புதல்வனும் பிறந்தனர். (பிற்காலத்தில் இந்தியாமட்டுமன்றிக்

கீழ்த்திசை உலகமுழுவதுமே புத்தர் அருள் நெறியைப் பரப்பிய பெரும்புகழ்ப் பேரரசன் இந்த அசோகவர்த்தனனே. இதே சமயம் சாணக்கியனுக்கும் ராதாகுப்தன் என்ற பெயரன் பிறந்தான்.

இந்தியாவெங்கும் ஆட்சி செலுத்தி, வெற்றிப் புகழ் நாட்டிய சந்திரகுப்தன் மீதும் முதுமை என்னும் பகைவன் தன் ஆதிக்கத்தை மெல்லப் பரப்பினுன். பிணியும் உடன் சேர்ந்து, அவன் தலையணையும் படுக்கையுமாய்க் கிடந்தான். சாணக்கியன் மருத்துவரும், அவனைக் கண்ணிமைகள் போலக் காத்தனர். மனைவியர் உடனிருந்து உதவியும், தனித்திருந்து வருந்தியும், கண்கனிந்தழுதும் வந்தனர். அரசியல் செய்திகள் எவற்றையும் அவனிடம் தெரிவிக்கவேண்டா என்று கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒருநாள், மனைவியர் கையில் ஒரு கற்றை கொடுக்கப்பட்டு, அவன் பெயரால் தேவ பிராந்தா கையொப்பமிட்டு வாங்குவதைச் சந்திரகுப்தன் பலகணிவழியே கண்டான். உடனே அது யாதென அவன் வினவினுன். மருத்துவர் கட்டுப்பாடு பற்றி அவனுக்கு விளக்கப்பட்டது. உடனே அவன் கோபம் கொண்டு, “இறக்கும்வரை நான் அரசனுகவே நடத்தப்படவேண்டும். பிணியும் மருத்துவரும் என்னைக் கோழையாகவும், நடைப் பிணமாகவும் ஆக்குவதா!” என்று இரைந்தான். இம்மனக் கொதிப்பினுல் நோய் வளர்ந்துவிடுமென்று கவலையுற்ற மருத்துவர், அதை அவனிடம் வாசித்துக் காட்டுமாறு பணித்தனர். அதில் சுவர்ணகிரி ஆட்பெயரான புருஷதத்தன், சந்திரகுப்தனிடம் சமணயோகியான பத்திரபாகு அடிகளின் இறுதி நாள் பற்றி எழுதியிருந்தான். சல்லேகனம் அல்லது சாகும்வரை உண்ணு நோன்பு நோற்று அவர் இறைவனடி சேர்ந்த

வரலாறு அதில் உருக்கமாக வரையப்பட்டிருந்தது. அவர் பிரிவுற்ற குகையின் வாயிலிலேயே அவர் சீடரான ராஜ வைசிய சந்திரகுப்த முனீந்திரரும் அந்நோன்பிருந்து பிரிந்தார்.

சந்திரகுப்தன், பத்திரபாகுவின் பெயரால் அக்குகையைப் பத்திரபாகு குகை என்றும், சந்திரகுப்த முனீந்திரன் பெயரால் அம்மலையைச் சந்திரகிரி என்றும் வழங்குமாறும், அவற்றைப் பேணுமாறும் உத்தரவிட்டான். பின்பு தன் முடிவு மிகவும் அண்டிவிட்டது கண்டு 1000 பிராமணர்களுக்கும், 10,000 ஏழைகட்கும் உணவளிக்கும்படி கட்டளையிட்டான். அத்துடன் தன் கண் மூடுமுன்பே பிந்துசாரனுக்கு முடிசூட்டிவிடும்படியும் அவன் கூறினான். முடியணிந்த பிந்துசாரனை ஆரத் தழுவிய பின், அவன் ஆவி பிரிவுற்றது. பிரியுமுன் சாணக்கியனை நோக்கி, அரசனும் "அரசும் அமைச்சும் உன் கையில் ஒப்படைத்தேன். நீண்டநாள் இவ்வரசைக் காத்து நலம் புரிக!" என்று கூறினான்.

அரசியல் உலகில் பேரரசனாய் ஆண்ட சந்திரகுப்தன், அறவுலகிலும் தன் ஆண்மை நாட்டிப் புகழுலகில் தன் கொடி நாட்டச் சென்றான்.

## எமது புதிய வெளியீடுகள்

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | மறைந்த நாகரிகங்கள் .... | 1 | 4 | 0 |
| 2. | திருவள்ளுவர் .... | 0 | 8 | 0 |
| 3. | பெண்களும் சமூகமும் .... | 0 | 12 | 0 |
| 4. | அகத்தியர் .... | 0 | 8 | 0 |
| 5. | ஆதி மனிதன் (Pre-historic man) .... | 0 | 8 | 0 |
| 6. | திருக்குறள்: மூலமும் ஆங்கில மொழி பெயர்ப்பும் (அழகிய கையடக்கப் பதிப்பு) .... | 1 | 8 | 0 |
| 7. | திருக்குறள்: தெள்ளிய பதவுரை, கருத்துரை, அருஞ்சொல் அகர வரிசைகளுடன்; சிறுவரும் எளிதிற் படித்து உணரத் தக்க அமைவுடையது .... | 4 | 0 | 0 |
| 8. | ஷை உயர்ந்த பதிப்பு .... | 5 | 0 | 0 |
| 9. | நமது தாய் மொழி .... | 0 | 8 | 0 |
| 10. | நூலகங்கள் .... | 0 | 8 | 0 |
| 11. | ஆதி உயிர்கள் .... | 0 | 10 | 0 |
| 12. | தென்னாலிராமன் .... | 1 | 4 | 0 |
| 13. | கவியரசியார் .... | 1 | 0 | 0 |
| 14. | நீதிநெறி விளக்கம் .... | 0 | 10 | 0 |
| 15. | பாரத நாட்டுப் பஞ்சரத்தினங்கள் .... | 0 | 10 | 0 |
| 16. | செஸ்டர் பீல்டு—கடிதங்கள் .... | 0 | 14 | 0 |
| 17. | ஹோரேஸ் வால்போல் கடிதங்கள் .... | 0 | 14 | 0 |
| 18. | டேவிட் லிவிங்ஸ்டன் .... | 0 | 10 | 0 |
| 19. | பாஸனின் இரட்டை நாடகங்கள் .... | 1 | 8 | 0 |
| | ,, (ஆராய்ச்சியுடன் கூடியது) .... | 2 | 8 | 0 |
| 20. | சமதர்ம விளக்கம் .... | 2 | 4 | 0 |
| 21. | இனியவை நாற்பது .... | 0 | 12 | 0 |
| 22. | அற்புத உலகம் .... | 1 | 8 | 0 |
| 23. | காந்திப் பெரியார் .... | 0 | 8 | 0 |
| 24. | ஜீவஜந்துக்களின் பழக்க ஒழுக்கங்கள் | (அச்சில்) | | |
| 25. | வாழ்க்கையும், மனோதத்துவமும் | ,, | | |